REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2024 ஓகஸ்ட் 23 வெள்ளிக்கிழமை

# தினகரன்

THINAKARAN 92 தினகரன்

வரு. 92 இல. 201 | Friday 23, August, 2024 | 28பக்கங்கள் | 50/-

## அரச ஊழியர்களுக்கு 10,000 ரூபாவை வழங்க வேண்டாம்

### தேர்தல் ஆணைக்குழு தெரிவிப்பு

அரச ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த கடந்த ஜுலை 08, 09 ஆகிய இரு தினங்களில் கடமைக்கு சமுகமளித்திருந்த நிறைவேற்றுத்தர சேவைக்கு உட்படாத அரச ஊழியர்களுக்காக இம் மாதம் சம்பளத்துடன்

08

# 03 IMF உடனான ஒப்பந்தத்தை மாற்ற முயற்சித்தால் நாட்டுக்கு சிக்கல்



## ஜனாதிபதி ரணிலுக்கு யாழ். மாவட்ட SJB அமைப்பாளர் ஸ்டான்லி ஆதரவு



ஐக்கிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் விக்டர் ஸ்டான்லி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குவதாகவும் ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதியின் வெற்றியே நாட்டின் வெற்றியாகும் என தெரிவித்தார். கொழும்பு பிளவர் வீதியிலுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் அலுவலகத்தில் (21) ஜனாதிபதியை சந்தித்து தனது ஆதரவை வெளிப்படுத்திய போதே, அவர் இவ்வாறுதெரிவித்தார்.

அத்துடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் யாழ். மாவட்ட கிறிஸ்தவ சமய விவகார இணைப்பாளராகவும் விக்டர் ஸ்டான்லி நியமிக்கப்பட்டார்.

## 2025 முதல் அரச ஊழியர்களின் குறைந்தபட்ச சம்பளம் ரூ. 55,000

### குறைந்தபட்ச அடிப்படை சம்பளம் ரூ. 30,000ஆக அதிகரிப்பு

றிஸ்வான் சேகு முகைதீன்

2025 ஜனவரி முதல் அனைத்து அரச ஊழியர்களினதும் அடிப்படை சம்பளம் அதிகரிக்கப்படவுள்ளதாக, அரச சேவை சம்பள முரண்பாடுகள் தொடர்பில் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் தலைவர் உதய செனவிரத்ன தெரிவித்தார்.

அதற்கமைய தற்போது அரச ஊழியர்களுக்கான குறைந்தபட்ச அடிப்படை சம்பளமான ரூ. 24,000 ஐ ரூ. 30,000 ஆக அதிகரிக்க தீர்மானித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

### வாழ்க்கை செலவு கொடுப்பனவு ரூ. 25,000ஆக உயரும்

நேற்றையதினம் (22) ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே

08



## இலவச வீசா வசதியின் கீழ்

# 35 நாடுகளின் பிரஜைகளுக்கு இலங்கை வருவதற்கு வாய்ப்பு



### ஒக்டோபர் 01 முதல் 06 மாதங்களுக்கு அமுல்

பிரிட்டன், அமெரிக்கா, கனடா, ஜெர்மனி, ஆஸ்திரேலியா, சவூதி அரேபியா, சீனா, இந்தியா, ரஷ்யா, தென்கொரியா, சுவிட்ஸர்லாந்து, ஜப்பான் உள்ளிட்ட 35 நாடுகளின் பிரஜைகளுக்கு வீசா இல்லாமல் இலங்கை வருவதற்கு அனுமதி வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அமைச்சரவைக்கு சமர்ப்பித்த இந்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ளது. நெதர்லாந்து, பெல்ஜியம், ஸ்பெயின், டென்மார்க், போலாந்து, கசகஸ்தான், நேபாளம், ஐக்கிய அரபு எமிரேட்ஸ், இந்தோனேசியா, ரஷ்யா, தாய்லாந்து, மலேசியா, பிரான்ஸ், இத்தாலி, இஸ்ரேல், பெலாரஸ், ஈரான், சுவீடன், கட்டார், ஓமான், பஹ்ரைன் மற்றும் நியூஸிலாந்து ஆ கி ய நாடுகளுக்கு இதே வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர், அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அர சா ங்க தகவல் திணைக்களத்தில் நே ற்று (22) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பிலேயே அமைச்சர் பந்துல குணவர்தன இதனைக் குறிப்பிட்டார். எதிர்வரும் ஒக்டோபர் முதலாம் திகதி முதல் 06 மாத காலத்துக்கு 30 நாட்களுக்கு செல்லுபடியாகும் வகையில் இலவச வீசாக்களை வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

சுற்றுலா வீசாக்களை இலவசமாக வழங்குவது தொடர்பாக பிற நாடுகள் பின்பற்றும்

08



## 03 தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியில் புதிய அரசியலமைப்பு சட்டம் உருவாக்கப்படும்

### உள்ளூராட்சி தேர்தலை பிற்போட்டமைக்கு வருந்தவில்லை

# மக்களின் வாக்குரிமை போல வாழ்வுரிமையை பாதுகாத்தேன்

### இல்லாவிடில் பொருளாதார சுமை மேலும் அதிகரித்திருக்கும்

**புதிய மக்கள் முன்னணி கட்சியின் தேசிய மாநாட்டில் ஜனாதிபதி**

உள்ளூராட்சி சபைத் தேர்தல் பிற்போடப்பட்டமை மக்களின் அடிப்படை உரிமைகளை மீறும் செயலென சுட்டிக்காட்டப் பட்டுள்ள போதிலும், அந்த தருணத்தில் மக்களின் வாழ்வுரிமையை பாதுகாப்பதற்காக அர்ப்பணித்ததன் காரணமாக தேர்தலை நடத்த முடியாமற் போனதற்கு வருந்தவில்லையென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மக்களின் வாக்களிக்கும் உரிமையைப் பாதுகாப்பதற்கும் வாழ்வுரிமையைப் பாதுகாப்பதற்கும் தான் அர்ப்பணிப்புடன் இருப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

மஹரகம இளைஞர் சேவை மன்ற கேட்போர் கூடத்தில் இன்று (22) பிற்பகல் நடைபெற்ற புதிய மக்கள் முன்னணி கட்சியின் தேசிய மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

எரிவாயு, மருந்து, உணவு மற்றும் எரிபொருள் இன்றி மக்கள் தமது அன்றாட வாழ்க்கையை நடத்த முடியாதென சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, கடந்த இரண்டு வருடங்களில் மக்களின் அந்த அடிப்படை உரிமைகளை பாதுகாப்பதற்காக தன்னை அர்ப்பணித்துள்ளதாகவும், தேவைப்பட்டால் எதிர்காலத்திலும் தாம் அர்ப்பணிப்பதாகவும் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் பொதுத் தேர்தலை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும், அதற்குத் தேவையான பணம் ஏற்கனவே

08

### ஜனாதிபதி – இ.தொ.கா.

## புரிந்துணர்வு ஒப்பந்தம் 28ஆம் திகதி கைச்சாத்து

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சி எதிர்வரும் 28ஆம் திகதி புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவுள்ளதாக இ.தொ.கா. தலைவர் செந்தில் தொண்டமான் நேற்று தெரிவித்துள்ளார்.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் மலையக பெருந்தோட்ட மக்கள் மாத்திரமின்றி இலங்கை வாழ் தமிழர்களின் நலன்புரி திட்டங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் இ.தொ.கா. தலைவர் செந்தில் தொண்டமான் மேலும் தெரிவித்துள்ளார்.

### தபால்மூல வாக்களிப்பு

## வாக்காளர் அட்டை விநியோகம் 26ஆம் திகதி முதல் ஆரம்பம்



தபால் மூலம் வாக்களிப்பதற்கான வாக்காளர் அட்டை விநியோகம் எதிர்வரும் 26ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதாக தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக பிரதி தபால் மாஅதிபர் ராஜித ரணசிங்க தெரிவித்த போது, ஒவ்வொரு பிரதேசத்திலும் உள்ள பிரதி தபால் அதிபர்கள் மற்றும் பிராந்திய தபால் அதிபர்கள், அந்தந்த மாவட்ட தேர்தல் அதிகாரியுடன் கலந்துரையாடி எதிர்வரும் 26ஆம் திகதி

08

### முன்கூட்டியே சிலர் வெற்றி பெற்றாலும்

## செப்டெம்பர் 21ஆம் திகதி ரணில் சந்தேகமின்றி வெற்றியீட்டுவார்



ஜனாதிபதி தேர்தலில் சிலர் முன்கூட்டியே வெற்றி பெற்றாலும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சந்தேகத்துக்கிடமின்றி செப்டெம்பர் 21ஆம் திகதி வெற்றியீட்டுவாரென தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

தொழில் இராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள

08

### வீற்றருக்கு 25 ரூபா வீதம்

## கடற்றொழிலாளருக்கு டீசல், மண்ணெண்ணெய் மானியம்

### அமைச்சரவையில் அங்கீகாரம்



டீசலை எரிபொருளாக பயன்படுத்தும் கடற்றொழில் படகுகளின் உரிமையாளர்களுக்கு 06 மாத காலத்துக்கு டீசல் லீற்றருக்கு 25 ரூபா மானியம் வழங்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அதேபோன்று மண்ணெண்ணெய்யை எரிபொருளாக பயன்படுத்தும் கடற்றொழிலாளர்களுக்கு

08

### கடந்த ஆண்டு நடத்த திட்டமிட்ட

## உள்ளூராட்சிமன்ற தேர்தலை கூடிய விரைவில் நடத்தவும்

### தேர்தல் ஆணைக்குழுவுக்கு உயர் நீதிமன்று உத்தரவு



உள்ளூராட்சிமன்ற தேர்தலை முடிந்தவரையில் கூடிய விரைவில் நடத்துமாறு தேர்தல் ஆணைக்குழுவுக்கு உயர் நீதிமன்றம் நேற்று (22) உத்தரவு பிறப்பித்துள்ளது.

திட்டமிட்டபடி கடந்தாண்டு மார்ச் 09ஆம் திகதி நடைபெறவிருந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தல் நடத்தப்படவில்லை.

08



# அமைச்சரவை முடிவுகள்



**'செயற்கை நுண்ணறிவுடனான மாணவச் சமூகம்' கல்வி முறைமையை அறிமுகப்படுத்தல்**

எதிர்கால உலகலாவிய போக்குகளை உருவாக்கக்கூடிய பிரஜைகளை உருவாக்குவதும், பொருளாதார அபிவிருத்தியில் பயனுள்ள வகையில் அவர்களின் பங்களிப்பைப் பெற்றுக்கொள்வதும் போன்ற நோக்கங்களை அடைவதற்கு இயலுமாகும் வகையில் பாடசாலை மாணவர்களுக்கு செயற்கை நுண்ணறிவு தொடர்பான கற்கை நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு வாய்ப்புக்கள் வழங்குவது பொருத்தமானது என அடையாளம் காணப்பட்டுள்ளது. அதற்கமைய, அதன் ஆரம்பப் படிமுறையாக தெரிவுசெய்யப்பட்ட 100 பாடசாலைகளில் 6ஆம் தரம் முதல் 9ஆம் தரம் வரைக்கும் கல்விபயிலும் மாணவர்களின் பங்களிப்புடன் 'செயற்கை நுண்ணறிவுடனான மாணவச் சமூகம்' முன்னோடி கருத்திட்டமாக செயற்படுத்துவதற்கும் குறித்த கருத்திட்டத்தின் பெறுபேறுகளின் அடிப்படையில் எதிர்வரும் ஆண்டுகளில் இவ்வேலைத்திட்டத்தை ஏனைய பாடசாலைகளில் விரிவாக்கம் செய்வதற்கும் தொழிநுட்ப அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவனத்துக்கான புதிய கட்டடத்தை நிர்மாணித்தல்**

சுயநிதியீட்டல் நிறுவனமாக இயங்கி வரும் தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவனத்தின் தலைமை அலுவலகம் வித்யா மாவத்தை, கொழும்பு 07 இல் அமைந்துள்ளதுடன் போதியளவு இடவசதியின்மையால் அதற்கு அண்மையில் அமைந்துள்ள 2 தனியார் கட்டடங்களை குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொண்டு தற்போது அண்ணளவாக 3000 மாணவர்களுக்கு பாடநெறி கற்கைகள் நடத்தப்பட்டும் வருகின்றன. அதிகமான மாணவர்களுக்கு குறித்த நிறுவனத்தில் கற்கை வசதிகளை வழங்குவதற்கும் மற்றும் புதிய கற்கைநெறிகளை அறிமுகப்படுத்துவதற்கும் இயலுமை கிட்டும் வகையில் அந்நிறுவனத்திற்கான புதிய தொழிநுட்பத்துடன் கூடிய கட்டடத்தொகுதியொன்றை நிர்மாணிப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. குறித்த காணித் துண்டில் புதிய கட்டிடத்தொகுதியை அமைப்பதற்கும் கல்வி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் வருகை முனைய கட்டடத்துக்கு முன்னால் வெற்றுக்காணியில் (லொபி) சுற்றுலா சேவை கருமபீடத்தை நடைமுறைப்படுத்தல்

வரையறுக்கப்பட்ட விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியால் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வருகை முனைய கட்டடத்துக்கு முன்னால் உள்ள வெற்றுக்காணியில் (லொபி) ஆறு (6) சுற்றுலா சேவை கருமபீடங்களை இயக்குவதற்காக விலைமனுக் கோரப்பட்டுள்ளது. குறிப்பிட்டுள்ள விலைமனுக்களை சமர்ப்பித்துள்ள விலைமனுதாரர்களுக்கு 3 ஆண்டுகளுக்கு அப்பிரதேசத்தை பயன்படுத்துவதற்காக அனுமதி வழங்குவதற்காக துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**ஸ்ரீ லங்கன் விமான சேவையின் பயணிகள் மின்னுயர்த்தி சேவைகளுக்கான ஒப்பந்தங்களை வழங்குதல்**

சவுதி அரேபியா தமாம், ஜித்தாஹ் மற்றும் ரியாத் போன்ற விமான நிலையங்களிலும் சீனாவின் குவென்ங்சோ விமான நிலையத்திலும் பயணிகள் மின்னுயர்த்தியை இயக்குவதற்கான ஒப்பந்தம் முடிவடையவிருப்பதால் ஒப்பந்த காலத்தை 3 ஆண்டுகளுக்கு நடைமுறைப்படுத்த துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**கண்டி பல்நோக்கு போக்குவரத்து முனையத்திற்கு நுழைவுப்பாதை புனரமைப்பு மற்றும் மேம்படுத்தும் ஒப்பந்தம்**

கண்டி பல்நோக்கு போக்குவரத்து முனைய அபிவிருத்தி கருத்திட்டத்தின் கீழ் கண்டி பல்நோக்கு போக்குவரத்து முனையத்திற்கு உள்நுழைவு வழி புனரமைப்பு மற்றும் மேம்படுத்தும் ஒப்பந்தத்தை வழங்குவதற்காக உள்நாட்டு போட்டி விலைமனுக் கோரலுக்கான நடவடிக்கையைக் கடைப்பிடித்து விலைமனுக் கோரப்பட்டுள்ளது. அதற்காக 10 விலைமனுக்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. குறித்த ஒப்பந்தத்தை வழங்குவதற்காக போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**தேயிலை உற்பத்தியை அதிகரிப்பதற்காக தேயிலை செய்கையாளர்களுக்கு உர மானியம் வழங்குதல்**

கடந்த காலப்பகுதியில் உரத்தின் விலை அதிகரிப்பால் மற்றும் இரசாயன உரத் தடை போன்ற காரணிகளால் தேயிலைச் செய்கையில் உரப்பாவனை குறைந்தது. இதுவே தேயிலை உற்பத்தி வீழ்ச்சியடைவதற்கான காரணம் எனக் கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய அரச உரக் கம்பனியான ஸ்டேட் பேர்டிலைசர் கம்பனி லிமிட்டட் மூலம் 50 கிலோகிராம் இரசாயன உரப்பையை ரூபா 4000/ எனும் மானிய விலைக்கு தேயிலை பயிர் செய்கையாளர்களுக்கு வழங்குவதற்காக விவசாய மற்றும் பெருந்தோட்ட அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**2024/25 பெரும்போகத்திற்கான வயல் காணிகளில் நெற்செய்கை விவசாயிகளுக்கு உர மானியம் வழங்கல்**

2024/25 பெரும்போகத்திற்கான வயல் காணிகளில் நெற்செய்கைக்கும் மற்றும் ஏனைய பயிர்ச்செய்கை விவசாயிகளுக்கும் உர மானியத்தை வழங்குவதன் மூலம் நாட்டில் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும், விளைச்சலை அதிகரிப்பதற்கும் இயலுமை கிடைக்கின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, 2024/25 பெரும் போகத்திற்கு அரச உரக் கம்பனியான ஸ்டேட் பேர்டிலைசர் கம்பனி லிமிட்டட் மற்றும் தனியார் துறையினர் மூலம் உரத்தை இறக்குமதி செய்து விவசாயிகளுக்குப் போட்டி விலையில் விற்பனை செய்வதற்கும், நெற்செய்கை மற்றும் ஏனைய பயிர்ச்செய்கைகளில் பயிரிடப்படும் உயர்ந்தபட்சம் இரண்டு ஹெக்ரெயார்களுக்கு ஹெக்ரெயார் ஒன்றுக்கு ரூபா 15,000/- - வீதம் நிதியுதவியை கமநல சேவைகள் திணைக்களத்தின் மூலம் வழங்குவதற்கும் என விவசாய மற்றும் பெருந் தோட்டத்துறை அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய வெளியிடப்பட்டுள்ள கட்டளைகளை பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பித்தல்**

'இலங்கை – சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் இறக்குமதி வரி விலக்களிக்கப்படும் வேலைத்திட்டத்தின் இயைபுமுறைக் குறியீட்டுக்குரிய துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்களின் அபிவிருத்தி அறவீடுகளை நீக்குவதற்காக அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. குறித்த கட்டளைகளை பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்கு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**கட்டணமின்றி சுற்றுலா வீசா வழங்குவதற்கான நிபுணர் குழு அறிக்கை**

கட்டணமின்றி சுற்றுலா வீசா வழங்குவதற்கு ஏற்புடைய ஏனைய நாடுகளால் கடைப்பிடிக்கப்படுகின்ற முறைகள் தொடர்பான விடயங்களை ஆராய்ந்து விதந்தரைகளுடன் கூடிய அறிக்கையை சமர்ப்பிப்பதற்காக விசேட நிபுணத்துவ குழுவை நியமிப்பதற்காக 2024.04.25 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. குறித்த விதந்துரைகளின் அடிப்படையில் 2024.10.01 ஆம் திகதி தொடக்கம் 06 மாதங்களுக்கு அடையாளங் காணப்பட்டுள்ள 35 நாடுகளுக்கு, 30 நாட்களுக்கு செல்லுபடியாகும் வகையில் கட்டணமின்றி சுற்றுலா வீசா வழங்குவதற்காகவும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளது.

***இலங்கை வங்கியால் வெளியிடப்பட்டுள்ள கடன் பத்திரம் (Letter of Credit) மூலம் மர்பன் வகை மசகு எண்ணெய்க் கப்பல்கள் 03 இனைக்கொள்வனவு செய்வதற்கான நீண்டகால ஒப்பந்தம்***

இலங்கை வங்கியால் வெளியிடப்பட்டுள்ள கடன் பத்திரத்தின் மூலம் 30 நாட்களில் செலுத்தும் அடிப்படையில் 2024.11.15 தொடக்கம் 2025.04.14 வரையான காலப்பகுதியில் மர்பன் வகை மசகு எண்ணெய்த் தொகைக் கப்பல்கள் 03 இனைக் கொள்வனவு செய்வதற்காக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள விநியோகத்தர்களிடம் விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளன. அதற்கமைய, மர்பன் வகை மசகு எண்ணெய்த் தொகைக் கப்பல்கள் 03 இனைக் கொள்வனவு செய்வதற்கான ஒப்பந்தத்தை சிங்கப்பூர் விட்டோல் ஏசியா தனியார் கம்பனிக்கு வழங்குவதற்காக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**2024.11.15 தொடக்கம் 2025.04.14 வரையான காலப்பகுதியில் மர்பன் வகை மசகு எண்ணெய்த் தொகைக் கப்பல்கள் 03 இனைக் கொள்வனவு செய்வதற்கான நீண்டகால ஒப்பந்தம்**

2024.11.15 தொடக்கம் 2025.04.14 வரையான காலப்பகுதியில் 100 - வீதம் களஞ்சியத் தாங்கிகளிலிருந்து விநியோகிக்கும் போதான செலுத்தல் முறையின் கீழ் (100% ExStorage Modality) மர்பன் வகை மசகு எண்ணெய்த் தொகைக் கப்பல்கள் 03 இன் பெறுகைக்காக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள விநியோகத்தர்களிடம் விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளன. அதற்காக, சிங்கப்பூர் விட்டோல் ஏசியா நிறுவனம் மட்டுமே விலைமனுவைச் சமர்ப்பித்துள்ளது. குறித்த கம்பனிக்கு ஒப்பந்தத்தை வழங்குவதற்காக அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள விசேட நிரந்தரப் பெறுகைக் குழு விதந்துரைத்துள்ளது. அதற்கிணங்க, குறித்த ஒப்பந்தத்தை வழங்குவதற்காக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

***CHEC PORT CITY COLOMBO (PRIVATE) LIMITED கருத்திட்டத்தை அமுல்படுத்தும் காலப்பகுதியை நீடித்தல்***

CHEC PORT CITY COLOMBO (PRIVATE) LIMITED இற்கு செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் குறித்த விடுவிப்புக்களுடன் கூடிய கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான காலப்பகுதியை 2024.09.07 தொடக்கம் 2027.06.30 ஆம் திகதி வரை நீடிப்பதற்காக 2024.08.05 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க, 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய கட்டளையொன்று 2396/60 ஆம் இலக்க 2024.08.09 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ளது. குறித்த ஒழுங்கு விதியை பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்கு முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சராக கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**பொருளாதார நெருக்கடியால் மீன்பிடித் துறைக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்களைக் குறைப்பதற்காக மீன்பிடித்துறையை மீள் நிலைக்குக் கொண்டுவரும் வேலைத்திட்டம்**

கொவிட் 19 தொற்று நிலைமையாலும், அதன் பின்னர் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியாலும், எரிபொருள் விலையேற்றத்தாலும் இலங்கையில் மீன்பிடித் துறைக்கு மிகவும் மோசமான பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன. மீன்பிடிக் கலங்களின் உரிமையாளர்கள் கலங்களை இயக்குவதற்கான எரிபொருளுக்காக அதிகளவான செயற்பாட்டு மூலதனத்தைச் செலவிட வேண்டியுள்ளதுடன், அதனால், மீன்பிடிக் கலங்கள் மீன்பிடியில் ஈடுபடுவது குறைவடைந்துள்ளது.

மீன்பிடித் துறையில் பயன்படுத்தப்படும் எரிபொருளுக்கு நிவாரணங்களை வழங்குவதன் மூலம் இத்தொழிற்றுறையை துரிதமாக மீள்நிலைக்குக் கொண்டுவர வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது.

அதற்கமைய, 06 மாத காலப்பகுதிக்கு எரிபொருளாக டீசலைப் பயன்படுத்துகின்ற மீன்பிடிக் கலங்களின் உரிமையாளர்களுக்கு ஒரு லீற்றர் டீசலுக்கு 25/- ரூபாவும், மற்றும் மண்ணெய் எரிபொருளைப் பயன்படுத்துகின்ற கடற்றொழிலாளர்களுக்கு நாளொன்றுக்கு 15 லீற்றர் வீதம் மாதமொன்றுக்கு உயர்ந்தபட்சம் 25 நாட்களுக்கு மண்ணெய் லீற்றர் ஒன்றுக்கு 25/ - ரூபா வீதம் 'மீன்பிடித் தொழிலை மீள்நிலைக்குக் கொண்டுவரும் கொடுப்பனவை' வழங்குவதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி மற்றும் கடற்றொழில் அமைச்சர் ஆகியோர் இணைந்து சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

தமிழ், ஆங்கில மொழிபெயர்ப்புக்களுக்கிடையே ஏதேனும் வேறுபாடு காணப்படும் பட்சத்தில் சிங்கள மொழியே மூலமாக அமையும்.

# ஹம்பாந்தோட்டை வலய தமிழ்மொழி பாடசாலைகளுக்கான இலவச கருத்தரங்கு

## பெருந்திரளான மாணவர்கள் பங்கேற்பு



**ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்**

தென் மாகாண கல்வித் திணைக்களத்தின் தமிழ் மொழிப் பிரிவின் ஆரம்ப கல்வி அலகினால் தென் மாகாண தமிழ் மொழிப் பாடசாலைகளில் தரம் ஐந்தில் கல்வி பயிலும் மாணவர்களுக்காக இலவசமாக நடாத்திவரும் வழிகாட்டல் பயிற்சிக் கருத்தரங்கு தொடரின், ஹம்பாந்தோட்டை வலய தமிழ் மொழிப் பாடசாலைகளுக்கான இலவச கருத்தரங்கு ஹம்பாந்தோட்டை ஸாஹிரா தேசிய பாடசாலையின் பிரதான மண்டபத்தில் (20) நடைபெற்றது.

தென் மாகாண கல்வித் திணைக்களத்தின் தமிழ் மொழிப் பாடசாலைகளுக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம். எ. எம். மஷாயிரின் வழிகாட்டல் மற்றும் ஆலோசனையில் இந்த இலவச வழிகாட்டல் பயிற்சிக் கருத்தரங்கு மாணவர்களின் நலன் கருதி நடாத்தப்பட்டு வருகிறது. இதில் கிரிந்தை முஸ்லிம் மகாவித்தியாலயம், வீரவிலை எம். ஆர்.தாஸிம் கனிஷ்ட வித்தியாலயம், பதகிரிய முஸ்லிம் கனிஷ்ட வித்தியாலயம், சிரிபோபுர நூரி ஆரம்ப வித்தியாலயம், ஹம்பாந்தோட்டை இக்ரா ஆரம்ப வித்தியாலயம் மற்றும் அம்பலாந்தோட்டை அல் அக்பர் முஸ்லிம் மகாவித்தியாலயம் ஆகியவற்றிலிருந்து பெருந்திரளான மாணவர்கள் கலந்துகொண்டனர்.

இதனை ஹம்பாந்தோட்டை வலய ஆரம்ப கல்வி ஆசிரிய ஆலோசகர் டி. எப். சுஹூட் நடாத்தினார்.



அநு./ திறப்பனை, தெமட்டேகம முஸ்லிம் வித்தியாலய மாணவ, மாணவிகள் சுற்றுலா மேற்கொண்டு நேற்று (22) பாடசாலை அதிபர் வை.ஏ. கரீம் தலைமையில் கொழும்பு வந்தனர். இதன்போது இவர்கள் லேக்ஹவுஸ் நிறுவனத்துக்கும் வருகை தந்து பார்வையிட்ட பின்னர் கூட்டாக எடுத்துக்கொண்ட படம். பள்ளிவாசல் நிர்வாக சபைத்தலைவர் ரமீஸ், பாடசாலை அபி. சங்க செயலாளர் இர்சாத் மௌலவியும் காணப்படுகின்றார்.

# புதையல் தோண்டிய குற்றச்சாட்டில் சந்தேகத்தில் நால்வர் கைது

**அநுராதபுரம் மேற்கு தினகரன் , கல்நேவ தினகரன் விசேட நிருபர்கள்**

கல்நேவ பொலிஸ் பகுதிக்குட்பட்ட அரிசி ஆலை ஒன்றிற்கு அருகாமையில் புதையல் தோண்டிய குற்றச்சாட்டில் நால்வரை சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கல்நேவ பகுதியில் அமைந்துள்ள அரிசி ஆலைக்கு அருகாமையில் சிலர் புதையல் தோண்டுவதாக பொலிசாருக்கு கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றிற்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்களை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் கல்நேவ விஹாரை வீதி , கல்நேவ பஹலவத்த வீதி , கல்நேவ நிதிகும்ஹாயாய ஆகிய பகுதியைச் சேர்ந்த 39 வயதுடைய மூவரும் 55 வயதுடைய நபரொருவருமே கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிசார் சுற்றி வளைப்பை மேற்கொண்டிருந்த போதும் சந்தேக நபர்கள் அகழ்வு பணியில் ஈடுபட்டிருந்ததாக தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து புதையல் தோண்டுவதற்கு பயன்படுத்திய பூஜை பொருட்கள் உள்ளிட்ட பொருட்களை பொலிசார் கைப்பற்றியுள்ளனர். குறித்த சம்பவம் தொடர்பில் கல்நேவ பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# IMF உடனான ஒப்பந்தத்தை மாற்ற முயற்சித்தால் நாட்டுக்கு சிக்கல்

## எதிர்காலத்தில் கிடைக்கவுள்ள நிதியை இழக்க நேரிடும்; நாடு மீண்டும் வங்குரோத்து நிலைக்கு செல்லும்

சர்வதேச நாணய நிதியத்துடன் அரசாங்கம் செய்துள்ள உடன்படிக்கை தொடர்பில் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்த தயாரென சில ஜனாதிபதி வேட்பாளர்கள் மேடைகளில் கூறிய போதிலும், அவ்வாறு செய்வதால் நாட்டுக்கு கிடைக்க வேண்டிய பணத்தை இழக்க நேரிடுமென்றும் மீண்டும் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடையும் நிலை ஏற்படுமென்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். பத்தரமுல்லை வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டலில் நேற்று முன்தினம் (21) நடைபெற்ற அபிவிருத்தி மற்றும் நிர்மாணத்துறை நிபுணர்களுடனான சந்திப்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'தேசத்தின் எதிர்காலத்தைக் கட்டியெழுப்புதல்' என்ற தொனிப்பொருளில் ஏற்பாடு செய்யப்பட்ட இச்சந்திப்பில் பேராசிரியர் சிறிமல் அபேரத்ன சிறப்புரையாற்றினார்.

இங்கு உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஒரு நாடாக முன்னோக்கி செல்வதற்கு நிலையான பொருளாதாரம் அவசியம் எனவும் சர்வதேச நாணய நிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி, சீனா எக்சிம்

**அபிவிருத்தி மற்றும் நிர்மாணத்துறை நிபுணர்களுடனான சந்திப்பில் ஜனாதிபதி எச்சரிக்கை**



வங்கி மற்றும் 17 நாடுகளுடன் ஒப்பந்த அடிப்படையில் பெற்றுக்கொள்ளக்கூடிய அனைத்து சலுகைகளையும் அரசாங்கம் இதுவரையில் பெற்றுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதில் நிர்மாணம் மற்றும் அபிவிருத்தித்துறைக்கு முக்கிய பங்கு உள்ளதாக குறிப்பிட்ட ஜனாதிபதி, கடந்த பொருளாதார நெருக்கடியை அடுத்து வெளிநாட்டு நிதியுதவி திட்டங்கள் நிறுத்தப்பட்டதால் நிர்மாணத்துறை கடுமையாக பாதிக்கப்பட்டிருந்தாலும், வங்கி சலுகைகள் வழங்குதல், நிர்மாணப் பணிகளுக்காக ஒப்பந்ததாரர்களுக்கு செலுத்த வேண்டிய கொடுப்பனவுகளை செலுத்துவது போன்ற இத்துறையில் பணிபுரிவோர் மீது சுமத்தப்பட்டிருந்த சுமையை குறைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்ததையும் நினைவுகூர்ந்தார்.

தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ள திட்டங்கள் மீள ஆரம்பிக்கப்பட்டு, உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் இருந்து புதிய முதலீடுகள் ஈர்க்கப்படும் போது நிர்மாணத்துறையும் வளர்ச்சியடையும் என ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

08

# ஐந்து புதிய இராஜதந்திரிகள் ஜனாதிபதியிடம் நற்சான்றிதழ் கையளிப்பு



இலங்கைக்கு புதிதாக நியமனம் பெற்ற மூன்று தூதுவர்களும் இரண்டு உயர்ஸ்தானிகர்களும் ஜனாதிபதியிடம் நற்சான்றிதழ்களை கையளித்துள்ளனர்.

இலங்கைக்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள மூன்று தூதுவர்கள் மற்றும் இரண்டு உயர்ஸ்தானிகர்கள் நேற்று முன்தினம் (21) கொழும்பு, கோட்டை ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் தமது நற்சான்றிதழ்களை கையளித்துள்ளனர்.

நற்சான்றிதழ்களை கையளித்த இராஜதந்திரிகளின் பட்டியல் பின்வருமாறு:

1. தூதுவர் லிதுவேனியா குடியரசு டயனா மெக்கிவிசீன் (Diana Mickeviciene)
2. தூதுவர் வியட்நாம் சோசலிச குடியரசு டிரின் தி டாம் (Trinh Thi Tam)
3. தூதுவர் மியன்மார் மார்லர் தன் டைக் (Marlar Than Htaik)
4. உயர்ஸ்தானிகர் – சிம்பாவே பெர்சி பெட்சன் சந்தா (Percy Patson Chanda)
5. உயர்ஸ்தானிகர் – பங்களாதேஷ் அண்டலிப் எலியாஸ் (Andalib Elias)

08

அக்கரைப்பற்று நீர்ப்பூங்காவில்

# தேசிய காங்கிரஸின் தேசிய மாநாடு ஜனாதிபதி மற்றும் பிரதமர் பங்கேற்பு



முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம்.அதாஉல்லா தலைமையிலான தேசிய காங்கிரஸின் ஏற்பாட்டில் தேசிய மாநாடு அக்கரைப்பற்று நீர்ப்பூங்காவில் இன்று பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெறும்.

இதில் பிரதம அதிதியாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் விசேட அதிதியாக பிரதமர் தினேஷ் குணவர்தனவும் கலந்துகொள்வர்.

# மத்திய வங்கி ஆளுநரின் ஆற்றலுக்கு A தர கௌரவிப்பு

## குளோபல் ஃபைனான்ஸ் நிறுவனம் அறிவிப்பு

குளோபல் ஃபைனான்ஸ் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படும் மத்திய வங்கி ஆளுநர்களின் தர வரிசை தொடர்பான வருடாந்த அறிக்கைக்கு அமைவாக இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க 2024ஆம் ஆண்டுக்கான A




தரத்துடன் கௌரவிக்கப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

08

2024 இன் முதல் 6 மாதங்களில்

# நாட்டின் ஏற்றுமதி வருமானம் 9 பில். அமெரிக்க டொலர்



இந்த வருடத்தின் கடந்த 6 மாதங்களில் 9 பில்லியன் அமெரிக்க டொலர் ஏற்றுமதி வருமானம் கிடைத்துள்ளதாக முதலீட்டு மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

கடந்த 6 மாதங்களில் இலங்கை சுமார் 800 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான முதலீடுகளுக்கான உடன்படிக்கைகளை ஏற்படுத்திக்கொண்டிருப்பதாகவும் இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

'இரண்டு வருட முன்னேற்றமும் எதிர்காலமும்' என்ற தலைப்பில் நேற்று முன்தினம் (21) ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்ட போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

மேலும் தெரிவித்த இராஜாங்க அமைச்சர்,

"இலங்கை முதலீட்டு சபை 15 முதலீட்டு வலயங்களுக்கான வசதிகளை வழங்குவதுடன், அம்முதலீட்டு வலயங்களில் தற்போது 1,575 நிறுவனங்கள் செயற்பாட்டு பணிகளை முன்னெடுத்துள்ளன.

இதில் 500,000 க்கும் மேற்பட்டோர் பணிபுரிகின்றனர். தற்போதைய அரசாங்கத்தின் புதிய முதலீட்டு திட்டத்தின் கீழ் 7 புதிய முதலீட்டு வலயங்களை நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது.

ஆனால் கடந்த 6 மாதங்களில் முதலீட்டு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி ஏற்கனவே 800 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானம் கிடைத்துள்ளது. அதன்போது 35 முதலீட்டு திட்டங்களுக்கான பேச்சுவார்த்தைகள் முடிவடைந்து ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின" என்றார்.

# நாட்டை மீட்டெடுக்க தரவுகளை மையப்படுத்திய பயணம் அவசியம்

## ஐ.ம.ச. தலைமைத்துவம் வழங்கும்



நாடு சிக்கி இருக்கின்ற பொறிக்குள்ளிருந்து மீட்டெடுப்பதற்கு தரவுகளை மையப்படுத்திய பயணத்தை முன்னெடுக்க வேண்டுமென எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

கொழும்பு கோல்பேஸ் ஹோட்டலில் நேற்று முன்தினம் (21) மாலை நடைபெற்ற இளம் தொழிற்றுறையினர் சங்க மாநாட்டில் பிரதான பேச்சாளராக பங்கேற்று உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் உரையாற்றிய அவர்,

"கடன், தொழிற்றுறையில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி, நாட்டின் பொருளாதாரம், சிறிய மற்றும் நடுத்தர வர்த்தக துறையென ஒவ்வொரு துறையும் பொறிக்குள் சிக்கி இருக்கிறது. கைக்குழந்தைகள், சிறுவர்கள் மற்றும் தாய்மாரின் உரிமைகள் மீறப்படுகின்றன.

52 வீதமாக வாழ்கின்ற பெண்கள் வீடுகளிலும் வீதிகளிலும் வேலைத்தளங்களிலும் அழுத்தங்களுக்கும் வன்முறைகளுக்கும் உள்ளாகியுள்ளனர்.

இளைஞர்கள் நாட்டை விட்டு வெளியேறுவது கல்வியாளர்கள், புத்திஜீவிகள் ஆகியோரின் கைவிடுதல்களுக்கு மத்தியில் இந்த பிரச்சினைகளுக்கு வழமை போன்று தீர்வு காண முடியாது.

08

தினகரன்
THINAKARAN
තිනකරන්

# 92

வருடங்களுக்கு முன்

## தினகரன்

இன்று 23 ஓகஸ்ட் 1932


மந்திரி சபைக்கு குடியேற்ற நாட்டு மந்திரி விடை
வரவு செலவுத் திட்ட ஆலோசனைக்கு மறுப்பு
மொத்தப் பென்ஷன் பிரச்னை
சென்ற வார முடிவில் ஏற்பட்ட நெருக்கடியான அரசியல் நிலைமை

### மந்திரி சபைக்கு குடியேற்ற நாட்டு மந்திரி விடை

வரவு செலவுத் திட்ட ஆலோசனைக்கு மறுப்பு

### மொத்தப் பென்ஷன் பிரச்சினை

சென்ற வார முடிவில் ஏற்பட்ட நெருக்கடியான அரசியல் நிலைமை

வரவு செலவுத் திட்டத்தை நிறைவேற்றுவது சம்பந்தமாக, மந்திரி சபையார் குடியேற்ற நாட்டு மந்திரிக்கு அனுப்பிய விண்ணபத்திற்குப் பதில் கிடைத்திருப்பதாகத் தெரிய வருகிறது.

குறித்த விஷயத்தைப்பற்றி கலோனியல் ஆபிஸின் தீர்மானம் சென்ற வார இறுதியில் பிரதம காரியதரிசியால் மந்திரிமார்களுக்கு தெரியப்படுத்தப்பட்டது என்று அறியக்கிடக்கின்றது.

(அனுசரணை: லேக் ஹவுஸ் ஊடக நூலகம்)

# தொடரும் 'யுக்திய' சுற்றிவளைப்பு 24 மணிநேரத்தில் 626 பேர் கைது

நாடளாவிய ரீதியில் கடந்த 24 மணிநேரத்துக்குள் மேற்கொள்ளப்பட்ட யுக்திய சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது போதைப்பொருள் குற்றம் தொடர்பில் 626 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

08

தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியில்

# புதிய அரசியலமைப்பு சட்டம் உருவாக்கப்படும்



நாட்டிலுள்ள அனைத்து இனங்களும் நல்லிணக்கத்துடன் வாழக்கூடிய வகையிலான புதிய அரசியலமைப்பு சட்டமொன்று தமது அரசாங்கத்தில் உருவாக்கப்படுமென தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

அக்குறணையில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற ஜனாதிபதி தேர்தல் பிரசார கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர்,

"நாட்டின் கடந்தகால வரலாற்றில் ஒன்றுக்கொன்று எதிராக அரசாங்கங்களே மாறி மாறி ஆட்சி அமைத்திருந்தன. 2005 மற்றும் 2010ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற தேர்தல் பிரசாரங்களின் போது வடக்கு மாகாணத்திலுள்ள தமிழ் மக்களுக்கு எதிரான கோஷங்களையே பிரதானமாக முன்வைத்தனர்.

வடக்குக்கு எதிரான அரசாங்கமாகவே தெற்கு அரசியல்வாதிகள் செயற்பட்டனர். அவ்வாறான அரசாங்கமே கடந்த காலத்தில் ஆட்சி பீடங்கள் ஏறியிருந்தன. 2019ஆம் ஆண்டு முஸ்லிம்களுக்கு எதிரான அரசாங்கம் அமைக்கப்பட்டது.

அளுத்கம, திகன ஆகிய சம்பவங்கள் அரங்கேற்றப்பட்டன. இதன் பின்னர் ஏப்ரல் 21ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நடத்தப்பட்டது. இந்த காலத்தில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரம் முழுக்க முழுக்க முஸ்லிம் மக்களுக்கு எதிரானதாகவே அமைந்தது.

08

விமான நிலையங்களினூடாக

# நாட்டுக்குள் Mpox பரவலை தடுக்க சுகாதார அமைச்சில் முறையான திட்டம்

## தனிமைப்படுத்தி சிகிச்சை அளிக்கவும் ஏற்பாடு




விமான நிலையங்களினூடாக நாட்டுக்குள் நுழையக்கூடிய Mpox குரங்கம்மை நோயாளிகளை அடையாளம் காணும் வகையில் நோய்த்தடுப்பு கட்டமைப்பு முறையை சுகாதார அமைச்சு வலுப்படுத்தியுள்ளது.

குரங்கம்மை நோயாளிகள் பதிவாகினால் அவர்களை தனிமைப்படுத்தி சிகிச்சை அளிப்பதற்கான வசதி கொழும்பில் உள்ள தொற்றுநோய் நிறுவகத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் செயலாளர் டொக்டர் பாலித மஹிபால வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பு மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தில் Mpox நோயாளிகளை கண்டறிவதற்கு ஆய்வுகூட வசதிகள் உள்ளன. கடந்த 20ஆம் திகதி சுகாதார அமைச்சில் நடைபெற்ற நிபுணர் குழுக் கூட்டத்தில் இந்நோய்க்கான சிறந்த தயார்நிலை மற்றும் பதிலளிப்பு தொடர்பில் தேவையான வழிகாட்டல்களும் வழங்கப்பட்டன.

இது தொடர்பான அறிவுறுத்தல்கள் அடங்கிய சுற்றறிக்கை கடிதம் அனைத்து சுகாதார நிறுவனங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

ஆபிரிக்க பிராந்தியத்தில் முக்கியமாக மத்திய மற்றும் மேற்கு ஆபிரிக்க பிராந்தியத்திலுள்ள நாடுகளில் குறிப்பாக கொங்கோவில் இந்நோயின் அதிக தாக்கம் மற்றும் தீவிரத்தன்மை காரணமாக உலக சுகாதார அமைப்பால் ஓகஸ்ட் 14/2024 அன்று ஒழுங்கமைக்கப்பட்ட சர்வதேச அழைப்பு விடுக்கப்பட்டது.

08

தினகரன்
THINAKARAN தினகரன்

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் ஆவணி மாதம் 06ஆம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1446 ஸபர் பிறை 17

## குறள் தரும் சிந்தனை



எனைத்துணையர் ஆயினும் என்னாம் தினைத்துணையும்
தேரான் பிறனில் புகல்

பிழை புரிகிறோம் என்பதைத் தினையளவுகூடச் சிந்தித்துப் பாராமல், பிறன் மனைவியிடம் விருப்பம் கொள்வது, எத்துணைப் பெருமையுடையவரையும் மதிப்பிழக்கச் செய்துவிடும்.

# நாட்டில் டெங்கு மீண்டும் தீவிரமடையும் அறிகுறி

நாட்டில் கடந்த சில தினங்களாக மழையுடன் கூடிய சீரற்ற காலநிலை நிலவுகின்றது. இதன் விளைவாக பல பிரதேசங்களின் தாழ்நிலப் பிரதேசங்களில் மழைநீர் தேங்கி வெள்ளநிலையும் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் நாட்டின் சில பிரதேசங்களில் நுளம்புகளின் பெருக்கத்தை அவதானிக்கக்கூடியதாகவும் உள்ளது. இந்நாட்டில் மழைக் காலநிலையுடன் சேர்த்து நுளம்பு பெருக்கம் ஏற்படுவது அண்மைக்காலமாக வழக்கமாகியுள்ளது. மழையுடன் சேர்த்து பெருக்கமடைவது பெரும்பாலும் டெங்கு வைரஸைக் காவிப் பரப்பும் நுளம்புகளாகவே இருக்கும்.

கடந்த காலங்களில் மழையுடன் சேர்த்து நாட்டில் டெங்கு நோய்க்கு உள்ளானவர்களாக அடையாளம் காணப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்பட்டது. அதற்கு டெங்கு வைரஸைக் காவிப்பரப்பும் நுளம்புகளின் பெருக்கமே காரணமாக அமைந்திருந்தது.

பொதுவாக டெங்கு நுளம்புகள் தெளிந்த மழைநீர் தேங்கும் இடங்களில் முட்டையிட்டு பல்கிப் பெருகும் பண்பைக் கொண்டுள்ளன. இந் நுளம்புகளின் பெருக்கத்திற்கு அதிக நீர் தேவைப்படாது. மாறாக சொற்பளவு நீர் போதுமானது.

அந்த வகையில் வீட்டுச் சூழலில் தேங்கிக் காணப்படும் பொலித்தீன் உறைகள், பொலித்தீன், கைவிடப்பட்ட சிரட்டை, டயர், யோக்கட் கப்கள், உடைந்த மட்பாண்டங்கள், கைவிடப்பட்ட பிளாஸ்ரிக் பொருட்கள் உட்பட மலர்ச்சாடிகள் போன்றவற்றில் மழைக் காலத்தில் மழைநீர் தேங்கலாம். அது டெங்கு நுளம்புகள் முட்டையிட்டுப் பல்கிப் பெருக வாய்ப்பாக அமையும். இந்நுளம்புகள் தான் டெங்கு வைரஸை காவிப் பரப்புகின்றன.

மனிதனுக்கு நேரடியாகத் தொற்றும் பண்பையோ சக்தியையோ டெங்கு வைரஸ் கொண்டதாக இல்லை. அவ்வைரஸ் மனிதனுக்குள் கடத்தப்படுவதற்கான ஒரு காவியாகவே நுளம்புகள் செயற்படுகின்றன. அதிலும் எல்லா நுளம்புகளும் டெங்கு வைரஸின் காவியாக செயற்படுவதில்லை. தமது காவியாக எல்லா இன நுளம்புகளையும் டெங்கு வைர ஸ் எடுத்துக் கொள்வதுமில்லை. நுளம்புகளி ல் பல இனங்கள் உள்ளன. அவற்றில் ஈடிஸ் எஜிப்டைய் என்ற இன நுளம்புகளையே இவ்வைரஸ்கள் தம் காவியாகப் பயன்படுத்திக் கொள்கின்றன.

இவ்வாறு காவிப்பரப்படும் இவ்வைரஸ் மனிதனுக்கு தொற்றியதும் பல நோய் அறிகுறிகள் வெளிப்படும். அவற்றில் கடுமையான காய்ச்சல், தீவிர தலைவலி, கண்களின் பின்புறத்தில் வலி, எழும்புகள் மற்றும் தசைகளில் வலி, மூட்டு வலி, குமட்டல், வாந்தி போன்றவானவை குறிப்பிடத்தக்கவையாக இருக்கும்.

டெங்கு காய்ச்சல் ஆரம்பத்தில் சாதாரண நோய் நிலையைக் கொண்டிருந்தாலும் அது உயிராபத்தை ஏற்படுத்தக்கூடிய கட்டங்களை தன்னகத்தே கொண்டுள்ளது. அதனால் தற்போதைய சூழலில் இரண்டொரு நாட்களுக்கு மேல் கடும் காய்ச்சல் காணப்பட்டால் தகுதியான மருத்துவரை அணுகி மருத்துவ சிகிச்சை பெற்றுக்கொள்ள வேண்டும். குறிப்பாக குருதிப் பரிசோதனை செய்து உரிய சிகிச்சை பெற்றுக்கொள்வதே சிறந்தது.

தற்போதைய சூழலில் காய்ச்சல் உள்ளிட்ட அறிகுறிகள் குறித்து கவனயீனமாகவும் அசிரத்தையுடனும் நடந்து கொண்டால் இக்காய்ச்சல் உள்ளிட்ட அறிகுறிகளுக்கான நோய்க்காரணி தீவிரமடைந்து டெங்கு குருதிப்பெருக்கு, டெங்கு அதிர்ச்சி நிலை போன்ற கட்டங்கள் கூட ஏற்படலாம்.

அதனால் டெங்கு வைரஸ் குறித்து கூடுதல் கவனம் செலுத்த வேண்டிய காலம் இது. டெங்கு காய்ச்சலை முழுமையாகத் தவிர்த்துக் கொள்ளவும் முடியும். இக்காய்ச்சலுக்கு உள்ளானால் உரிய சிகிச்சையை ஆரம்ப கட்டத்திலேயே பெற்றுக் கொள்ளும் போது நோயை முழுமையாக குணப்படுத்திக் கொள்ளலாம்.

இந்நாட்டில் இவ்வருடத்தின் ஜனவரி முதல் இம் மாதம் 20 ஆம் திகதி வரையும் 35 ஆயிரத்து 756 பேர் டெங்கு நோய்க்கு உள்ளானவர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களில் பெரும் பகுதியினர், அதாவது 14 ஆயிரத்து 448 பேர் மேல் மாகாணத்தில் பதிவாகியுள்ளனர். அதிலும் 8 ஆயிரத்து 599 பேர் கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாவர். அத்தோடு இம்மாதத்தில் மாத்திரம் 2,630 பேர் இந்நோய்க்கு உள்ளானவர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதன் காரணத்தினால் டெங்கு வைரஸைக் காவிப்பரப்பும் நுளம்பு முட்டையிட்டு பல்கிப் பெருக முடியாத படி சுற்றாடலை சுத்தமாகவும் உலர் நிலையிலும் வைத்துக்கொள்வதில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். இதன் நிமித்தம் சுற்றாடலில் மழைநீர் தேங்கக்கூடிய வகையில் தேங்கிக் கிடக்கும் திண்மக் கழிவுப் பொருட்களை முறையாகவும் தொடராகவும் அப்புறப்படுத்த வேண்டும். அப்போது டெங்கு வைரஸ் பரப்பப்பட வாய்ப்பு இராது.

அதேநேரம் காய்ச்சலுடன் கூடிய நோயறிகுறிகள் காணப்படுமாயின் கவனயீனமாகவோ அசிரத்தையுடனோ நடந்து கொள்ளாது ஆரம்பத்திலேயே தகுதியான மருத்துவரை அணுகி சிகிச்சை பெற்றுக்கொள்ள வேண்டும். அப்போது இந்நோயை முழுமையாகக் குணப்படுத்திக் கொள்ள முடியும். இவ்வாறு முற்றிலும் தவிர்த்துக்கொள்ளக்கூடியதே டெங்கு.

editor.tkn@lakehouse.lk

# நாட்டின் பொருளாதார வீழ்ச்சி நீங்கியதையடுத்து கிழக்குக்கு படையெடுக்கும் சுற்றுலாப் பயணிகள்

எமது நாட்டில் ஏற்பட்டிருந்த பாரிய பொருளாதார வீழ்ச்சியிலிருந்து நாடு குறுகிய காலத்தில் மீட்கப்பட்டு துரித கதியில் அபிவிருத்தி அடைந்ததைத் தொடர்ந்து கிழக்கு மாகாணத்தின் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களிலுள்ள சுற்றுலா மையங்கள் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு உல்லாசப் பிரயாணிகளால் நிரம்பி களைகட்டுகின்றன.



நாடு தற்போது மீண்டும் இயல்புநிலைக்கு திரும்பியுள்ளதாலும் சர்வதேச ரீதியில் இலங்கையைப் பற்றி நல்லபிப்பிராயம் நிகழ்வதாலும் வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளின் வருகை என்றுமில்லாதவாறு தற்போது அதிகரித்துள்ளது.

2019 ஆண்டு நிகழ்ந்த ஈஸ்டர் பயங்கரவாதத் தாக்குதல், அதனைத் தொடர்ந்து உலகையே ஆட்டிப் படைத்த கொவிட் 19 தொற்று காரணமாக உல்லாசப் பியாணிகளின் வருகையில் தளர்வு ஏற்பட்டதனால் உல்லாசப் பிரயாணிகளை மையமாகக் கொண்டு ஹோட்டல்களை நிர்வகித்து வந்த பலர் தமது தொழிலை இழந்து பாரிய பொருளாதார கஷ்டங்களுக்கு உள்ளாகி வந்ததுடன் பல இளைஞர், யுவதிகள் தொழில் வாய்ப்பையும் இழந்திருந்தனர்.



திருகோணமலை மாவட்டத்தில் நிலாவெளி கடற்கரை, மார்பிள் பீச், கன்னியா வெந்நீர் ஊற்று, திருக்கோணஸ்வரர் ஆலயம் போன்றவற்றுக்கும், மட்டக்களப்பு மாவட்டத்தில் பாசிக்குடா கடற்கரை, கோட்டை போன்றவற்றிற்கும், அம்பாறை மாவட்டத்தில் பொத்துவில், உல்லை, அறுகம்பை கடற்கரை,குமுண தேசிய வனப்பகுதிக்கும் அதிகளவில் உல்லாசப் பிரயாணிகள் செல்கின்றனர்.

உலகிலுள்ள கடற்பரப்புகளில் இயற்கையாக அமைந்த குடா பொத்துவில் அறுகம்பை கடல் பிரதேசத்தில் அமைந்துள்ளதாலும் சர்வதேச கடலலை சறுக்கு விளையாட்டுக்கு பிரபல்யம் பெற்றுள்ளதாலும் இக்கடற்கரை பிரதேசத்தை உல்லாசப் பிரயாணிகள் பெரிதும் விரும்புகின்றனர். அங்கு தற்போது வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் அதிகம் வருகை தந்துள்ளனர்.

எம்.ஐ.எம்.அஸ்ஹர்
(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

# பெண்கள், குழந்தைகள் மீதான பாலியல் கொடுமைகளைத் தடுக்கும் நடவடிக்கை

## அநுராதபுரத்தில் உயர்மட்ட கலந்துரையாடல்

பாலியல் ரீதியிலான வன்கொடுமைகளைத் தடுப்பது தொடர்பில் அநுராதபுரம் அரசாங்க மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் உத்தியோகத்தர்களுடனான விசேட கலந்துரையாடல் ஒன்று அண்மையில் அநுராதபுரம் மாவட்ட செயலகத்தில் மாவட்ட செயலாளர் ரஞ்சித் விமலசூரிய தலைமையில் நடைபெற்றது.

பெண்கள், குழந்தைகள் விவகார அமைச்சு தற்பொழுது பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் அடிப்படையிலான வன்முறையைத் தடுக்க முறையான திட்டத்தைத் தயாரித்துள்ளது. இதன்படி, ஐக்கிய நாடுகளின் மக்கள் தொகை நிதியத்துடன் இணைந்து 2016ஆம் ஆண்டு முதல், பாதிக்கப்பட்டவர்கள் அடையாளம் காணப்பட்டு உரிய சேவைகளுக்கு பரிந்துரைக்கப்படுகின்றனர். இது பற்றிய முன் ஆயத்தமாக பல்வேறு துறைகளைச் சேர்ந்த அதிகாரிகளை ஒருங்கிணைத்து பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுப்பதற்கான முறையான பொறிமுறையைத் தயாரிப்பதே நடைபெற்ற நிகழ்ச்சியின் முக்கிய நோக்கமாகும்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த அநுராதபுரம் மாவட்ட செயலாளர் ரஞ்சித் விமலசூரிய, இதற்குரிய திட்டங்கள் தற்பொழுது தயாரிக்கப்பட்டு வருவதாகவும், அதனை உரிய முறையில் நடைமுறைப்படுத்துவதற்கு அனைவரும் உறுதியாக இருக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

மாவட்ட அரசாங்க அதிபர் என்ற வகையில் இவ்வாறான வேலைத்திட்டங்களுக்கு தனது பூரண ஆதரவை வழங்குவதாகவும் அவர் தெரிவித்தார்.

குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை ஊடகங்கள் மூலம் பரவலாக விளம்பரப்படுத்துவதை விடவும், வன்முறையில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக எடுக்கப்படும் சட்ட நடவடிக்கைகள் மற்றும் தண்டனைகள் குறித்து பரப்புரை செய்ய வேண்டும் என்றும் மாவட்ட செயலாளர் வலியுறுத்தினார்.

ஐக்கிய நாடுகளின் மக்கள் தொகை நிதியத்தின் ஒருங்கிணைப்பாளர் திருமதி உதேனி தெவரப்பெரும குறிப்பிடும்போது, தனிமையில் பணிபுரியும் போது அதிகாரிகளால் ஏற்படும் துஷ்பிரயோகங்களை தடுப்பதும், துஷ்பிரயோகத்திற்கு ஆளானவர்களை அடையாளம் கண்டு அவர்களுக்கு உரிய தீர்வுகளை வழங்குவதும் கடினமானது எனத் தெரிவித்த அவர், இதற்குரிய நிரந்தர தீர்வை பெற்றுக் கொடுக்க வேண்டும் எனக் குறிப்பிட்டார்.





அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி எல்.ஏ. திருமதி ரோஷனா பாலன், வைத்தியசாலையின் வைத்தியர் ஐ.பி. திருமதி கௌபாதா, சட்ட உதவி ஆணையத்தின் அநுராதபுரம் மாவட்ட பிரதி உதவிப் பணிப்பாளர் சட்டத்தரணி திருமதி ஜீவகுமாரி ரணசிங்க, கெக்கிராவ பொலிஸ் நிலைய சிறுவர் மற்றும் பெண்கள் பணியக நிலைய பொறுப்பதிகாரி திருமதி எல்.எம்.எம்.சாந்தனி, அநுராதபுரம் மாவட்ட நீதிமன்ற நீதித்துறை குடும்ப ஆலோசனை உத்தியோகத்தர் டி.எம்.ஏ.எல். திஸாநாயக்க, வடமத்திய மாகாண சமூக சீர்திருத்த திணைக்களத்தின் சிரேஷ்ட சமூக சீர்திருத்த அதிகாரி கே.எம்.சுமதிபால, மகளிர் உதவி நிறுவனத்தின் அநுராதபுரம் மாவட்ட பொறுப்பதிகாரி ஆர்.ஜி.எஸ். குமாரி ஹேரத், மாவட்ட வனிதா அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆர்.எம்.என்.கே. ரத்நாயக்க, அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி எல்.ஏ. ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.

அநுராதபுரம் மாவட்டத்தில் பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளில் சுமார் 80% பாலியல் வன்முறைகளே என சட்ட வைத்திய அதிகாரி திருமதி ரொஷானா பாலன் இங்கு தெரிவித்தார்.

அநுராதபுரம் மேலதிக மாவட்ட செயலாளர் திருமதி ஷமிலா விக்கிரமாராச்சி, பெண்கள் சிறுவர் விவகார மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் உதவிப் பணிப்பாளர் (அபிவிருத்தி) ருவனி எஸ். கருணாதிலக உட்பட பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.

ஏ.ஆர்.எம்.ரபியுதீன்
திறப்பனை தினகரன் நிருபர்

# கொரோனா போன்று காற்றின் மூலம் பரவுமா குரங்கு அம்மை?

மங்கி பொக்ஸ் எனப்படும் குரங்கு அ ம்மை குறித்த தகவல்கள் உலகெங்கும் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. பல்வேறு நாடுகளுக்கும் இந்த குரங்கம்மை வேகமாகப் பரவி வரும் நிலையில், இது கொரோனா வைரஸ் அல்லது சாதாரண காய்ச்சலைப் போல காற்றின் மூலம் பரவும் ஆபத்து இருக்கிறதா என்பதற்கு வல்லுநர்கள் விளக்கமளித்துள்ளனர்.

குரங்கம்மை விலங்குகளிடம் இருந்து மனிதர்களுக்குப் பரவிய நோயாகும். இது வழக்கமாக மத்திய மற்றும் மேற்கு ஆபிரிக்காவின் வெப்பமண்டல மழைக் காடுகளில் ஏற்படும். அரிதாகவே மற்ற பகுதிகளுக்குப் பரவும். இப்போது ஆபி

## மருத்துவ நிபுணர்கள் தரும் விளக்கம்

ரிக்காவில் 14,000 இற்கும் மேற்பட்டோருக்கு இந்நோய் கண்டறியப்பட்டுள்ளது. அவர்களில் 524 பேர் உயிரிழந்துள்ளனர். இதையடுத்து உலக சுகாதார அமைப்பும் இதைச் சர்வதேச பொதுச் சுகாதார அவசர நிலையாக அறிவித்துள்ளது.

காய்ச்சல், தலைவலி, தசை வலி மற்றும் தோலில் புண் ஆகியவை முக்கிய அறிகுறிகளாக உள்ளன. இப்பாதிப்பு இருப்போருடன் நெருங்கிப் பழகினால் அல்லது நேரடியாகத் தொடர்பு கொண்டால் இந்த தொற்று ஏற்படும் என்று வல்லுநர்கள் கூறியுள்ளனர்.

நோயாளியுடன் நேருக்கு நேர் அமர்ந்து நீண்ட நேரம் பேசுவதால் வைரஸ் பரவும் ஆபத்து அதிகரிப்பதாக அமெரிக்காவின் நோய் கட்டுப்பாட்டு மையம் எச்சரித்துள்ளது. அதேபோல மூச்சு விடும் போது வெளிப்படும் சுவாச நீர்த்துளிகள் மூலம் இது பரவும் ஆபத்து இருப்பதாக உலக சுகாதார அமைப்பும் எச்சரித்துள்ளது. இருப்பினும், நெருங்கிய தொடர்பு மற்றும் பாலியல் தொடர்பு ஆகியவற்றுடன் ஒப்பிடும் போது, சுவாச நீர்த்துளிகள் மூலம் பரவுவது குறைவுதான்.



இந்த நோய் கொரோனா போல நீண்ட தூரத்திற்குக் காற்றில் பரவுமா என்ற கேள்விக்கு மருத்துவர்கள் பதிலளித்துள்ளனர். முறையான காற்றோட்டம் இல்லாத அறைகளில் குரங்கம்மை வைரஸ் காற்றின் மூலம் பரவும் எனக் கூறப்பட்டுள்ளது. அதேநேரம் நீண்ட நேரம் நோயாளியுடன் இதுபோல இருந்தால் மட்டுமே இது பரவும்.

கொரோனா போலக் காற்றில் நீண்ட தூரத்திற்கு பரவாது. விரைவாகவும் பரவாது. அதாவது நோயாளியுடன் உட்கார்ந்து பேசும் போது சில நொடிகள் என்றாலே கொரோனா பரவும். ஆனால், மங்கி பொக்ஸ் இதுபோல பரவாது. பா திப்பு ஏற்பட்டவருடன் நீண்ட நேரம் தொடர்பில் இருப்பது, நோயாளியுடன் உடலுறவு வைத்துக் கொள்வது போன்ற காரணங்களால் மட்டுமே பரவும் என்று ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.

தற்போது இந்த குரங்கம்பை பாதிப்பிற்கு நிலையான சிகிச்சை முறை இல்லை. அதேநேரம் Bavarian Nordic நிறுவனத்தின் MVABN தடுப்பூசியை அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் கனடா நாடுகள் அங்கீகரித்துள்ளது. இதுதான் இப்போது முக்கியமான தடுப்பு மருந்தாக இருக்கிறது. இது தவிர சீரம் நிறுவனமும் தடுப்பூசியை உருவாக்க உள்ளதாக அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தேசிய மட்ட ரீதியிலான போட்டி நாளை செங்கலடி மத்திய கல்லூரியில்

கடந்த மாதம் 17 ஆம் திகதி நடைபெற்ற மாகாண மட்ட ரீதியிலான சமூக விஞ்ஞானப் போட்டியில் 1000 இற்கு மேற்பட்ட மாணவர்களைக் கொண்ட பாடசாலை எனும் பிரிவில் கல்குடா கல்வி வலயத்திலிருந்து பங்குபற்றிய 21 மாணவர்களில் 10 மாணவர்கள் மட்/ ககு/ செங்கலடி மத்திய கல்லூரியிலிருந்து பங்குபற்றியிருந்தனர்.

இவர்களில் 2 மாணவர்கள் இப்பாடசாலையிலிருந்து தேசிய மட்ட ரீதியிலான போட்டிக்குத் தெரிவாகியுள்ளனர். தேசிய மட்ட ரீதியிலான போட்டிகள் நாளை 24 ஆம் திகதி சனிக்கிழமை அந்தந்த மாகாணங்களில் நடைபெறவுள்ளன. கிழக்கு மாகாணத்திற்கான போட்டி செங்கலடி மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது. இதில் சிங்கள மொழி மூலம் 84 மாணவர்களும், தமிழ் மொழி மூலம் 84 மாணவர்களும் பங்குபற்றவுள்ளனர்.

தேசிய மட்ட ரீதியிலான சமூக விஞ்ஞானப் போட்டிக்கு இப்பாடசாலையிலிருந்து தெரிவான இரு மாணவர்களுக்கும் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு, மாணவர்களை நெறிப்படுத்திய செங்கலடி மத்திய கல்லூரி அதிபர், பிரதி அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கும் குறிப்பாக இப்போட்டிக்காக இரவு பகல் பாராது மாணவர்களுக்குப் பாடசாலயில் மேலதிக பயிற்சி வகுப்புக்களை நடத்தி மாணவர்களைத் தயார்படுத்திய திருமதி வனிதா பிரதீபன் ஆசிரியைக்கும் பெற்றோர் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.



# புலமைக் கதிர்





திருமதி.பத்மா சந்திரமோகன்
உதவி அதிபர், கொ/ புனித அன்னம்மாள் மகளீர் மகாவித்தியாலயம், கொழும்பு 13

### தரம்–5 வகுப்பு மாணவர்களுக்கான

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - I

1 மணித்தியாலம்

01. 
= 8 4 6 5 8 9 2 எனின் ..................... = ........................

இடைவெளிக்குப் பொருத்தமான விடை
i. 5 6 8 2 4 9 8   ii. 5 6 8 9 4 2 8   iii. 5 6 8 2 8 4 9

02. பண்ணை ஒன்றில் தினமும் 30 முட்டைகள் சேகரிக்கப்படும். ஞாயிற்றுக்கிழமை மாலையில் அப்பண்ணையில் 150 முட்டைகள் இருந்தன. எனின், எத்தினத்தில் இருந்து முட்டைகள் சேகரிக்கப்பட்டிருக்கும்?
i. புதன் கிழமை   ii. செவ்வாய்க் கிழமை   iii. வியாழக் கிழமை

03. லீப் வருடம் அல்லாத வருடம் ஒன்றின் முதல் நாள் வியாழக்கிழமை எனின் அவ்வருடத்தின் இறுதி நாள் என்ன கிழமையாகும்?
i. புதன் கிழமை   ii. வியாழக் கிழமை   iii. வெள்ளிக் கிழமை

04. கடிகாரத்தில் செங்கோணத்தை காட்டும் நேரங்கள்
i. நேரம் 3.00 உம், நேரம் 9.00 உம்
ii. நேரம் 3.00 உம், நேரம் 4.00 உம்
iii. நேரம் 6.15 உம், நேரம் 12.15உம்

05. சிவப்பு நிற மின்குமிழ் 3 நிமிடங்களுக்கு ஒரு முறையும் நீல நிற மின்குமிழ் 4 நிமிடங்களுக்கு ஒரு முறையும் ஒளிரும். இறுதியாக பி.ப. 2.00 க்கு இரண்டு மின் குமிழ்களும் ஒளிர்ந்தன. எனின், அடுத்து இரண்டு மின்குமிழ்களும் ஒளிரும் நேரம்
i. பி.ப. 2.10   ii. பி.ப. 2.15   iii. பி.ப. 2.12

06. பௌர்ணமி தினங்களில் பாடசாலை நடைபெறாது. நாளை பௌர்ணமி தினம் எனின்,
i. சிலவேளை பாடசாலை நடைபெறும்
ii. பாடசாலை நடைபெறும்
iii. பாடசாலை நடைபெறாது

07. 


B, C ஆகிய பாத்திரங்களை நிரப்புவதற்கு A பாத்திரத்தினால் எத்தனை தடவை நீர் ஊற்ற வேண்டும்?
i. 3 தடவை   ii. 6 தடவை   iii. 9 தடவை

08. நிமலனின் தாய் அமலா, அமலாவின் கணவர் சுதாகர், சுதாகரின் தங்கை, நிமலனுக்கு என்ன உறவு முறை?
i. பாட்டி   ii. சித்தி   iii. அத்தை

- பிராணிகள், தாவரங்களை உண்ணும் பிராணிகள், சிங்கம், மான், ஆகியவற்றுக்கிடையே உள்ள தொடர்பு பின்வரும் உருவில் வகைக் குறிக்கப்பட்டுள்ளது. அதனைக் கொண்டு பின்வரும் வினாக்களுக்குரிய விடையைத் தெரிவு செய்க.




09. சிங்கத்தை வகைக் குறிக்கும் எழுத்து யாது?
i. S   ii. T   iii. U

10. S இனால் வகைக் குறிக்கப்படும் பிராணியின் வகையானது பின்வருவனவற்றுள் எதுவாக இருக்கலாம்
i. புலி   ii. முயல்   iii. நாய்

11. 110 தொடக்கம் 120 வரையான எண்களை எழுதும் போது இலக்கம் ஒன்று எழுதப்படும் தடவைகளின் எண்ணிக்கை?
i. 10   ii. 12   iii. 22

12. கீழே உள்ள A என்ற எழுத்தினால் குறிக்கப்படும் கனவுரு வடிவமான மரக்குற்றியிலிருந்து B என்ற எழுத்தினால் குறிக்கப்படும் சதுரமுகி வடிவமான மரக்குற்றிகள் எத்தனை வெட்டலாம்?




i. 4   ii. 3   iii. 5

13. உரு 1 இல் காணப்படும் சதுரவடிவ கடதாசி ஒன்றினை புள்ளிக் கோடுகள் வழியே நான்காக மடித்து உரு 2இல் உள்ளவாறு நான்கு துளைகள் இடப்பட்டன எனின் இட்ட துளைகளின் எண்ணிக்கையைப் போல் எத்தனை மடங்கு துளைகள் தாளை விரிக்கும் போது தோன்றும்




i. 2 மடங்கு
ii. 3 மடங்கு
iii. 4 மடங்கு

14. 72m நீளம் கொண்ட கயிறொன்றினை 8 துண்டுகளாக வெட்டினால் ஒரு துண்டின் நீளம் யாது?
i. 9m   ii. 8m   iii. 7m

15. ஓர் இலக்கத்தை ஆரம்பத்தில் இரண்டால் வகுத்து மீண்டும் அதனை மூன்றால் வகுத்து வரும் எண்ணின் $\frac{1}{3}$ க்கு 5க் கூட்டினால் வரும் விடை 12 ஆகும். எனின் ஆரம்பத்தில் இரண்டால் வகுத்த இலக்கம் யாது?
i. 84   ii. 126   iii. 121

16. 10100க்கு முன்னால், பின்னால் வரும் இலக்கங்கள் யாது?
i. 10909, 10111   ii. 10099, 10101   iii. 10999, 10001

17. பெரிய பாத்திரம் ஒன்றில் உள்ள பானத்தினை சம அளவான 8 போத்தல்களில் நிரப்பலாம். அதில் ஒரு போத்தலை நிரப்புவதற்கு 4 சிறிய கோப்பைகள் வேண்டும் எனின், சிறிய கோப்பைகள் 480 நிரப்புவதற்கு எத்தனை பெரிய பாத்திரங்கள் தேவை ஆகும்?
i. 15   ii. 30   iii. 20

18. கீழே காணப்படும் உருவில் வெற்றிடத்துக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.




19. உயிர்காக்கும் வண்டி அபாய ஒலி எழுப்பியவாறு வேகமாகச் செல்லுதல்
i. மக்களுக்கு நோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு
ii. உயிருக்கு போராடும் நோயாளியை ஏற்றிச் செல்வதால்
iii. சாரதி வேகமாக பயணிக்க விரும்புவதால்

20. பிழையான கோவையைத் தெரிவு செய்க.
i. 4 x 5 + 20 = 40   ii. 6 x 6 + 6 = 42   iii. 5 x 5 + 5 = 35

21. முகம் பார்க்கும் கண்ணாடியின் முன் நின்ற ஆண் ஒருவர் தனது உருவத்தைப் பார்த்துக் கூறிய கூற்றுக்களில் பொருத்தமானது,
i. இக் கண்ணாடியில் இருப்பவர் எனது அப்பாவின் மகள் ஆவார்.
ii. இக் கண்ணாடியில் இருப்பவர் எனது அம்மாவின் மகன் ஆவார்.
iii. இக் கண்ணாடியில் இருப்பவர் எனது தம்பியின் சகோதரி ஆவார்.

22. எனது அக்காவிற்கு ஓர் அண்ணனும், ஓர் அக்காவும் மாத்திரம் உள்ளனர். எனது அம்மாவுக்கு இரு மகன்களும், இரு மகள்மாரும் உள்ளனர் என்று ஒரு பிள்ளை கூறுகின்றது. இதற்கேற்ப இப்பிள்ளை அக்குடும்பத்தில்
i. மூத்த மகன் ஆவார்   ii. இளைய மகன் ஆவார்   iii. இளைய மகள் ஆவார்

23. பின்வரும் உருவில் உள்ள பெரிய மரக்குற்றியிலிருந்து எத்தனை சிறிய மரக்குற்றிகளை வெட்ட முடியும்?
i. 27 இலும் அதிகம்
ii. 27 இலும் குறைவு
iii. 27 இற்குச் சமம்



24. ஒரு பாடசாலையில் விளையாட்டு மைதானத்திற்கு வடக்கே பிரதான மண்டபமும், பிரதான மண்டபத்திற்கு கிழக்கே நூலகமும், பிரதான மண்டபத்திற்கு வடகிழக்கே உணவகமும், உணவகத்திற்கு மேற்கே அலுவலகமும் அமைந்துள்ளன. மேற்குறித்த விபரத்திற்கேற்ப சரியான கூற்றைத் தெரிவு செய்க.
i. அலுவலகத்திற்குத் தெற்கே பிரதான மண்டபமும், நூலகமும் அமைந்துள்ளன.
ii. அலுவலகத்திற்கு மேற்கே உணவகமும், உணவகத்திற்குத் தெற்கே நூலகமும் அமைந்துள்ளது.
iii. பிரதான மண்டபத்திற்கு தெற்கே விளையாட்டு மைதானமும், விளையாட்டு மைதானத்திற்குக் கிழக்கே நூலகமும் அமைந்துள்ளன.

25. உட்பக்கம் தெரியாத பெட்டியொன்றினுள் 4 மஞ்சள் நிறப்பந்துகளும், 3 சிவப்பு நிறப்பந்துகளும் 5 நீல நிறப்பந்துகளும் உள்ளன. அவற்றில் உள்ளே பார்க்காது ஒரு மஞ்சள் நிறப்பந்தை கூடிய பட்சம் எத்தனையாவது தடவை நிச்சயமாக எடுக்க முடியும்?
i. 8   ii. 9   iii. 10

26. பூஜா என்பவள் ஒரு வரிசையில் முன் இருந்து 10ஆவது ஆளாக நிற்கின்றாள். அவளுக்குப் பின்னால் இருப்பவர்களின் எண்ணிக்கையானது முன் இருப்பவர்களின் எண்ணிக்கையின் மூன்று மடங்கு ஆகும். அவளுக்கும் வரிசையின் பின் இருந்து 8 ஆவதாக நிற்கும் நபருக்கும் இடையே எத்தனை நபர்கள் உள்ளனர்?
i. 21   ii. 18   iii. 19

27. 


i. 29
ii. 40
iii. 41

28. 


i. 1   ii. 2   iii. 5

29. எனது வகுப்பில் அனைவரும் உயரமானவர்கள். ஜோயல் உயரமானவன். அதன்படி கீழே உள்ள கூற்றுக்களில் மிகச்சரியான கூற்று எது?
i. ஜோயல் எனது வகுப்பை சேர்ந்தவன்
ii. ஜோயல் எனது வகுப்பைச் சேராதவன்
iii. கூறமுடியாது

- **தரவை அவதானித்து 30, 31 ஆகிய வினாக்களுக்கு விடைகளைத் தெரிவு செய்க.**




30. ○ இன் பெறுமதி?
i. 3   ii. 4   iii. 5

31. A எனும் இடத்தில் வரவேண்டியது எண்?
i. 11   ii. 12   iii. 13

(06ஆம் பக்கம் பார்க்க)

(05 ஆம் பக்கத் தொடர்)

# புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - I

1 மணித்தியாலம்

32. இவ்வுருவை வெட்டி ஒட்டும் போது சதுரமுகி ஒன்றை பெற்றுக் கொள்ளலாம். அச்சதுரமுகியில் A பக்கத்திற்கு எதிர்ப்பக்கத்தில் வரவேண்டிய ஆங்கில எழுத்து யாது?




i. B ii. L iii. H

33. நான் ஒரு எண்ணை நினைத்து அதை நான்கால் பெருக்கும் போது விடை 24 கிடைத்தது. நான் நினைத்த எண்ணுடன் இரண்டைக் கூட்டவரும் எண் யாது?
i. 6 ii. 8 iii. 9

34. 
இவ்வுருவில் உள்ள செங்கோணங்களில் எண்ணிக்கை யாது?
i. 5 ii. 6 iii. 7

பாடசாலை ஒன்றில் தரம் - 04 வகுப்பறையில் உள்ள மாணவர்கள் கணித பாடத்தில் பெற்ற புள்ளிகளை அருகில் உள்ள உரு காட்டுகிறது. அதன்படி




A – 90 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்கள்
B – 81 தொடக்கம் 90 வரையான புள்ளிகளை பெற்றவர்கள்
C – 61 தொடக்கம் 80 வரையான புள்ளிகளைப் பெற்றவர்கள்

- 90 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை 9 ஆகும்.

35. 61 தொடக்கம் 80 வரையான புள்ளிகளைப் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை யாது?
i. 18 ii. 16 iii. 27

36. அப்பாடசாலையில் தரம் 4 வகுப்பில் கல்வி கற்கும் கரன் கணித பாடத்தில் 90 புள்ளிகளை பெற்றான் எனின் அவன் இடம் பெறுவது?
i. A பகுதியில் ii. B பகுதியில் iii. கூறமுடியாது

37. கமல் புத்தகத்தில் 14ஆம் பக்கம் தொடக்கம் 24ஆம் பக்கம் வரை படித்தான் அவன் வாசித்த பக்கங்கள் எத்தனை?
i. 11 ii. 10 iii. 9

38. நீதிபதியின் தீர்ப்பில் எப்போதும் இருக்க வேண்டியது?
i. விவாதம் ii. பக்கச்சார்பு iii. நீதி

39. கடிகாரம் ஒன்று நேரம் 10.30 ஐக் காட்டும் போது கடிகாரத்தின் மணித்தியால முள்ளுக்கும் நிமிட முள்ளுக்கும் இடையில் காணப்படும் கோணம் எது?
i. ஒரு செங்கோணமாக இருக்கும்.
ii. ஒரு செங்கோணத்தைப் பார்க்கிலும் குறைவாக இருக்கும்.
iii. ஒரு செங்கோணத்திலும் பார்க்க கூடுதலாக இருக்கும்.

40. ஒரு உதைபந்தாட்டம் 105 நிமிடங்கள் வரை நீடித்தது. விளையாட்டு பி.ப. 4.00 மணிக்கு ஆரம்பமானதாயின் எத்தனை மணிக்கு முடிந்திருக்கும்?
i. பி.ப. 5.45 ii. பி.ப. 5.00 iii. பி.ப. 6.15

# கடந்த வார (16.08.2024) வினாத்தாள்- II இற்கான விடைகள்

**I.**
01. விடுதலை
02. நாம்
03. நோய்நொடி
04. களைப்பு – உற்சாகம்
05. நீக்கி
06. வலியுறுத்தின
07. பொறுத்தார் பூமியாள்வார்
08. i. பிரச்சினை ii. அபிவிருத்தி iii. வளையல்
09. முக்கோணி
10. சுமதி தாய் மொழியை விரும்பி படிக்கின்றாள்
11. ஆண்டு
12. பகலும்

**II.**
13. i. மகிழ்ச்சி - துன்பம்
ii. வனம் - நாடு
iii. விசாலமான - சிறிய
iv. வடிவான - அலங்கோலமான
v. போயினர் - வந்தனர்
14. i. வானத்திலுள்ள நட்சத்திரங்கள் கடலிலுள்ள மீன்களைப் போல பரவுகின்றன
ii. இயற்கை அன்னையின் படைப்பில் அனைத்தும் அற்புதமே
iii. அரசன் நீதி தவறாது நாட்டை ஆட்சி செய்தான்.
15. i. சிறக்கப் ii. விளையும்
16. மேசை
17. i. அலப்பும் ii. அலறும்
18. i. பிழை ii. சரி iii. பிழை
19. i. Rabbit ii. Chair
iii. இது உங்களுடைய பென்சிலா?
iv. உங்களுக்கு என்ன பிடிக்கும்
20. i. (B)பட ii.வெசிகிலிய
iii. எனக்கு தண்ணீர் தாருங்கள்.

**III.**
21. i. 30.00
ii. 1000.00
iii. 80.00
iv. 665.00
22. ரூபாய் 45.00
23. 
24. 18 : 50
25. 242 km
26. 10 செங்கோணங்கள்
27. i. 206 மாணவர்கள் ii. 1, 1
28. i. தெற்குத்திசை ii. வடக்குத்திசை
29. 3m

**IV.**
30. 3
31. 1
32. 2
33. 3
34. 3
35. 1
36. 2
37. 3
38. 2
39. 3
40. 2
41. 2
42. 1
43. 2
44. 3
45. 1
46. 2
47. 1
48. 3
49. 3
50. 2
51. 3
52. 1
53. 3
54. 3
55. 3
56. 1
57.3
58.1
59. 3

## நெல்லியடியில் வாள் வெட்டு

(யாழ். விசேட நிருபர்)

யாழ்ப்பாணம் நெல்லியடி பகுதியில் இடம்பெற்ற வாள் வெட்டு தாக்குதலில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நெல்லியடி பொலிஸ் நிலையத்துக்கு முன்பாகவுள்ள, எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்று முன்தினம் இரவு இந்த வாள் வெட்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் வேலை பார்க்கும் இளைஞன் ஒருவரை, மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் இவ்வாறு வாள்வெட்டு தாக்குதல் நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

சம்பவத்தில் காயமடைந்த இளைஞன் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு யாழில் முன்னாயத்த செயலமர்வு





(கோப்பாய் குறூப் நிருபர்)

ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக கிராம அலுவலர்களுக்கான முன்னாயத்த செயலமர்வு, யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் (21) இரண்டு அமர்வுகளாக நடைபெற்றது.

யாழ்ப்பாண மாவட்ட பதில் அரசாங்க அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் இந்த செயலமர்வு நடைபெற்றது. இதன்போது, உரையாற்றிய தெரிவத்தாட்சி அலுவலர், ஒவ்வொரு வாக்களிப்பு நிலையங்களிலும் தேர்தல் கடமைகளுக்காக நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள் தேர்தல் சுமுகமாகவும், நீதியாகவும் நடைபெற ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொண்டதுடன், இதில் கிராம அலுவலர்களின் பங்களிப்பும் காத்திரமானது எனத் தெரிவித்தார்.

இதேவேளை, ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக வாக்களிப்பு நிலையங்களில், கிராம அலுவலர்களின் கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உதவித் தேர்தல் ஆணையாளர் இ.கி.அமல்ராஜ் விளக்கமளித்திருந்தார்.

இச் செயலமர்வில் மாவட்டத்தின் அனைத்து நிர்வாக கிராம அலுவலர்கள் மற்றும் கிராம அலுவலர்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மன்னார் பொது வைத்தியசாலை பிரச்சினைகள்; ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பவுள்ளதாக தெரிவிப்பு

### மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க. கனகேஸ்வரன்

(தலைமன்னார் விஷேட நிருபர்)

மன்னார் பொது வைத்தியசாலை தொடர்பாக, ஜனாதிபதிக்கு கடிதமொன்றை அனுப்பவுள்ளதாக, மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மன்னார் வைத்தியசாலைக்கும் மக்களுக்கும் இடையே உள்ள இடைவெளியை நீக்கும் முகமாக, மாவட்டத்தின் பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் மன்னார் பொது வைத்தியசாலையில் அண்மையில் கலந்துரையாடலொன்று இடம்பெற்றது.

இதில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர், உதவி மாவட்ட செயலாளர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், வைத்தியசாலை பணிப்பாளர், வைத்திய நிபுணர்கள், அருட்தந்தையர்கள் மற்றும் சிவில் சமூக பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது, மன்னார் வைத்தியசாலையில் உயிரிழந்த இளம் தாயின் மரணம், அடுத்த கனமே வைத்தியசாலை பணிப்பாளருடன் கலந்துரையாடப்பட்டதாகவும், பிழையொன்று ஏற்பட்டதை சந்தேகித்தமையினால், இது தொடர்பாக உடன் விசாரணைகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

குற்றவாளிகளாக இனங் காணப்படுபவர்களுக்கு எதிராக உயர் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என வைத்தியசாலை பணிப்பாளரினால் தெரிவிக்கப்பட்டதாகவும் இக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், வைத்தியசாலையில் ஏதேனும் தவறுகள் பிரச்சினைகள் ஏற்பட்டால், நாம் முதலில் வைத்தியசாலை பணிப்பாளரை அனுகிக்கொள்ளவேண்டும். இதேவேளை, மன்னார் பொது வைத்தியசாலை தொடர்பாக, ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்று அனுப்ப இருப்பதாகவும், அதில், ஆளணி பற்றாக்குறை, மன்னாருக்கு போதனா வைத்தியசாலை உள் கட்டமைப்புகளுக்கு அதிகமான நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்ற முக்கிய விடயங்கள் தொடர்பாக ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டுச் செல்லவுள்ளதாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

# வடக்கின் உதயம்

## பிரசவமாகி உயிரிழந்த சிசுவின் மரணத்துக்கு நீதி கோரி வைத்தியசாலைக்கு முன்பாக ஆர்ப்பாட்டம்





(வவுனியா விசேட நிருபர்)

வவுனியா வைத்தியசாலையில், பிறந்து உயிரிழந்த சிசுவின் மரணத்துக்கு நீதி கோரி வைத்தியசாலை முன்பாக கவனயீர்ப்பு போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

மரணித்த சிசுவின் உறவினர்கள் மற்றும் பொது மக்கள் நேற்று முன்தினம் (21) இவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது, வவுனியா வைத்தியசாலை வைத்தியர்களின் அசமந்தப்போக்கால் மரணித்த சிசுவிற்கு நீதி வேண்டும் எனவும், வைத்தியசாலையின் உள்ளக விசாரணையில் நம்பிக்கையில்லை எனவும் போராட்டத்தில் ஈடுப்பட்டவர்கள் தெரிவித்தனர். எனவே சுகாதார அமைச்சர் ரமேஸ் பத்திரண இது தொடர்பாக கவனம் செலுத்தி, விசாரணை குழுவொன்றை அமைத்து பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு நீதியைப் பெற்றுத் தர வேண்டும் என வலியுறுத்தி, வைத்தியசாலைக்கு முன்பாக வீதியில் அமர்ந்தவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். குறித்த ஆர்ப்பாட்டம் காரணமாக, வைத்தியசாலையின் பிரதான வாயிலுக்கருகில் பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டிருந்தது.

இதேவேளை, உயிரிழந்த சிசுவின் உடலை மாவட்ட நீதிபதி பார்வையிட்டு விசாரணைகளை மேற்கொண்டுள்ளார். தனது குழந்தையின் மரணம் வைத்தியர்களின் அசமந்தத்தால் ஏற்பட்டதாக சிசுவின் தந்தை வவுனியா பொலிஸில் நிலையத்தில் வழங்கிய முறைப்பாட்டுக்கமைய, வவுனியா வைத்தியசாலைக்கு வருகை தந்த நீதிபதி சிசுவின் சடலத்தை பார்வையிட்டதுடன், தந்தையிடம் வாக்குமூலத்தையும் பதிவுசெய்துக்கொண்டுள்ளார்.

## பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் 'பண்பாட்டுப் பெருவிழா'

(சாவகச்சேரி விசேட நிருபர்)

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன், தென்மராட்சிப் பிரதேச செயலகம், தென்மராட்சி கலாசாரப் பேரவை மற்றும் சாவகச்சேரிப் பிரதேச சபை ஆகியன இணைந்து பண்பாட்டுப் பெருவிழா நிகழ்வொன்றை நடத்தியுள்ளது.

இந் நிகழ்வு, தென்மராட்சி பிரதேச செயலர் உஷா சுபலிங்கம் தலைமையில், நேற்று முன்தினம் (21) இடம்பெற்றது.

இதன்போது, கலைஞர்களுக்கு "இளங்கலைஞர் விருது" மற்றும் "கலைச்சாகரம் விருது" ஆகியன வழங்கிக் கௌரவிக்கப்பட்டிருந்தன. நிகழ்வின் விருந்தினர்களாக, வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன், பண்பாட்டலுவல்கள் திணைக்கள பிரதிப்பணிப்பாளர் லாகினி நிருபராஷ், யாழ். மாவட்ட உள்ளூராட்சி பிரதி ஆணையாளர் பொ.ஶ்ரீவர்ணன், சாவகச்சேரி பிரதேச சபைச் செயலாளர் க.சந்திரகுமார், மாவட்ட சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர் சுகுணலினி விஜயரத்தினம் மற்றும் கலாபூசணம் கந்தையா சந்திரகேது ஆகியோர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.





# கிழக்கின் குரல்



## மட்டக்களப்பில் 11 தேர்தல் வன்முறை மீறல்கள் பதிவு :

**மட்டக்களப்பு விசேட நிருபர்**



மட்டக்களப்பு மாவட்டத்தில் இதுவரை 11 தேர்தல் வன்முறை மீறல்கள் பதிவாகியுள்ளதாக, மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரியுமான ஜே.ஜே முரளிதரன் தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக முன்னெடுக்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் குறித்து, மாவட்ட செயலகத்தில் நேற்று (22) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனை தெரிவித்த அவர்,

மட்டக்களப்பு மாவட்டத்தில் இம்முறை இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் சுமார் 449,606 வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். அதில் தபால் மூல வாக்களிப்புக்கு 13,116 பேர் தகுதி பெற்றுள்ளனர்.

அத்துடன் தேர்தல் வாக்களிப்புக்காக மட்டக்களப்பு மாவட்டத்தில் 442 வாக்குச் சாவடிகள் அமைக்கப்படவுள்ளன. மாவட்ட செயலகம்,தேர்தல் அலுவலகம், பொலிஸ்நிலையம் ஆகியவற்றில் தபால் மூல வாக்களிப்பு அடுத்த மாதம் 04 ஆம் திகதியும், ஏனைய அரச அலுவலகங்களில் 5ஆம், 6 ஆம் திகதியும்வாக்களிக்க தவறியவர்களுக்காக மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் 11ஆம், 12 ஆம் திகதிகளிலும் வாக்களிப்புக்கள் இடம்பெறவுள்ளன.

இதேவேளை, இதுவரை 11 தேர்தல் மீறல்களும் பதிவாகியுள்ளன.

அதில் அதிகமானவை பதவி உயர்வு மற்றும் இடமாற்றம் சம்பந்தமானவையாகும்.

மட்டு மாவட்டத்தில் தேர்தல் வன்முறை செயல்கள் எதுவும் இதுவரை பதிவாகவில்லை. எனினும், பல பகுதிகளிலும் தேர்தல் பாதுகாப்பு நடவடிக்கைகளில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

## அம்பாறை பொது மக்களின் தேவைகளை தீர்த்து வைப்பதாக குவைத் தூதுவர் உறுதி

### கல்முனை மாநகர முன்னாள் பிரதி முதல்வர் ரஹ்மத் மன்சூர்

குவைத் நாட்டின் இலங்கைக்கான தூதுவர் ஹலாஃப் பு தாய்ர், கல்முனை மாநகர முன்னாள் பிரதி முதல்வரும், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொருளாளருமான ரஹ்மத் மன்சூரை கொழும்பிலுள்ள குவைத் தூதரகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை (20) சந்தித்துள்ளார்.

இதன்போது, கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்ட பொது மக்களின் தேவைப்பாடுகள் தொடர்பாக நடவடிக்கைகள் எடுப்பதாக குவைத் தூதுவர் உறுதியளித்ததாக ரஹ்மத் மன்சூர் தெரிவித்தார்.

மேலும், கடந்த காலத்தில் குவைத் அரசாங்கத்தின் மூலம் தென் கிழக்கு பல்கைக்கழகத்தில் இடம்பெற்ற உதவி திட்டங்களுக்கு ரஹ்மத் மன்சூர் இதன்போது நன்றி தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

**எம்.என்.எம்.அப்ராஸ்**



### ஜனாதிபதி ரணிலுக்கே ஆதரவு

## ஸ்ரீ.சு.கவின் மட்டு மாவட்ட அமைப்பாளராக நியமிக்கப்பட்ட கே.எல்.எம்.பரீட் தெரிவிப்பு

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**



முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினரும் காத்தான்குடி நகர சபை முன்னாள் உறுப்பினருமான கே.எல்.எம்.பரீட், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தனது ஆதரவை வழங்கவுள்ளதாக தெரிவித்துள்ளார். அதன்படி ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளராக நேற்று (22) தனது நியமனக் கடிதத்தை அவர் பெற்றுக்கொண்டார். அவருக்கான நியமனக் கடிதம் அமைச்சர் நிமால் சிறிபாலடி சில்வா வழங்கிவைத்தார். இதனையடுத்து தனது முழுமையான ஆதரவையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்கவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

## அம்பாறை வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் மாவட்ட செயலாளரிடம் மகஜர் கையளிப்பு

**அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்**

அம்பாறை மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் தலைவர், செயலாளர் மற்றும் பிராந்திய இணைப்பாளர்கள் கொண்ட குழு, அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்தக்க அபேவிக்ரமவை சந்தித்து 10 அம்ச கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றை கையளித்துள்ளனர்.

அம் மகஜரில், அம்பாறை மாவட்டத்திலுள்ள சகல பிரதேச செயலகங்கள் ஊடாக வேலையற்ற பட்டதாரிகளின் தகவல்களை வருடாந்தம் தொடர்ச்சியாக சேகரித்தல், அரச வருமானங்களை அதிகரிக்கக் கூடிய துறைகளில் பட்டதாரிகளை இணைத்தல், புதிய திட்டத்தின் ஊடாக பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்குதல், தொழில் அமைச்சின் இணைப்பு காரியாலயம் ஒன்றினை மாவட்ட மட்டத்தில் அமைத்தல், அரச தொழில் முகாமைத்துவ குழு ஒன்றினை அமைத்தல், தொழிலுக்கான கல்வித்தகைமையினை அதிகரித்து பட்டதாரிகளை நியமித்தல் மற்றும் பட்டதாரிகள் சகலருக்கும் வேலை வாய்ப்பினை வழங்குதல் உட்பட பத்து அம்ச கோரிக்கைகள் உள்ளடக்கப்பட்டிருந்தன.



இதன்போது, தற்போது தேர்தல் காலமாக இருப்பதனால் சில விடயங்களை செய்ய முடியாதிருப்பதால், தன்னுடைய அதிகார எல்லைக்கு உட்பட்ட அனைத்து விடயங்களையும் செய்வதோடு ஏனைய விடயங்களை பொது நிர்வாக அமைச்சுக்கு அனுப்பி வைத்து தீர்வை பெற்று தருவதற்கான ஏற்பாடுகளை செய்து தருவதாக அம்பாறை மாவட்ட செயலாளர் தெரிவித்தார்.

மேலும், பிரதேச செயலகங்களில் பட்டதாரிகளை பதிவு செய்தல் மற்றும் அவர்களுக்கான பிரிவொன்றை உருவாக்குவது தொடர்பிலும் கவனம் செலுவதாக அவர் தெரிவித்தார்.

## திருகோணமலையில் இணையவழி பாலின வன்முறையை தடுத்தலுக்கான செயலமர்வு





**கிண்ணியா மத்திய நிருபர்**

இணையவழி பாலின அடிப்படையிலான வன்முறையைத் தடுத்தல் மற்றும் சட்டப்பூர்வ வெளிநாட்டுப் பயணம் குறித்த தெளிவூட்டல் தொடர்பான செயலமர்வானது திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாரச்சி தலைமையில் நேற்று முன்தினம் (21) மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது, சமூக வலைப்பின்னல் பயன்பாட்டின் வரம்புகள் மற்றும் பாதுகாப்புகள், டிஜிட்டல் சாதனங்களின் பயன்பாடு மற்றும் பாதுகாப்பு, இணைய பரிவர்த்தனைகள் மற்றும் பாதுகாப்பான பயன்பாடு, குற்றவியல் விசாரணை மற்றும் தொடர்புடைய சட்டம், உதவக்கூடிய நிறுவனங்கள் போன்ற விடயங்கள் வளவாளர்களினால் தெளிவூட்டப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, 1948 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க குடிவரவு மற்றும் குடியகல்வுச் சட்டம், 1985 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகச் சட்டம், வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்வதன் மூலம் கிடைக்கபெறும் நன்மைகள், உதவி வழங்கும் நிறுவனங்கள் போன்ற விடயங்கள் தொடர்பாக மாவட்ட அரசாங்க அதிபரால் தெளிவூட்டப்பட்டது.

இதன்போது, மேலதிக மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.சுதாகரன், திருகோணமலை மாவட்ட செயலக மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் தீபானி அபயசேகர, துறைசார்ந்த உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச செயலக மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## போதைப் பொருள் பாவனையை கட்டுப்படுத்தி நாட்டை கட்டியெழுப்ப அரசாங்கம் நடவடிக்கை

### சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் ஏ.எம்.எம்.இஸ்ஸதீன்

**ஒலுவில் விசேட நிருபர்**

நாட்டில் போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்தி எதிர்காலத்தில் போதையற்ற சிறந்த நாட்டை கட்டியெழுப்புவதற்கு அரசாங்கம் வேலைத் திட்டங்கள் முன்னெடுத்துள்ளதாக, அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் ஏ.எம்.எம்.இஸ்ஸதீன் தெரிவித்தார். உலக இளைஞர் தினத்தை முன்னிட்டு, பாடசாலை மாணவர்கள் மத்தியில் போதை ஒழிப்பு மற்றும் திறன் அபிவிருத்தி தொடர்பான விழிப்புணர்வு செயலமர்வு அண்மையில் அட்டாளைச்சேனை தேசிய பாடசாலையில், அதிபர் ஏ.எல்.எம்.பாயிஸ் தலைமையில் நடைபெற்றது.



இதில் கலந்துகொண்டு உரையாற்றிய சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் ஏ.எம்.எம்.இஸ்ஸதீன்,

மாணவர்கள் பாடசாலையில் கல்வி கற்கும் காலத்தில் முன்மாதிரியான செயற்பாடுகளில் ஈடுபட வேண்டும்.

சில பாடசாலை மாணவர்களிடத்தில் போதை பாவனை அதிகரித்து காணப்படுவதனால் அதனை கட்டுப்படுத்துவதற்கு அரசு விசேட வேலைத்திட்டத்தினை முன்னெடுத்துள்ளது.தற்போதைய காலச் சூழலில் போதைப் பொருள் பாவனை என்பது மிகவும் மோசமான நிலையை அடைந்துள்ளது. இன்று ஆயிரக்கணக்காணக்கானோர் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகியுள்ளனர். மாணவர்கள் வலுவூட்டப்படுவதனூடாக இன்றைய சமூகம் எதிர்நோக்கியிருக்கும் போதைவஸ்து பாவனையின் அதிகரிப்பில் இருந்து விடுபடச் செய்வதற்கான சந்தர்ப்பம் கிடைக்கும். அதனூடாக நிலைத்து நிற்கக் கூடிய சமூக வலுவூட்டலை ஏற்படுத்த முடியும் என அவர் தெரிவித்தார்.

## விஷேட தேவையுடையோருக்கு கொடுப்பனவு வழங்கி வைப்பு

**மாளிகைக்காடு குறூப் நிருபர்**

காரைதீவு பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட விசேட தேவையுடையவர்களுக்கான கொடுப்பனவுகள் காரைதீவு பிரதேச செயலகத்தில் (22) வழங்கப்பட்டது.

காரைதீவு பிரதேச செயலாளர் ராகுலநாயகி சஜிந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், உதவி பிரதேச செயலாளர் எஸ். பாத்தீபன், கணக்காளர் மற்றும் செயலக சமூக சேவை பிரிவு உத்தியோஸ்தர்களும் கலந்துகொண்டனர்.

## தொடர் மழை காரணமாக புத்தளம் மாவட்டத்தில் 2,418 குடும்பங்களைச் சேர்ந்த 8582 பேர் பாதிப்பு

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

தொடர்ச்சியாக பெய்துவரும் கடும் மழை காரணமாக புத்தளம் மாவட்டத்தில் 10 பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட 65 கிராம சேவகர் பிரிவில் 2418 குடும்பங்களைச் சேர்ந்த 8582 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் புத்தளம் மாவட்ட அலுவலக கடமைநேர அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இதில் மாதம்பை பிரதேச செயலாளர் பிரிவுக்குற்பட்ட பகுதிகளில் அதிகமானோர் வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அதிகாரி கூறினார்.

மாதம்பை பிரதேச செயலாளர் பிரிவுக்குற்பட்ட 16 கிராம சேவகர் பிரிவுகளில் 672 குடும்பங்களைச் சேர்ந்த 2499 பேரும், மஹாவெள பிரதேச செயலாளர் பிரிவுக்குற்பட்ட 13 கிராம சேவகர் பிரிவுகளில் 346 குடும்பங்களைச் சேர்ந்த 938 பேரும், நாத்தாண்டிய பிரதேச செயலாளர் பிரிவுக்குற்பட்ட 10 கிராம சேவகர் பிரிவுகளில் 85 குடும்பங்களைச் சேர்ந்த 280 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், ஆராச்சிக்கட்டு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 05 கிராம சேவகர் பிரிவுகளில் 66 குடும்பங்களைச் சேர்ந்த 212 பேரும், வென்னப்புவ பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 04 குடும்பத்தைச் சேர்ந்த 91 பேரும், புத்தளம் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 05 கிராம சேவகர் பிரிவுகளில் 586 குடும்பங்களைச் சேர்ந்த 2059 பேரும், தங்கொட்டுவ பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 02 கிராம சேவகர் பிரிவுகளில் 586 குடும்பங்களைச் சேர்ந்த 18 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், சிலாபம பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 04 கிராம சேவகர் பிரிவுகளில் 530 குடும்பங்களைச் சேர்ந்த 2070 பேரும், மஹாகும்புக்கடவல பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 03 கிராம சேவகர் பிரிகளில் 16 குடும்பங்களைச் சேர்ந்த 53 பேரும், முந்தல் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 03 கிராம சேவகர் பிரிவுகளில் 21 குடும்பங்களைச் சேர்ந்த 68 பேரும் வெள்ள அனர்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.



நாத்தாண்டி பிரதேச செயலாளர் பிரிவில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களில் 16 குடும்பங்களைச் சேர்ந்த 51 பேர் இரண்டு தற்காலிக முகாம்களிலும், 50 குடும்பங்களைச் சேர்ந்த 165 பேர் உறவினர்களின் வீடுகளில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் புத்தளம் மாவட்ட அலுவலக கடமைநேர அதிகாரியொருவர் குறிப்பிட்டார்.

ஆத்துடன், புத்தளம் மாவட்டத்தில் வெள்ளநீர் உட்புகுந்தமையினால் வீடு ஒன்றும், 03 வர்த்தக நிலையங்களும் பகுதியளவில் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அறிக்கையிடப்பட்டுள் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் புத்தளம் மாவட்ட அலுவலக கடமைநேர அதிகாரியொருவர் மேலும் தெரிவித்தார்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
புதன் 2024.08.21
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5572 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.20,719,136.00
ஆங்கில எழுத்து T — வெற்றி இலக்கங்கள் 4 2 2 3 8 2
அத சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 147 — ஆங்கில எழுத்து T — வெற்றி இலக்கங்கள் 2 3 8 2

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3814 — சீட்டிழுப்பு திகதி 2024.08.21 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.70,815,198.72
ஆங்கில எழுத்து H — வெற்றி இலக்கங்கள் 33 40 68 75 — விசேட எழுத்து H — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 76046

Mega Power — சீட்டிழுப்பு இலக்கம் 1920 — 2024.08.21 — 32351 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ.443,061,114.00
ஆங்கில எழுத்து Y — சுப்பர் இலக்கம் 24 — வெற்றி இலக்கங்கள் 10 62 64 74
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

VIP — திகதி 2024.08.21 — சீட்டிழுப்பு இலக்கம் 0398
ஆங்கில எழுத்து Q — வெற்றி இலக்கங்கள் 8 0 4 1 0 8 — L7 எழுத்து Q
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 34,575,658.88

ராசி சுப பலன் — திகதி 2024.08.21 — சீட்டிழுப்பு இலக்கம் 881 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,908,384.80
வெற்றி இலக்கினம் மீனம் — வெற்றி இலக்கங்கள் 03 24 30 56 — தனயோக இலக்கம் 82282 — நாளுக்கான விதி எண் 14

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1602 — 2024.08.21 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 107,435,025.84
ஆங்கில எழுத்து A — வெற்றி இலக்கங்கள் 14 17 31 61 — விசேட எழுத்து A — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 43322

# கெஹெலியவின் விளக்கமறியல் 29ஆம் திகதிவரை நீடிப்பு

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல உள்ளிட்ட நான்கு சந்தேக நபர்கள் எதிர்வரும் 29ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

தரமற்ற மனித இம்யூனோகுளோபுலின் ஊசி மருந்துகளை கொள்வனவு செய்தமை தொடர்பான வழக்கு நேற்று மாளிகாகந்த நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை நேற்று கெஹெலிய ரம்புக்வெல்லவை விளக்கமறியலில் வைக்குமாறு கோரி மாளிகாகந்த நீதவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவிற்கு ஆட்சேபனைகளை எதிர்வரும் செப்டெம்பர் 12ஆம் திகதி தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்குமாறும் நீதிபதி உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## உள்ளூராட்சிமன்ற தேர்தலை...

இதனால் மக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக உயர் நீதிமன்றம் தீர்மானித்ததையடுத்தே நேற்று இவ்வாறு உத்தரவை பிறப்பித்தது.

இந்தத் தேர்தல் உரிய தினத்தில் நடத்தாததை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட 04 மனுக்கள் மீது ஏகமனதாக தீர்ப்பளித்து நான்கு பேரைக் கொண்ட உயர் நீதிமன்ற நீதியரசர்கள் குழாமினால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

உரிய அடிப்படை உரிமைகளை மீறியமைக்காக மனுதாரர்களுக்கு தலா ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாவை வழக்கு செலவாக செலுத்துமாறு நீதிமன்றம் அரசாங்கத்துக்கு உத்தரவு பிறப்பித்தது.

உயர் நீதிமன்ற பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, நீதியரசர்களான விஜித் மலல்கொட முர்து பெர்னாண்டோ மற்றும் யசந்த கோதாகொட ஆகியோரின் இணக்கப்பாட்டுடன் 151 பக்கங்கள் கொண்ட தீர்ப்பு நீதிமன்றத்தில் அறிவிக்கப்பட்டது.

மனு மீதான விசாரணையின் போது, மனுதாரர் தரப்பில் முன்வைக்கப்பட்ட விடயங்கள் மற்றும் எதிர்தரப்பு முன்வைத்த ஆட்சேபனைகள் ஆகியவை நீதியரசர்கள் குழாமினால் தனித்தனியாக பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதற்கமைவாக, தேவைப்படும்போது முறையாக தேர்தலை நடத்துவதற்கு தேர்தல் ஆணைக்குழு சட்டபூர்வமாக கடமைப்பட்டுள்ளது.

ஆனால், 2023ஆம் ஆண்டு உள்ளூராட்சிமன்ற தேர்தலை நடத்துவதற்கு தேவையான அமைப்புகளின் ஒத்துழைப்பை பெறுவதற்கு அப்போதைய தேர்தல் ஆணைக்குழு சட்டத்தால் வழங்கப்பட்ட அதிகாரங்களை எந்த வகையிலும் பயன்படுத்தவில்லையென்று நீதியரசர்கள் குழாமினால் குறிப்பிடப்பட்டுள்ளது.

எந்தவொரு தேர்தலையும் சரியான நேரத்தில் நடத்துவதற்காக சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அறிவுறுத்தல்கள் மற்றும் உத்தரவுகளை வழங்குவதற்கு தேர்தல் ஆணைக்குழு கடமைப்பட்டுள்ளதென்றும் முடிவு செய்துள்ளது. ஆனால் அப்போது தேர்தல் ஆணைக்குழு தேர்தலை நடத்துவதற்கு உரிய நிறுவனங்களுக்கு உத்தரவுகள் மற்றும் அறிவுரைகளை வழங்க முன்வரவில்லையென்றும் நீதியரசர்கள் குழாமின் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அப்போது தேர்தல் ஆணைக்குழு, சட்டத்தால் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி தேர்தலுக்கான உரிய திட்டம் மற்றும் முறைப்படி உரிய தேர்தலை நடத்தவில்லையென்று நீதிபதிகள் குழாம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதற்கமைவாக அப்போதைய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவராக இருந்த நிமல் ஜி.புஞ்சிஹேவா மற்றும் அந்த ஆணைக்குழுவின் உறுப்பினர்களான எஸ்.பி. திவாரத்ன, எம்.எம். முகமத், கே.பி.பி. பத்திரன, பி.எஸ்.எம் சார்ள்ஸ் ஆகியோர் நாட்டின் அரசியலமைப்பின் 14(1)(அ) விதியின் மூலம் உறுதிசெய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமையை மீறியுள்ளனர்.

அத்துடன், 2023ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உள்ளூராட்சிமன்ற தேர்தலை நடத்துவதை தடுக்கும் வகையில் ஜனாதிபதி நிதி அமைச்சர் என்ற வகையில் தன்னிச்சையாகவும் சட்டவிரோதமாகவும் செயற்பட்டுள்ளதாகவும் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தியாவசிய செலவினங்களுக்கு முன்னுரிமை அளிப்பதற்காக அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை பத்திரம் சட்டமாக நிறைவேற்றப்படாததோடு, உரிய பணத்தைப் பெற்றுக்கொள்வது தொடர்பான விடயத்தை பாராளுமன்றத்துக்கு அனுப்பவோ அல்லது அதனை நடத்துவதற்கு நிதி ஒதுக்கவோ நிதி அமைச்சர் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவில்லை.

மனுதாரர்கள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணிகளான உபுல் ஜயசூரிய, நைஜல் ஹெட்ச், விரான் கொரயா மற்றும் அஸ்திக தேவேந்திர ஆகியோர் ஆஜராகினர்.

பிரதமர் தினேஷ் குணவர்தன சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி பைஸல் முஸ்தபாவும் நிதி அமைச்சர் மற்றும் ஏனைய பிரதிவாதிகள் சார்பில் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் நெரின் புள்ளே ஆஜராகினர்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினராக இருந்த திருமதி. பி.எஸ்.எம். சார்ள்ஸ் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி ஜந்தக ஜயசுந்தர ஆஜரானார்.

## கடற்றொழிலாளருக்கு டீசல்,...

ஒரு நாளைக்கு 15 லீற்றர் மண்ணெண்ணெய் வீதம் அதிகபட்சமாக 25 நாட்களுக்கு ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் 25 ரூபா வீதம் மானியம் வழங்கவும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (22) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் பந்துல குணவர்தன இதனைக் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சராக முன்வைத்த இணைந்த அமைச்சரவை பத்திரத்துக்கே அங்கீகாரம் வழங்கப்பட்டதாக அமைச்சர் கூறினார்.

கொவிட்19 தொற்றுநோய் நிலைமை மற்றும் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி மற்றும் எரிபொருள் விலைகள் அதீத அதிகரிப்பு காரணமாக இலங்கையில் மீன்பிடித் தொழிலில் மிகவும் எதிர்மறையான தாக்கம் ஏற்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

## நாட்டுக்குள் Mpox... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

உலகளவில் தயார்நிலை மற்றும் பொதுச் சுகாதார அவசரநிலையாக அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் ஆசிய பிராந்தியத்தில் மிகக் குறைந்த எண்ணிக்கையிலான நாடுகளில் இந்நோய் பதிவாகியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

*Mpox (Monkeypox)* என்பது Mpox வைரஸால் ஏற்படுகிறது. மேலும் Mpox நோய்த்தொற்றுடைய நபரின் உடல் திரவங்கள், காயங்கள் மற்றும் சுவாசக்குழாய்களில் நீண்டகால வெளிப்பாட்டின் மூலம் பரவுவதால், நோய் பரவும் அபாயம் குறைவு.

பாதிக்கப்பட்ட நபர் பயன்படுத்தும் படுக்கை விரிப்புகள் அல்லது உடைகள் மூலம் நோய் பரவும் வாய்ப்பும் உள்ளது. காய்ச்சல், தோலில் கொப்புளங்கள் மற்றும் நிணநீர் கணுக்கள் வீங்குவது குரங்கம்மை நோயின் முக்கிய அறிகுறிகளாகுமென சுகாதார அமைச்சின் செயலாளர் டொக்டர் பாலித மஹிபால மேலும் சுட்டிக்காட்டினார்.

## நாட்டை மீட்டெடுக்க... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

வழமையான சிந்தனை போக்கிலிருந்து வெளியேறி ஆக்கபூர்வமாக சிந்தித்து, தரவுகளையும் சாட்சிகளையும் மையப்படுத்திய கொள்கை திட்டங்களை தயாரித்து நாளுக்குநாள் அவற்றை நடைமுறைப்படுத்தி, தீர்வு காணப்பட வேண்டும்.

முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் காலத்துக்கு பின்னர் நாட்டின் கொள்கை திட்டத்தை கண்காணித்தல், மதிப்பீடு செய்தல், இலக்கு குறித்து ஆராய்ந்து பார்த்தல், குறைபாடுகள் இருப்பின் அதனை சீர்ப்படுத்தல் போன்ற வேலைத்திட்டங்கள் இல்லை.

வார்த்தைகளால் அல்லாமல் தொழிற்றுறை திட்டங்களோடு அரச நிர்வாகம் முன்னெடுக்கப்பட வேண்டும்.

முழு நாட்டின் உரிமையை நிர்வாக கட்டமைப்புக்குள் உள்ளவர்களுக்கு பூரண உரிமம் வழங்காது அது தற்காலிக உரிமமாக இருக்க வேண்டும்.

இந்த தற்காலிக உரிமத்தை உயிருக்கும் மேலாக பாதுகாத்து பாதாளத்திலிருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தலைமைத்துவத்தை வழங்கும்" எனத் தெரிவித்துள்ளார்.

## 35 நாடுகளின் பிரஜைகளுக்கு...

முறைகளை ஆய்வு செய்து பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையை சமர்பிக்க நிபுணர் குழுவை நியமிப்பதற்கு கடந்த 25042024 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டிருந்த்தாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

அன்று நியமிக்கப்பட்ட நிபுணர் குழு இலங்கையுடன் சுற்றுலாத்துறையில் போட்டியிடும் 08 நாடுகள் தொடர்பில் விரிவான அறிக்கையை சமர்ப்பித்துள்ளதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அந்த அறிக்கையை அமைச்சரவையின் கவனத்துக்கு சமர்ப்பித்துள்ளதாகவும் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

நிபுணர் குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்காகவும் மேற்படி பரிந்துரைகளின் அடிப்படையில் எதிர்வரும் ஒக்டோபர் 01ஆம் திகதி முதல் 06 மாத காலத்துக்கு அதிகபட்சம் 30 நாட்களுக்கு செல்லுபடியாகும் வகையில் 35 நாடுகளுக்கு இலவசமாக வீசா வழங்குவதற்கு அமைச்சரவையில் அங்கீகாரம் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

இதன்படி 35 நாடுகளைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகள் 06 மாதங்கள் வரை கட்டணம் ஏதுமின்றி இலவச வீசாவை பெறலாம். இந்த வீசா 30 நாட்களுக்கு செல்லுபடியாகும்.

நாட்டின் சுற்றுலாத்துறையை மேம்படுத்துதல் மற்றும் அந்நிய செலாவணி ஈட்டுதல் ஆகியவற்றை கருத்திற்கொண்டு இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் போட்டித் தன்மையுடனான சுற்றுலா ஊக்குவிப்பு பிரசாரத்தின் மூலம் அந்நிய செலாவணி வருவாயை அதிகரிக்கும் வாய்ப்பை இலங்கை பெறுகிறது. இது ஒரு முன்னோடித் திட்டமாக 35 நாடுகளுக்கு 06 மாதங்களுக்கு 30 நாட்களுக்கு செல்லுபடியாகும் இலவச வீசா வழங்கப்படும் என்றும் அவர் கூறினார்.

## 2025 முதல் அரச ஊழியர்களின்...

அவர் இதனைத் தெரிவித்தார். அதற்கமைய குறைந்த தரங்களுக்கு 24% அடிப்படை சம்பள அதிகரிப்பு உயர் பதவிகளுக்கு 24% முதல் 50% வரையிலான அதிகரிப்பு மேற்கொள்ளவுள்ளதாக அவர் இங்கு குறிப்பிட்டார்.

குறித்த அதிகரிப்புக்கு திறைசேரியின் இணக்கத்துடன் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக தெரிவித்த அவர், தகுதிகள், அனுபவம் மற்றும் தற்போது வகிக்கும் பதவியின் அடிப்படையில் இந்த சம்பள அதிகரிப்பு அமையும் எனவும் இங்கு சுட்டிக்காட்டினார்.

அது மாத்திரமன்றி வாழ்க்கைச் செலவு கொடுப்பனவை ரூ.25,000ஆக அதிகரிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக உதய செனவிரத்ன இங்கு குறிப்பிட்டார்.

தற்போதைய பணவீக்கம் மற்றும் பொருளாதார நிலைமைகளை கருத்தில் கொண்டு, ஜனவரி 2025 முதல் அனைத்து அரச ஊழியர்களுக்கும் ரூ. 25,000 வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் இங்கு குறிப்பிட்டார்.

அந்த வகையில் வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு அதிகரிப்புடன் அரச ஊழியர் ஒருவர் ரூ. 55,000 சம்பளத்தை பெறுவார் என அவர் இங்கு குறிப்பிட்டார்.

ஜனவரி 2025 முதல் 3 வருடங்களுக்கு இந்த ரூ. 25,000 வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு மாற்றமின்றி பேணப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஓய்வூதியர்களுக்கு 2025 ஜனவரி முதல் வாழ்க்கைச் செலவு கொடுப்பனவாக தலா ரூ.12,500 வழங்கப்படவுள்ளது.

அத்துடன் 2020ஆம் ஆண்டுக்கு முன் ஓய்வு பெற்ற அரச ஊழியர்களுக்கு இதுவரை செலுத்தப்படாத சம்பள உயர்வை வழங்கி, அவர்களது ஓய்வூதியத்தில் திருத்தத்தை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தற்போதுள்ள நிதி சாத்தியத்தின் அடிப்படையில் 2025 வரவு, செலவுத் திட்டத்தின் மூலம் படிப்படியாக பலன்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது தேர்தலை அடிப்படையாகக் கொண்டதா? என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அவர்,

"எந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும் அரச உத்தியோகத்தர்களின் சம்பளத்தை அதிகரிக்க வேண்டிய தேவை உள்ளதாகவும், கடந்த காலங்களில் அரச ஊழியர்கள் வீதிகளில் இறங்கி முன்னெடுத்த தொழிற்சங்க நடவடிக்கைகளை கருத்திற்கொண்டு சம்பள முரண்பாடுகளை களையவே இந்த முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டதாகவும் உதய ஆர். செனவிரத்ன சுட்டிக்காட்டினார்.

அரசாங்கத்தால் இது தொடர்பில் கவனம் செலுத்தி அதற்கு முறையான தீர்வு காணும் நோக்கில் நியமிக்கப்பட்ட குழு எனும் வகையில் உரிய முறையில் ஆராய்ந்து முன்வைக்கப்பட்ட யோசனை இதுவாகும் என அவர் இங்கு சுட்டிக்காட்டினார்.

## 10,000 ரூபாவை...

செலுத்தப்படவிருந்த பத்தாயிரம் ரூபா ஊக்குவிப்பு கொடுப்பனவை வழங்கக் கூடாது என பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கு தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

ஜனாதிபதி தெரிவுக்கான தேர்தல் வாக்குப்பதிவு அறிவிக்கப்பட்டுள்ள இந்த காலப்பகுதியில் , இதுபோன்ற மேலதிக ஊக்குவிப்பு கொடுப்பனவை வழங்குவது ஒரு அரசியல் கட்சி அல்லது வேட்பாளரை ஊக்குவிப்பதாக இருக்கலாம், என்பதினால் இந்த கொடுப்பனவை தேர்தலுக்குப்பின்னர் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கடிதம் மூலம் அமைச்சின் செலாளருக்கு தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

## வாக்காளர் அட்டை விநியோகம்...

தபால்மூல வாக்காளர் அட்டைகளை ஏற்றுக்கொள்வார்கள் என்று தெரிவித்தார்.

நடைபெறவுள்ள 2024ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் 736,589 வாக்காளர்கள் தபால் மூலம் வாக்களிக்க விண்ணப்பித்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. இருப்பினும் 24,268 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாக அத்திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

## செப்டெம்பர் 21ஆம் திகதி ரணில்...

வடிவேல் சுரேஷின் அமைச்சு அலுவலகத்தில் நேற்று உத்தியோகபூர்வமாக அவர் தனது பதவியை ஏற்றுக்கொண்டார். இதன்போதே மனுஷ நாணயக்கார இவ்வாறு தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் தலதா அத்துகோரள ஆற்றிய உரை, ஐக்கிய மக்கள் சக்தியின் அடிமட்ட உறுப்பினர்கள் மத்தியில் எதிரொலிக்கும் குரல். அத்துடன் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரை சுற்றி திரள்வதற்கு அவர்களை தூண்டுமெனவும் மனுஷ தெரிவித்தார்.

## மக்களின் வாக்குரிமை போல...

தேடிக்காண்டுள்ளதாகவும் அதன் பின்னர் மாகாண சபைத் தேர்தலையும் பின்னர் உள்ளூராட்சி சபைத் தேர்தலையும் நடத்த எதிர்பார்க்கப்படுவதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார்.

## இலங்கைக்கு ஐந்து... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

நற்சான்றிதழ்களை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, புதிய தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்களுடன் சிநேகபூர்வ உரையாடலிலும் ஈடுபட்டார்.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் மற்றும் நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியல் யாப்பு மறுசீரமைப்பு அமைச்சர் அலி சப்ரி, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## புதிய அரசியலமைப்பு... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

நாட்டிலுள்ள சிறுபான்மையினருக்கு எதிராக அரசாங்கத்தை அமைப்பதன் மூலம் ஒற்றுமையை உருவாக்க முடியாது. எனவே நாட்டில் முதன்முறையாக சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களின் அபிலாஷைகளை வழங்கக்கூடிய ஐக்கிய அரசாங்கம் ஒன்று அமைக்கப்பட வேண்டும்.

சஜித்திடம் தற்போது சென்றவர்களில் பலர் எமது வாசல் கதவுகளையும் தட்டியிருந்தனர். ஆனால் நாங்கள் அவர்களை உள்ளே வருவதற்கு அனுமதிக்கவில்லை. எங்களுக்கு அவர்கள் எவரும் தேவையில்லை. எங்களிடம் கொள்கை ரீதியான அரசியல் உள்ளது. எங்கள் மேடையில் இருப்பவர்கள் அனைவரும் இந்த நாட்டை நேசிப்பவர்கள், ஒரு அரசாங்கத்தில் அமைச்சர்களின் எண்ணிக்கை எப்போதும் மட்டுப்படுத்தப்பட்டதாக இருக்க வேண்டும்.

அலி சாஹிர் மௌலானா, சுரேஷ் வடிவேல் ஆகியோருக்கு இப்போது அமைச்சர் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால் எமது தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கீழ் 25 அமைச்சர்களை மாத்திரமே உள்ளடக்கவுள்ளோம்.

கடந்த காலத்தில் அனைத்து அரசாங்களிலும் மாறி மாறி அங்கம் வகித்த எவருக்கும் எமது அரசாங்கத்தில் அனுமதி இல்லை" எனத் தெரிவித்துள்ளார்.

## இன்றைய பலன்கள் (23.08.2024)

**கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா (ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)**



**மேஷம்:**
பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி எடுத்த சுபகாரியங்கள் பலவும் நடைபெறுவது போல் வந்து கைநழுவிச் செல்லும்.

**ரிஷபம் :**
தொழிலில் தளர்ச்சி ஏற்படும். பணியாளர்கள் பக்கபலமாக இருப்பது கொஞ்சம் கடினம்.கொடுக்கல் வாங்கல்களில் தடுமாற்றங்களை சந்திப்பீர்கள்.

**மிதுனம்:**
இழப்புகளை ஈடு செய்ய எடுத்த புதிய முயற்சிகளில் தடை தாமதம் ஏற்படும். பூர்வீக சொத்துக்களை பாகப்பிரிவினை செய்வதில் மனக்கசப்பு உருவாகலாம்.

**கடகம்:**
நீங்கள் மேற்கொள்ளும் செயல்களில் முன்னேற்றமான பலன்களை பெறுவீர்கள். பணவரவுகளில் திருப்தியான சூழ்நிலை காணப்படும்.

**சிம்மம்:**
குடும்பத்தில் மருத்துவச் செலவு உருவாக்கலாம். தொழிலில் எதிர்பார்த்த முன்னேற்றம் காணப்படும். சில சமயம் தடைகள் தாமதங்கள் ஏற்படக்கூடும்.

**கன்னி:**
திருமண கனவு நனவாகும். இடமாற்றம் பற்றிய சிந்தனை மேலோங்கும். இன்னும் புரியாத கவலைகள் ஏற்படும்.

**துலாம்:**
உங்கள் முயற்சிகள் பலவற்றில் முன்னேற்றமான சூழ்நிலை காணப்பட்டாலும் சிலவற்றிலேயே வெற்றி காண்பீர்கள்.

**விருச்சிகம்:**
உயர்கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சி கைக்கூடும். தொழில் வெற்றி நடை போடும். புதிய முயற்சிகளுக்கு வெற்றி உண்டாகும்.

**தனுசு:**
சோதனைகள் ஏற்படக்கூடிய காலமாகும். மனக்குழப்பம் அதிகரிக்கும். இருப்பினும் தைரியத்தோடு செயல்படுங்கள்.

**மகரம்:**
சில குழப்பங்கள் ஏற்படும். குறுக்கீடுகள் ஏற்பட்டாலும் கடைசி நேரத்தில் காரியங்கள் கைகூடி விடும்.

**கும்பம்:**
வீண்பழிகளும் சிக்கல்களும் உருவாகும். ஆரோக்கிய தொல்லையால் அடிக்கடி மருத்துவச் செலவு ஏற்படும்.

**மீனம்:**
வாழ்க்கை துணை வழியே சில பிரச்சினைகள் உருவாகலாம். எதிர்பாராத திருப்பங்கள் நடைபெறும்.

## IMF உடனான... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

இங்கு மேலும் உரையாற்றிய ஜனாதிபதி,

"நாம் இரண்டு நெருக்கடிகளை எதிர்கொண்டோம் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். முதலாவதாக, கொவிட்19 நோய்த் தொற்று மற்றும் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியால் நாம் பாதிக்கப்பட்டோம். இவை ஒன்றோடொன்று தொடர்புடையவை.

சர்வதேச நாணய நிதியத்துடன் செய்துகொண்ட ஒப்பந்தங்களுக்கு முரணாக மேற்கொள்ளப்பட்ட வரிக் குறைப்புகள் போன்ற கொவிட் தொற்றுக்கு முன்னர் நாங்கள் எடுத்த நிதி நடவடிக்கைகள் வருமானம் குறைய காரணமாகியது. அந்த சூழ்நிலையில், எமது சவால்கள் மிகவும் சிக்கலானதாக மாறியது.

நாடு இவ்வாறானதொரு நிலையை நோக்கி நகர்ந்துகொண்டிருந்த போது நாம் எச்சரித்தோம். துரதிர்ஷ்டவசமாக, இந்த எச்சரிக்கையை ஒரு சிலர் மாத்திரமே கண்டுகொண்டார்கள். அன்று முன்வைத்த ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கைப் பிரகடனத்தின் ஊடாக இந்த நெருக்கடி தொடர்பில் மக்களுக்கு சுட்டிக்காட்டினோம். எதிர்காலத்தில் இலங்கையில் பொருளாதார வீழ்ச்சி ஏற்படாமல் தடுக்க 03 பில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவை என தெரிவித்தோம். எனினும், அன்று நாம் விடுத்த இந்த எச்சரிக்கை பெரும்பாலும் புறக்கணிக்கப்பட்டது. ஏனைய குழுக்கள் யதார்த்தமற்ற வாக்குறுதிகளை அளித்தன. உலகளாவிய கொவிட் நோய்த்தொற்று நமது நிலைமையை மேலும் மோசமாக்கியது. 2020 மற்றும் 2021 இல் உலகப் பொருளாதாரத்தின் வீழ்ச்சிக்கு வழிவகுத்தது. நாம் இன்னும் அதிலிருந்து மீண்டு வருகிறோம்.

நான் ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் நாட்டின் பொருளாதாரத்தை மீட்பதற்கு தேவையான இந்த மாற்றங்களை என்னால் செய்ய முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருந்தது. நான் அப்போதே சர்வதேச நாணய நிதியத்துடன் தொடர்பு கொண்டு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் கலந்துரையாடியிருந்தேன்.

நாம் தற்போது பொருளாதாரத்தையும் எமது கடனையும் ஸ்திரப்படுத்தியுள்ளதுடன், எம்மால் கடனை செலுத்த முடியும் என்பதை உறுதிப்படுத்தியுள்ளோம். நாம் பணத்தை அச்சிட மாட்டோம் என்றும், வங்கிகளில் கடன் பெறப்போவதில்லை என்றும் உறுதி அளித்துள்ளோம். நமது வருமானத்திலேயே நாம் தங்கி இருக்க வேண்டும் என்பதே அதன் அர்த்தமாகும். அதனால் நான் உட்பட பலர் அதிக வரி செலுத்த வேண்டியுள்ளது.

நமது பொருளாதார வளர்ச்சியை தூண்டுவது அடுத்த சவாலாகும். 2022 முதல் இயல்பு நிலைக்கு திரும்ப ஐந்தாண்டு திட்டம் எம்மிடம் உள்ளது. 2026ஆம் ஆண்டாகும்போது அதனை நாம் அடைய முடியும் என்று எதிர்பார்க்கிறேன். 2027 ஆம் ஆண்டாகும்போது 5% வருடாந்த வளர்ச்சியை பேணுவதே எமது இலக்காகும்" என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

## தொடரும் 'யுக்திய'... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

கைது செய்யப்பட்டவர்களில் 618 ஆண்களும் 8 பெண்களும் அடங்குவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் 14 பேர் பொலிஸ் தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ளனர். போதைப் பொருளுக்கு அடிமையாகியுள்ள 5 பேரை புனர்வாழ்வு நிலையத்துக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சந்தேக நபர்களிடமிருந்து 234 கிராம் 799 மில்லிகிராம் ஹெரோயின், 239 கிராம் 795 மில்லிகிராம் ஐஸ், 2,134 கிராம் 866 மில்லிகிராம் கஞ்சா, 739 கஞ்சா செடிகள் ஆகியவை கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

## மத்திய வங்கி ன்... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

நாட்டின் பொருளாதாரம் எதிர்கொள்ளும் சவாலான காலங்களில் மத்திய வங்கியினது ஆளுநரால் வழங்கப்பட்ட விதிவிலக்கான தலைமைத்துவத்தையும் மூலோபாய நிபுணத்துவத்தையும் இது பிரதிபலிப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெறப்பட்ட இந்த A தரம், பணவீக்க முகாமைத்துவம், பொருளாதார வளர்ச்சி, நாணய நிலைத்தன்மை மற்றும் வட்டி விகித கட்டுப்பாடு போன்ற முக்கிய துறைகளில் ஆளுநரின் ஆற்றலுக்கான வெற்றியை நிரூபித்துள்ளது.

உலகளவில் மத்திய வங்கி ஆளுநர்களுக்கு ஆண்டு தோறும் வழங்கப்படும் இந்த விருது, ஆளுநரின் சிறப்பான செயல்பாடு மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மைக்கான அர்ப்பணிப்பை அங்கீகரித்துள்ளது.

# இஸ்லாம் போதிக்கும் குடும்ப வாழ்வு

மனித வாழ்வில் திருமணம் என்பது மிக முக்கிய அம்சமாகும். அது குடும்ப வாழ்விற்கான வித்தும் கூட. ஸாலிஹான ஆணினதும் பெண்ணினதும் இணைப்பின் மூலமே சிறந்த குடும்பம் உருவாகி சிறந்த சமுதாயம் தோன்ற முடியும். இதனாலேயே ஸாலிஹான ஒரு தம்பதியினரின் சட்டபூர்வமான இணைப்பை இஸ்லாம் இபாதத் ஆக ஆக்கி இருக்கிறது. அவ் விணைப்பு அல்லாஹ்வின் பெயரை முன்னிறுத்திச் செய்யப்பட்ட உடன்படிக்கை பலமானதாகவும், உறுதியானதாகவும் இருக்க வேண்டும். அதேபோன்று அன்பும், பாசமும், கருணையும் கலந்ததாகவும் இருக்க வேண்டுமென்று இஸ்லாம் எதிர்பார்க்கின்றது. இதனை பின்வரும் அல்குர்ஆன் வசனம் எடுத்தியம்புகிறது.

'நீங்கள் சேர்ந்து வாழக்கூடிய உங்கள் மனைவிகளை உங்களிலிருந்தே அவன் உற்பத்தி செய்து உங்களுக்கிடையில் அன்பையும், நேசத்தையும் உண்டு பண்ணியிருப்பது அவனுடைய அத்தாட்சிகளில் ஒன்றாகும்.' (அல் குர்ஆன்)

எனவே முன்மாதிரிமிக்க ஓர் இஸ்லாமியக் குடும்பம் மனதுக்கு நிம்மதி, சந்தோசம், அமைதி, கண்குளிர்ச்சி போன்றவற்றைத் தரக்கூடியதாய் அமைய வேண்டும்.

'எங்கள் இறைவனே! எங்கள் மனைவியர் மூலமும் எங்கள் சந்ததிகள் மூலமும் கண்குளிர்ச்சியை எமக்கு வழங்குவாயாக' (25:74) என்று பிரார்த்திக்குமாறு அல்குர்ஆன் எமக்குக் கற்றுத்தருகின்றது.

ஓர் இஸ்லாமியக் குடும்பம் எப்போதும் சுவனத்தை இலக்காகக் கொண்டிருக்கும். நரகை விட்டும் தம்மைக் காத்துக் கொள்வதையே அது அடிப்படை அவதானமாகக் கொண்டிருக்கும்.

'முஃமீன்களே உங்களையும் உங்கள் குடும்பத்தையும் நரகிலிருந்து காத்துக் கொள்ளுங்கள்.' (66:06) என்ற அல்குர்ஆனின் போதனையை ஏற்று அதற்காக உழைத்துக் கொண்டிருக்கும்.

'எவர்கள் மறுமை நாளில் தமக்கும் தமது குடும்பத்தாருக்கும் நஷ்டத்தை ஏற்படுத்திக் கொண்டனரோ அவர்கள் நஷ்டவாளர்களாவர். அறிந்து கொள்ளுங்கள். இதுவே தெளிவான நஷ்டமாகும். என நபியே நீர் கூறுவீராக.' (39:15) என்ற எச்சரிக்கை வசனம் குறித்து விளிப்புடன் இருக்க வேண்டும்.

முன்மாதிரிமிக்க இஸ்லாமியக் குடும்பத்தின் தலைவர் தனது மனைவிக்கு சிறந்த கணவனாகவும், தனது பிள்ளைகளுக்கு முன் மாதிரிமிக்க தந்தையாகவும் திகழ்வார். அவர் வீட்டினுள் நுழையும் போதெல்லாம் தனது மனைவி, பிள்ளைகளை முகமலர்ச்சியுடன் அணுகுவார். தன் மகிழ்ச்சியை வெளிப்படுத்துவார். இறை கட்டளைப்படி முகமன் கூறி எல்லோரையும் வாழ்த்துவார்.

ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள் அனஸ் (ரழி) அவர்களைப் பார்த்து, 'எனதருமை மகனே! நீ உனது குடும்பத்தாரிடம் சென்றால் ஸலாம் கூறிக் கொள். அது உனக்கும் உனது குடும்பத்திற்கும் அருளாகும்' என்று கூறினார்கள். (நபிமொழி)



ஒரு மனிதன் தனது குடும்பத்தை ஸலாம் கூறிச்சந்திப்பது பரக்கத் பொருந்திய காரியமாக விளங்குகிறது,. அதுவே அவர்களது வாழ்வை மகிழ்ச்சியும், குதூகலமும் மிக்கதாக ஆக்கப் போதுமானது.

ஒரு நல்ல கணவன் தனது மனைவிக்கு எப்போதும் உதவிக் கரம் நீட்டுவார். வேலைப் பளு காரணமாக அவள் களைப்பும், சோர்வும், சஞ்சலமும் அடைந்திருந்தால் அவளுடன் இதமாகப் பேசி ஆறுதலும், ஆனந்தமும் அளிப்பான். தான் ஒரு சங்கைமிகு உயர்ந்த குணமுடைய கணவனின் நிழலில் இருக்கின்றேன் என்ற உணர்வை மனைவியின் உள்ளத்தில் எப்போதும் தோற்றுவிக்கக்கூடியவனாக இருப்பான்.

நபி (ஸல்) அவர்கள், தனது குடும்ப வாழ்வில் மனைவியருடன் கொண்டிருந்த நல்லுறவு, நகைச்சுவை, போன்ற பண்புகளைப் பார்க்கின்ற போது எந்தளவு தூரம் அவர்கள் அன்பும் கருணையும் மிருதுவான குணமும், கொண்டவராக இருந்துள்ளார்கள் என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது. தன் மனைவி ஆயிஷா (ரழி) அவர்களுடன் ஓட்டப் பந்தயத்தில் ஈடுபட்டார்கள். அன்னார் எப்போதும் தன் முன்னால் வைக்கப்பட்ட உணவையை சாப்பிட்டார்கள். வாழ்நாளில் ஒரு போதும் எந்த உணவையும் குறை கூறியதுமில்லை, மனைவியின் வீட்டு வேலைகளில் பங்கேற்று முன்மாதிரியாக வாழ்ந்து காட்டினார்கள்.

வெற்றிகரமான முன்மாதிரிமிக்க முஸ்லிம் குடும்பத்தின் தலைவனான கணவன் மார்க்கப் பற்றுள்ளவராக இருந்து இஸ்லாத்தின் பால் நேரிய வழிகாட்டலை மனைவி பிள்ளைகளுக்கு வழங்கி, மிருதுவான குணத்துடன் நடந்து ஆன்மீக எழுச்சிக்கு வழிகாட்டுவார்.

குறிப்பாக 'நபியே! உமது குடும்பத்தாருக்குத் தொழுகையைக் கொண்டு ஏவுவீராக. நீர் அதில் பொறுமையாகவும் இருப்பீராக' (20:132) என்ற அல்குர்ஆனின் கட்டளையை சிறப்பாக பின்பற்றுவார்கள்.

மேலும் மனைவியுடன் விவேகத்துடனும் அறிவுபூர்வமாகவும் அவளது உணர்வுகளுக்கு மதிப்பளித்தும் நடந்து கொள்வார். மனைவிக்கோ குடும்பத்திற்கோ எந்தவொரு தீங்கோ, அவப்பெயரோ வருவதிலிருந்தும் காத்துக் கொள்வார். மனைவி, பிள்ளைகளை கண்ணியமாக நடத்தும் அவர் எப்போதும் மனைவி, பிள்ளைகளின் குறைகளைக் கண்டால் அவற்றை செம்மைப்படுத்துவதில் கண்ணியத்துடனும் கனிவுடனும் நடந்து கொள்வார். மேலும் தனது பெற்றோர், மனைவி, பிள்ளைகளிடையே சமநிலை பேணி நடந்து கொள்வார்.

எவருக்கும் அநீதி இழைக்க மாட்டார். பெற்றோரைச் சிறந்த முறையில் நடத்துவார். அவர்களுக்கு உபகாரம் செய்வார். அவர்களது கடமைகளை சிறப்பாக நிறைவேற்றுவார்.

மேலும் இத்தகு இலட்சியக் குடும்பத்தில் அவரவர் கடமைகளை ஒவ்வொருவரும் பொறுப்புடன் நிறைவேற்றி வருவார். நபி (ஸல்) அவர்களின் பின்வரும் கட்டளையே அவர்களது கடமையுணர்வுக்கு வழிகாட்டும்.

'உங்களில் ஒவ்வொருவரும் பொறுப்பாளியே. நீங்கள் ஒவ்வொருவரும் அவரவர் பொறுப்புக் குறித்து மறுமையில் விசாரிக்கப்படுவீர்கள். ஆட்சித் தலைவரும் பொறுப்பாளரே அவர் தம் குடிமக்கள் குறித்து விசாரிக்கப்படுவார். குடும்பத் தலைவன் தன் மனைவி மக்களின் பொறுப்பாளன் ஆவான் அவன் தன் பொறுப்புக்குட்பவர்கள் பற்றி விசாரிக்கப்படுவான். மனைவி தன் கணவனின் வீட்டுக்குப் பொறுப்பாளியாவாள். அவள் அந்தப் பொறுப்புக் குறித்து விசாரிக்கப்படுவாள். அறிந்து கொள்ளுங்கள் நீங்கள் ஒவ்வொருவரும் பொறுப்பாளர்களே, மேலும் நீங்கள் ஒவ்வொருவரும் விசாரிக்கப்படுவீர்கள்.(ஆதாரம்: புஹாரி)

'மனைவியானவள் இறை திருப்தியை இலக்காகக் கொண்டு எப்போதும் கணவனுக்குக் கீழ் படிந்து அவரைத் திருப்திப்படுத்துவதைப் நோக்காகக் கொண்டிருப்பாள். ' 'கணவன் தன் மீது திருப்தி கொண்ட நிலையில் மரணமடையும் பெண் சுவனம் நுழைவாள் ' என்றும் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (ஆதாரம்: இப்னு மாஜா)

முன்மாதிரிமிக்க முஸ்லிம் குடும்பத்தில் பெற்றோர் தம் பிள்ளைகள் நல்ல கல்வியைப் பெற்றுக்கொள்ள வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பார்கள். அத்தோடு தாமும் தொடர்ந்து கற்போராகவும் தம் மார்க்க அறிவையும் ஏனைய ஆற்றல்களையும் விருத்தி செய்து கொள்வோராகவும் இருப்பர்.

இக் குடும்பத்தார் தமது உறவுகளைப் பெற்றோர் பிள்ளைகளுடன் சுருக்கிக் கொள்ளாமல் இரத்த பந்தங்களைப் பேணி உறவுகளைப் பலப்படுத்திப் பரஸ்பரம் உபகாரம் செய்து கொள்வதிலும் முன்மாதிரிமிக்கோராகத் திகழ்வர்.

'ஒரு மனிதர் நபி (ஸல்) அவர்களிடம் வந்து, அல்லாஹ்வின் தூதரே! என்னைச் சுவனத்தினுள் நுழையச் செய்யும் ஒரு அமலை எனக்கு அறிவியுங்கள்' என்று கூறினார். அப்போது நபி (ஸல்) அவர்கள் 'நீர் அல்லாஹ்வை வணங்கி அவனுக்கு எந்த ஒன்றையும் இணை வைக்காதிருப்பது, தொழுகையை நிலை நாட்டுவது, ஸகாத்தை கொடுத்து வருவது மற்றும் இரத்த பந்தங்களோடு இணைந்திருப்பது என்று கூறினார்கள். (ஆதாரம்: புஹாரி) அடிப்படையான வணக்க வழிபாடுகளுடன் இணைத்துக் கூறப்பட்ட இரத்த உறவுகளைச் சேர்ந்து நடப்பதானது உணவிலும், ஆயுளிலும் அபிவிருத்தியை ஏற்படுத்தும் என்பதை மனதில் இருத்தியவர்களாக செயற்படுவர். எல்லாம் வல்ல இறைவன் எம்மனைவருக்கும் அருள்புரியட்டும்.

**மௌலவி எம்.யூ. எம். வாலிஹ் அல்அஸ்ஹரி, பாரி.**
**வெலிகம**

## ஆலமுல் இஸ்லாம்

மர்லின் மரிக்கார் aalamulislam.tkn@lakehouse.lk

# ஈருலக வாழ்வில் சுபிட்சம் பெற்றிட....

உலகில் பல்வேறு மதங்கள் உள்ளன. அவற்றில் இஸ்லாமும் ஒன்று. மதம் என்பது மனிதனுக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பை, அதாவது வணக்க வழிபாடுகளை பற்றி பேசக்கூடியதாக இருக்கும். இஸ்லாம் சக மனிதர்களுக்கிடையே உள்ள தொடர்பு பற்றியும் பேசுகிறது. ஒரு மனிதன் தனது இறைவனுக்கு செய்ய வேண்டிய வணக்க வழிபாடுகளை சரியாக நிறைவேற்றி விட்டால் அவன் சுவர்க்கம் சென்றுவிடலாம் என்பது அல்ல. சக மனிதர்களுக்கு இடையூறுகள் கொடுத்து அவர்களின் மன்னிப்பை பெறாமல் இறந்து விட்டால் அவன் எவ்வளவு பெரிய வணக்கசாலியாகவும், நன்மைகள் பெற்றவராக இருந்தாலும் இறைவனிடம் நற்கூலி பெற முடியாது என்கிறது இஸ்லாம்.



அதனால் தான் இஸ்லாம் என்பது ஒரு மதமல்ல எனப்படுகிறது. அது ஒரு வாழ்க்கை நெறி. மரணத்திற்கு பின் மனிதர்கள் எழுப்பப்படுவார்கள். இறைவனின் முன்பாக விசாரணைக்காக நிறுத்தப்படுவார்கள். அப்போது இறைவன், "மனிதா... நான் பசியோடு இருந்தேன், நீ எனக்கு உணவளிக்கவில்லை. நான் தாகத்தில் இருந்தேன், எனக்கு நீ தண்ணீர் புகட்டவில்லை. நான் ஆடை தேவையுள்ளவனாக இருந்தேன், நீ எனக்கு ஆடை கொடுக்கவில்லை" என்பான்.

அப்போது மனிதனோ, "இறைவா நீ தானே எங்களுக்கு உணவு, நீர், உடையெல்லாம் வழங்கினாய். நீ எப்படி அவற்றின் தேவையுடையவனாய் இருந்திருக்க முடியும்?'. "எனது இந்த அடியான் (உனது சக மனிதன்) பசியோடு இருந்தான், தாகித்திருந்தான், அவனுக்கு நீ உணவு அளித்து இருந்தால், நீர் புகட்டி இருந்தால், ஆடை அளித்து இருந்தால் அங்கே நீ என்னை பார்த்து இருப்பாய்" என்று இறைவன் கூறுவான் என இறைவனே அறிவித்ததாக நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (ஆதாரம்: ஹதீஸ் குத்ஸி)

மற்றொரு அறிவிப்பில், ஒரு மனிதன் வணக்க வழிபாடுகள் மூலம் நிறைய நன்மைகள் செய்தவனாக இறைவனின் முன்பாக மறுமையில் வருவான். ஆனால் அவன் சக மனிதர்களை அடித்து, ஏசி அவர்களது உரிமைகளை பறித்திருப்பான். அதனால் அவனது குற்றங்களுக்கு பரிகாரமாக அவனது நன்மைகள், பாதிக்கப்பட்டவர்களுக்கு அளிக்கப்படும். மேலும் முறையீடுகள் இருக்கும் நிலையில் அவனிடம் நன்மைகள் இல்லாத போது அந்த பாதிக்கப்பட்ட மக்களின் தீமைகள் இவனது கணக்கில் சேர்க்கப்படும். அதன் விளைவாக அவன் நரகம் செல்வான்' எனவும் நபி (ஸல்) கூறியுள்ளார்கள். (நபிமொழி)

அதனால் தான் இஸ்லாம் என்பது வணக்க வழிபாடுகளை மட்டும் சொல்லக்கூடிய மதம் அல்ல எனப்படுகிறது. அது மனிதர்களுக்கு செய்ய வேண்டிய கடமைகள் மற்றும் உரிமைகள் பற்றியும் எடுத்துச் சொல்லக்கூடியதாக உள்ளது. மனித வாழ்வின் அனைத்து துறைகளுக்குமான வழிகாட்டுதல்களை இஸ்லாம் வழங்கியுள்ளது. 'இஸ்லாம்' என்றால் 'அடிபணிதல்' என்ற பொருளைக் கொண்டுள்ளது. படைத்த இறைவனுக்கு அடிபணிந்து வாழ்வதன் மூலம் அமைதி கிடைக்கும் என்பதால் இஸ்லாம் என்பதற்கு 'அமைதி' என்ற பொருளையும் கொண்டிருக்கிறது.

சுய சிந்தனை வழங்கப்பட்ட மனிதனும் தன்னைப் படைத்து பரிபாலிக்கும் இறைவனுக்கு அடிபணிந்து நடந்தால் மனிதர்களுக்கு இடையில் அமைதி நிலவும் என்று இஸ்லாம் எடுத்துரைக்கிறது. இஸ்லாம் சொல்லக்கூடிய கடவுள் கொள்கையானது நம் அனைவரையும் படைத்த இறைவன் ஒருவனே. படைத்தவனான அவன் மட்டுமே வணக்கத்திற்குரியவன். அவனைத் தவிர மற்ற அனைத்தும் படைக்கப்பட்டவையே. படைத்தவனை மட்டுமே வணங்க வேண்டும்.

அல்லாஹ் என்பவன் முஸ்லிம்களுக்கு மட்டுமோ, அரபு நாட்டுக்கு மட்டுமோ உரியவன் அல்ல. மாறாக வானம், பூமி உள்ளிட்ட யாவையும் படைத்தவன் அவன் ஒருவன் தான். இந்த உலகம் எவ்வாறு தோன்றியதோ அவ்வாறு ஒருநாள் அழிந்து போகும். அதன் பிறகு மனிதர்கள் அனைவரையும் எழுப்பி இறைவன் கேள்வி கணக்கு கேட்கக்கூடிய நாள் ஒன்று உண்டு. அந்த நாளில் இறைவனிடம் வெகுமதி பெற வேண்டும் என்றால் இஸ்லாம் ஒரு வாழ்க்கை நெறி இறைவனை அறிந்து அவனது கட்டளைகளை பின்பற்றி வாழ வேண்டும். அவனுக்கு மட்டுமே அடிபணிந்து வாழ வேண்டும். அதுவே ஈருலக வாழ்வின் சுபீட்சத்திற்கான அடித்தளமாகும்.

**அபூ மதீஹா**

# அல்-குர்ஆனை அணுகும் ஒழுங்கு

இஸ்லாமிய தஃவா தொடர்பில் பேசுகின்ற அறிஞர்கள் தஃவாவிற்கான மூலாதாரங்கள் தொடர்பாக எடுத்தியம்புவார்கள். அதில் முதலாவது மூலாதாரமாக அல்குர்ஆனைக் குறிப்பிடுவார்கள். உண்மையில் இஸ்லாத்துடன் தொடர்புபடுகின்ற எந்த விடயத்துக்குமே அடிப்படையாக அல்குர்ஆனே விளங்குகிறது. அதனை மூலாதாரங்களின் மூலாதாரமாகக் குறிப்பிடலாம்.

அதனால் தஃவாவில் ஈடுபடுகின்றவர்கள் தஃவா தொடர்பான தெளிவைப் பெற்றுக்கொள்ள நாட வேண்டிய அடிப்படை இடமாக அல்குர்ஆனே திகழுகிறது. தஃவாவில் ஈடுபடுகின்ற ஒரு தாஈக்கும் அல்குர்ஆனிற்குமிடையே மிகவும் நெருங்கிய தொடர்பு இருப்பது அவசியம். அது மேலோட்டமான, கடமைக்கான தொடர்பல்ல. அது ஆத்மார்த்தமான தொடர்பாக இருக்க வேண்டும்.

அல்குர்ஆனுக்கும் எமக்குமிடையிலான தொடர்பை மிக அழகாக விளக்கும் பல வார்த்தைகளை அறிஞர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்கள். அந்த வகையில் நாம் அல்குர்ஆனோடு உறவு வைத்துள்ள போதிலும் அதில் பொடுபோக்காக இருக்கிறோம். அல்குர்ஆனை நாம் உயர்வாக மதிக்கிறோம். ஆனால், அதைப் பற்றி நாம் பொருட்படுத்தாமல் இருக்கிறோம். இது மிகவும் ஆபத்தான விடயமாக அமைந்து விடலாம்.

எமது முன்னோர்களான ஸலப்கள் அல்குர்ஆனுடனான உறவை மிக அழகாகப் பேணியுள்ளார்கள். அவர்களில் சிலர் அல்குர்ஆனை மூன்று நாட்களில் ஓதி முடிப்பவர்களாக இருந்துள்ளனர். இன்னும் சிலர் ஒரு வாரத்தில் ஓதி முடிப்பவர்களாகவும் மற்றும் சிலர் ஒரு மாத காலத்தில் ஓதி முடிப்பவர்களாகவும் இருந்துள்ளனர். இதைவிட குறைந்த எல்லையோ, கூடிய எல்லையோ அல்குர்ஆனுடனான அவர்களது தொடர்புக்கு காணப்படவில்லை. ஏதாவது வேலைப் பழுவினால் ஒரு நாளைக்குரிய பகுதியை அவர்களால் ஓத முடியாது போனால் தூக்கத்திற்குச் செல்லுமுன்னர் அல்குர்ஆனைத் திறந்து அதில் ஒரு சில பகுதிகளையாவது ஓதிவிட்டுத் தான் தூங்குவார்கள்.



அவர்களது இந்தத் தொடர்பு வெறுமனே அல்குர்ஆனை எந்தப்பாதிப்பும் இல்லாது ஓதுகின்ற தொடர்பு அல்ல. மாற்றமாக அதனால் அவர்கள் பாதிப்புற்றார்கள். உமர் (ரழி) என்றாலே அவரது கடின இயல்பு எமக்கு தெரியும். ஆனால், ஒரு வசனத்தை ஓதி அதன் பாதிப்பால் மாதக்கணக்கில் நோயுற்றுப் போனார் அவர். அவரை எல்லோரும் நோய்விசாரிக்கச் சென்றார்கள். ஏன்? அல்குர்ஆனை ஓதியமையால், அதன் வசனங்களின் பாதிப்பால் அவர் நோயுற்றிருந்தார் என்பதனாலேயாகும்.

முஸ்லிம்களின் முதல் கலீபா அபூபக்ர் (ரழி) அவர்களை, நபியவர்கள் அவர்களது இறுதிக் காலப்பகுதியில் மக்களுக்கு இமாமத் செய்வதற்காக முற்படுத்தியபோது ஆயிஷா (ரழி) அவர்கள், யா றஸூலல்லாஹ்! அவரை இமாமத் செய்ய அனுப்ப வேண்டாம். ஏனெனில் அவர் ஓத ஆரம்பித்தால் அழத் துவங்கிவிடுவார். அதனால் அவர் ஓதுவது மக்களுக்கு விளங்காது என்றார்கள்.

இவர்களே இவ்வாறு எனின் அல்குர்ஆன் எனும் தெய்வீக வஹியை தன் உடல் வியர்க்க, முகம் சிவக்க கடும் பாரத்துடன் சுமந்து பெற்றுக்கொண்ட இறைத் தூதர் (ஸல்) அவர்கள் பற்றி சொல்லவா வேண்டும். ஆயிஷா (ரழி) சொல்வது போல் அவரது வாழ்வே அல்குர்ஆன் தான். "ஹூதும் அதன் சகோதரிகளும் என்னை நரைக்கச் செய்துவிட்டன" என நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். அவர் இந்த வேதத்தை ஓதும் போது பாத்திரத்தில் நீர் கொதிப்பது போன்று அருகிலுள்ளவர்களுக்கு சத்தம் கேட்கும். யா ரஸூலல்லாஹ்! உங்கள் மீது அல்லாஹ்வின் சாந்தி உண்டாகட்டும். உங்கள் தோழர்களை அல்லாஹ் பொருந்திக் கொள்ளட்டும்.

ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள் "அல் குர்ஆனை ஓதும் போது நீங்கள் அழுங்கள். முடியாவிடின் சிரமப்பட்டு, வழிந்து அழுகையைக் கொண்டு வாருங்கள்" என்று கூறியுள்ளார்கள். (நபிமொழி)

இதன் ஊடாகத் தெரியவருவது யாதெனில், அல்குர்ஆனால் நீங்கள் பாதிப்புப் பெற வேண்டும் என்பதுதான். அல்குர்ஆனால் பாதிப்புப் பெறாத ஒரு மனிதனால் அல்குர்ஆனின் தூதை சுமக்கவும், அதனை மக்களுக்கு எத்திவைக்கவும், வேறு என்ன தகுதிதான் இருக்கப் போகின்றதுவோ அல்லாஹ் தான் அறிவான்.

சில இஸ்லாமிய அறிஞர்கள் இன்றைய நவீன காலத்திலும் அவர்கள் வீட்டிலிருக்கும் போது எப்பொழுதும் கையில் குர்ஆனுடனேயே இருப்பர். நித்தமும் அதனை ஓதிக் கொண்டும் அதன் கருத்துக்களை சிந்தித்துக் கொண்டுமே இருப்பர். வீட்டில் யாராவது குர்ஆனை மனனமிட்டவர்களிருந்தால் அவர்களை சரிபார்க்கச் சொல்லி அவர்கள் ஓதுவர். இல்லாதபோது சிறிய ஒருவரிடம் அல்குர்ஆனைக் கொடுத்து பார்க்கச் சொல்லி அவர் ஓதுவர். ஓதும்போது இடைக்கிடை தஸ்பீஹ்களை மொழிந்து கொள்வர். குர்ஆனின் கருத்துக்களில் ஆழ்ந்திருப்பர். நபியவர்கள் ஓதிய முறையை அறிந்து அதன்படியே ஓதுவர். அப்போது அவரது உள்ளமும் உடலும் நடுங்குவதைக் காணலாம். தண்டனைகளைக் கூறும் வசனங்களின் முன்னால் மண்டியிட்டு விடுவர். சுபசோபனங்களை கூறும் வசனங்களின் முன்னால் முகம் மலர்ந்து நிற்பர். அப்போது தான் இருக்கின்ற இடங்களையும் சில சமயம் மறந்துபோவர்.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பப்பகுதியை சேர்ந்த அறிஞர் ஒருவர் அல்குர்ஆனில் ஆழ்ந்துபோய் அதன் சிந்தனை களைகளைக் குறித்துக் கொள்ளக்கூடியவராக இருந்துள்ளார். அல்குர்ஆனுடனான இத்தகைய உறவுதான் உயிருள்ள ஒரு தஃவாவை உலகில் தோற்றுவித்தது.

அல்குர்ஆனுடனான இத்தகைய உறவு ஒரு அடிப்படைத் தேவையாகும். தஃவா வரலாற்றை நாம் ஒரு முறை மீட்டிப் பார்க்கையில் அல்குர்ஆனுடனான உறவு பலவீனப்பட்டுப் போகின்ற போதெல்லாம் தஃவாவும் உயிரற்று பலவீனப்பட்டுப் போயிருப்பதைக் காணலாம். அதனுடனான உறவு பலமாக இருந்திருக்கின்ற காலங்களில் தஃவா, சமூகத்தில் ஓர் உயிருள்ள செயற்பாடாக இருந்திருப்பதை அவதானிக்கலாம்.

அல்குர்ஆன் தஃவாவில் முதன்மைப்படுத்தப்பட வேண்டுமென்ற விடயத்தில் ஸலப்கள் மிகத் தெளிவாகவே இருந்துள்ளார்கள். இதற்கு மிகவும் தெளிவான பதிலை முஆத் (ரழி) அவர்கள் அளித்துள்ளார்கள்.

"நபி (ஸல்) அவர்கள் முஆத் (ரழி) அவர்களை யெமனுக்கு அனுப்பும் போது நீங்கள் அங்கு மக்களது விடயங்களில் எதனை வைத்து முடிவுகளைப் பெறுவீர்கள், அல்லது தீர்ப்புக் கூறுவீர்கள்? என்று கேட்டதற்கு அவர் சொன்ன முதலாவது பதில் அல்லாஹ்வின் வேதத்தைக் கொண்டு என்பதாகும்.

இதன் ஊடாக அல் குர்ஆனின் சிறப்பும், மகத்துவமும் முக்கியத்துவமும் தெளிவுபடுத்தப்படுகிறது. அதன்படி செயற்படுவதே ஒவ்வொருவரதும் பொறுப்பாகும்.

**அப்துர் ரஹ்மான்**

# ஹாதியா இஸ்லாமிய நிறுவனம் மூன்றாவது பட்டமளிப்பு விழா நாளை

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம் குரீகொடுவ எனும் கிராமத்தில் அமையப்பெற்றுள்ள தேசமெங்கும் அறிவுச்சுடர் பரப்பிக் கொண்டிருக்கும் ஹாதியா இஸ்லாமிய நிறுவனமானது பெண்களுக்கு இஸ்லாமிய கலைகளையும் நவீன உலக கலைகளையும் ஒருங்கிணைத்து போதிக்கின்ற ஒரு முன்மாதிரி முன்னணி இஸ்லாமிய நிறுவனமாகும்.

இது இன்றைய சமூகத்துக்குத் தேவையான பணிகளை நிறைவேற்றக்கூடிய பல்துறைசார் பெண் ஆளுமைகளை உருவாக்குவதை உயர் நோக்காகக் கொண்டுள்ளது. ஆரம்பத்தில் பகுதி நேரமாக இயங்கிவந்த இந்நிறுவனம் பின் அதற்கென ஒருதனி நிர்வாகக் குழுவொன்று அமைக்கப்பட்டு அவர்களின் பல விரிவான திட்டங்களின் மூலம் ஹாதியா இஸ்லாமிய நிறுவனம் என்ற பெயரில் 2006 ஆம் ஆண்டு மாற்றம் பெற்றது.

இந்நிறுவனம் இலங்கை முஸ்லிம் சமயப்பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டிருப்பதோடு இலங்கைத் தரநிர்ணய நிறுவனத்தின் (Sri Lanka Standard Institute) சர்வதேச தரச் சான்றிதழைப் ((SLS ISO 9001:2015) பெற்ற முதல் இஸ்லாமிய கலாபீடமாகவும் இது திகழ்கின்றது.

வருடாந்தம் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் தோற்றி க.பொ.த உயர்தரம் கற்க தகுதி பெற்றவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டு எழுத்து மற்றும் நேர்முகத் தேர்வின் மூலம் மாணவியர் உள்வாங்கப்படுகின்றனர். தற்போது நாட்டின் அனைத்து பகுதியிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட 160 மாணவியர் இந்நிறுவனத்தில் தமது கற்கையை தொடர்கின்றனர்.

## கல்விசார் ஊழியர்கள்

1. ஏ.எச். ஜனுல்லாஹ் (Nulari) MBA
2. எம்.எஸ்.எம். ராஜுஸ் (அஸ்ஹரி) MA Al Azhar University
3. ஏ.ஜி.எம் அஸ்ஹர் (நளீமி) BA University Of Peradeniya
4. ஏ.எஸ்.எம் இப்ஹாம் BA Islamic University of Madeena
5. ஏ.டபிள்யு.எப் ஹஸ்னா (அல்ஆலிமா) BA UAE University
6. ஏம்.ஆர்.எப் ஹனூனா (ஹாதி) BA(Hons) South Eastern University Of Srilanka
7. கே.நஸ்மிலா (ஹாதி) BA Eastern University Of Srilanka
8. ஏம்.டீ ரிகாஸா Higher National Diploma In Information Technology

## கல்விசாரா ஊழியர்கள்

1. எப். பரீஸா பானு (ஹாதி) –Diploma In Library Management நூலகப்பொறுப்பாளர்
2. ஏம்.ஏ ரஹீனாபேகம் கணக்காளர், HNDA
3. எம்.எப்.எப் நுஹா (ஹாதி) –BA(Hons) EUSL – Student Affairs
4. எம்.எம் ஹைருன்னிஸா –Diploma in HRM விடுதிப் பொறுப்பாளர்
5. ஏம்.வை நுஸ்ரா யாஸீன் Cook
6. ஏம்.ஐ. யாஸ்மி – Cook
7. ஏம்.எஸ். ஏம் தாஹிர் Security Guard
8. ஏ புர்ஹானுதீன் Security Guard

## பணிப்பாளர் சபை உறுப்பினர்கள்

01. அஷ்ஷெய்க் எம்.எச்.எம். றியாழ்தீன் (நளீமி), தலைவர். (SLAS) MA in Public Administration
02. எஸ்.டி.எம். தாஹா (JP) உப தலைவர்
03. எஸ்.எல்.எம். பாயிஸ் (MA) SLEAS செயலாளர்
04. அஷ்ஷெய்க் எம்.ஐ.எம். இஸ்ஸத் (BA) தனாதிகாரி
05. ஏ.எல்.ஏ. றஸ்ஸாக் (BA) ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர்
06. அஷ்ஷெய்க் எஸ்.எம். அன்வர் சதாத் (நளீமி) (BA)
07. மௌலவி எம்.எம். நவாஸ்
08. அல்ஹாஜ் எம்.ஸீ.எம். ஹனீபா

இதன் கலைத்திட்டம் 05 வருட பாடத்திட்டத்தைக் கொண்டுவடிவமைக்கப்பட்டுள்ளது. முதல் 04 வருடங்களில் அரபு மொழி, அகீதா,பிக்ஹு, தப்ஸீர், ஹதீஸ், உஸூலுல் பிக்ஹ், உலூமுல் குர்ஆன் போன்ற பலபாடங்கள் போதிக்கப்படுகின்றன. அத்தோடு, நான்காம் வருடத்தில் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுகின்றனர். இறுதி வருடமான ஐந்தாம் வருடத்தில் மாணவிகள் விஷேடமாக இஸ்லாமிய குடும்பவியல் (உலூமுல் உஸ்ரா) எனும் கற்கை நெறியைப் பூர்த்தி செய்கின்றனர்.

இதில், இஸ்லாத்தில் திருமணம், கணவன் மனைவிக்கிடையிலான அன்பை வளர்த்தல், குழந்தை வளர்ப்பு, குடும்பத்தின் சமநிலை, குடும்ப வழிநடாத்தலின் கட்டங்கள் போன்ற உப அலகுகள் கற்பிக்கப்படுகின்றன.

அதேபோன்று, ஹாதியா கலைத்திட்டத்தின் சில பயிற்சி நெறிகளுக்கு தொழிற் கல்வி நிறுவனத்தின் NVQ சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. மேலும் இங்கு தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம், தையற் பயிற்சி, சமையல் பயிற்சி மற்றும் முன்பள்ளிப் பயிற்சிப் பாடநெறி ஆகிய துறைகளிலும் மாணவிகள் பயிற்றுவிக்கப்படுகின்றனர்.

முறைசார் கல்விச் செயற்பாடுகள் சீராக நடைபெறுவது போல முறைசாரா கல்விச் செயற்பாடுகளும் நடைபெறுகின்றன. மாணவிகளின் எழுத்துத்துறை, பேச்சுத் துறை, தலைமைத்துவப் பயிற்சிப் பாசறைகள், வருடாந்த கல்விச் சுற்றுலாக்கள், விளையாட்டுப் போட்டிகள் போன்ற பல நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டு மாணவிகள் அனைத்துத் துறைகளிலும் ஊக்குவிக்கப்படுகின்றனர். இதன் தற்போதைய பணிப்பாளராக இந்நிறுவனத்தின் முகாமைத்துவ சபைத் தலைவராகிய அஷ்ஷெய்க் எம்.எச்.எம். ரியாழ்தீன் (நளீமி) கடமையாற்றுகிறார். அதேபோன்று அஷ்ஷெய்க் அக்ரம் அப்துஸ்ஸமத் (நளீமி), அஷ்ஷெய்க் நவாஸ் (நளீமி) ஆகியோரும் இந்நிறுவனத்தின் முன்னாள் அதிபர்களாக கடமையாற்றியுள்ளனர்.



கலாநிதி இப்ராஹீம் ஸகரிய்யா மூஸா (பிரதம அதிதி, உப வேந்தர், இஸ்லாமிய பல்கலைக்கழகம், மாலைதீவு)

ஹாதியா இஸ்லாமிய நிறுவனத்தின் முதலாம் பட்டமளிப்பு விழா 2016 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24ஆம் திகதி நடைபெற்றதுடன் அதில் 71 பட்டதாரிகள் பட்டம்பெற்று வெளியாகியுள்ளனர். இதன் இரண்டாம் பட்டமளிப்பு விழா 2019ஆம் ஆண்டு மார்ச் மாதம் 3ஆம் திகதி நடைபெற்றதுடன் அதில் 114 பட்டதாரிகள் பட்டம் பெற்று வெளியாகியுள்ளனர்.

இதன் மூன்றாவது பட்டமளிப்பு விழா 2024ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 24ஆம் திகதி (அதாவது நாளை) சனிக்கிழமை நடைபெறவுள்ளது. இதில் 142 பட்டதாரிகள் பட்டம் பெறவுள்ளனர். இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மாலைத்தீவைச் சேர்ந்த, மாலைத்தீவு இஸ்லாமிய பல்கலைக் கழகத்தின் முன்னாள் உபவேந்தரும், தற்போதைய மாலைத்தீவு பல்கலைக்கழகங்களின் கல்விசார் ஆய்வுகள் பிரிவின் தலைவராகவும் கடமையாற்றுகின்ற கலாநிதி இப்றாஹீம் ஸகரிய்யா மூஸா அவர்கள் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

அன்றையதினம் பட்டமளிப்பு விழா நிகழ்வினைத் தொடர்ந்து ஹாதியா இஸ்லாமிய நிறுவன வளாகத்தில் பிரதம அதிதிகளின் தலைமையில் பல்நோக்குக் கட்டிடம் (MultiPurpose Building) ஒன்று அமைப்பதற்கான அடிக்கல் நடும் வைபவமும் இடம்பெறவுள்ளது.

இவ்வாறான அபிவிருத்தி செயற்பாடுகளுடன் பயணிக்கும் எமது கலாபீடத்தை சிறப்பான முறையில் நடாத்திச் செல்வதற்கு சிறந்த நிர்வாகக் குழுவும், தேர்ச்சிபெற்ற துறைசார் ஆசிரியர் குழாமும் கல்விசாரா ஊழியர்களும் பங்காற்றிக் கொண்டிருக்கின்றனர். எதிர்வரும் காலங்களில் ஹாதியா இஸ்லாமிய நிறுவனம் கல்வித்துறையில் முக்கிய பங்காற்ற வேண்டும் என்ற அவாவுடன் இறைவனை பிரார்த்தித்துக் கொள்கின்றோம்.



## ஹாதியா இஸ்லாமிய நிறுவனத்தின் பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம்.எச்.எம் ரியாழ்தீன் (நளீமி)



ஹாதியா இஸ்லாமிய நிறுவனமானது பெண்களுக்கான உயர் இஸ்லாமிய கலாபீடமாகும். இதன் மூன்றாவது பட்டமளிப்பு விழாவையொட்டி வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் மகிழ்ச்சி அடைகிறேன். இவ்விழாவின் பிரதம அதிதியாக மாலைதீவு இஸ்லாமிய பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தர் கலாநிதி இப்ராஹீம் ஸகரிய்யா மூஸா மற்றும் கௌரவ அதிதியாக கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்ட பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஷாமிலா தாவூத், விஷேட அதிதியாக எடின்பொரோ தனியார் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் அல்ஹாஜ் ஆர்.பீ.எம் ஸல்மி ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

2006 ஆம் ஆண்டு பெண்களுக்கென ஆரம்பிக்கப்பட்ட இக்கல்லூரி அல்லாஹ்வின் பேரருளால் அதன் 18ஆம் ஆண்டில் காலடியெடுத்து வைத்திருக்கும் சந்தர்ப்பத்தில் இவ்விழா ஏற்பாடு செய்யப்பட்டிருப்பது ஒரு விஷேட அம்சமாகும். ஹாதியா கலாபீடத்தைப் பொறுத்தவரை இதுவரை காலப் பகுதியினுள் அடைந்திருக்கும் அடைவுகளோ மிகப் பாரியதாகும். குறிப்பாக 2023ம் வருடம் வரை 328 மாணவிகள் ஹாதியாவில் கற்கை நெறியை பூர்த்தி செய்து வெளியேறியுள்ளனர்.

இவர்களில் அதிகமானோர் பல்கலைக்கழகங்களில் உயர்கல்வியை தொடர்வதோடு தொழில் புரிபவர்களாகவும் சன்மார்க்கப் பணிகளில் ஈடுபடுபவர்களாகவும் உள்ளனர். இந்நிறுவனமானது ஒரு பெண்ணை ஆலிமாவாக இஸ்லாமிய கற்கைத் துறையில் தேர்ச்சி பெற்றவளாக சிறந்த தாயாக உருவாக்குவதற்கு முயற்சிக்கின்றது. இதன் பணி தொடர வேண்டுமென வாழ்த்துகிறேன். அதேபோன்று இம்முறை பட்டம் பெற்று வெளியேறும் ஹாதியாவின் பட்டதாரிகள் அனைவரும் அதன் இலக்கை சமூகத்துக்கு எத்தி வைப்பார்கள் என்ற நம்பிக்கையும் எனக்கு உண்டு. அவர்களை மனதார வாழ்த்துவதோடு அல்லாஹ்வின் பாதையில் பணி செய்ய அனைவருக்கும் அவன் அருள் புரிய வேண்டும் என பிரார்த்தித்துக் கொள்கின்றேன்.



## Graduates List

### 2019 / 2020 Batch

1. NijamAakilaBaanu – Edandawela, Kurunegala
2. AslamFathimaAsra – Nagavillu, Palavi
3. KiyasKanzulAfra – Rambukkana
4. SahranFathimaAshfa – Thihariya
5. Mohamed Fathima – Minuwangoda
6. WazeerFathimaRimza – Nangalla, Thulhiriya
7. Kareem FathimaInaya – Mahapothana, Anuradapura
8. FareedFathimaFaheema – Trincomalee
9. ThajudeenFathimaAakila – Kinniyama
10. JaleelFathimaRifka – Kureekotuwa
11. HussainAafrinBanu – Kalpitiya
12. JaleelFathimaJazalah – Arakkiyala
13. AzmyAyshaAzmy – Thalgaspitiya
14. KabeerFathimaSafna – Pothuhara, Kekunugolla
15. FaizalFathimaFarha – Ambalantota
16. YoosufFathimawaseema – Pubbogama, Kekirawa
17. Ali FathimaZumra – Trincomalee
18. AnasFathimaAfra – Thihariya
19. AlahudeenAathifa – Madipola, Matale
20. RuzaikFathimaRushdha – Hettipola
21. FahrySulaihaZikra – Kalpitiya
22. HussainSameera – Ibbagamuwa
23. LafirdeenMursidha – Yatiyanthota
24. UwaisFathimaRaheema – Panadura
25. IshaqNifahaFarwin – Bibille
26. ArifSheemaAshrin – Galgamuwa
27. JabbarFathimaSumaiya – Pothuhara, Kekunugolla
28. ShiyadFathimaShifna – Kureekotuwa
29. NawasFathimaNihla – Pothuhara, Kekunugolla
30. RafeekFathimaAzka – Ibbagamuwa
31. ThowfeekFathimaAzka – Kinniya
32. Jawzi F. Fahma – Siyambalagaskotuwa
33. NaseerMinnath Sara – Eravur

### 2020 / 2021 Batch

1. AjahirFathimaAmeera – Nuracholai, Puttalam
2. Ahmed LebbeF.Mubeena – Katankudy
3. NawasirFathimaNasla – Kureekotuwa
4. FajrdeenFirdowsiya – Siyambalagaskotu
5. JailabdeenPathimaSameera – Madipola, Matale
6. IlyanAsra – Polannaruwa
7. NawasFathimaHasna – Galgamuwa
8. JaleelFathimaZikra – Kahatowita
9. Abdul Wahid Nasooja – Mullipothana, Trincomalee
10. Abbas FathimaAneeqa – Kattankudy
11. AnsarAshfanaBanu – Kekirawa
12. Nasabdeen F. Shamla – Edandawela, Kurunegala
13. FawsarFathimaFayika – Penthanigoda, Narammala
14. Abdullah Sahib F. Nazra – Haputhal
15. SiddeekFathimaRizna – Borogas, Nuwara Eliya
16. AadhamPulle F. Sharmila – Pothuhara, Kekunugolla
17. MujebulRahmanFathimaNahdhiya – Galgamuwa
18. Abdul Hakeem Rizana – Maskeliya
19. FirdhausRumaiza – Baginigahawela, Bibille
20. JazeelFathimaZimara – Galewala
21. FouzarFathimaMasfa – Kattankudy
22. SuhurdeenFathimaSazna – Kanuketiya, Nikaweratiya
23. Sameer FathimaMurshidha – Mathawa, Kurunegala.
24. HizbullahHafsaBanu – Baginigahawela, Bibille
25. SehusainFasnaFarvin – Thorakotuwa, Kuliyapitiya.
26. SafwanF. Munshifa – Paragahadeniya
27. SaheedFathimaSafrina – Moratuwa

### 2021 / 2022 Batch

1. HussainFathimaHaseeba – Eravur
2. RazikIlmiya – Maradankadawala
3. AadhampulleMushfira – Paragahakotuwa, Siyambalagaskotuwa
4. Fawzer F. Farwina – Paragahakotuwa, Siyambalagaskotuwa
5. NaseerAathifa – Paragahakotuwa, Siyambalagaskotuwa
6. MusthafaRifasa – Polannaruwa
7. NajeemSameena Begum – Padukka
8. ShafiFathimaNihra – Ulukkaappallam, Palavi
9. Mohammed Jinnah MisbahBanu – Pothuhara, Kekunugolla
10. Mohideen F. Wafa – Galloluwa, Minuwangoda
11. NayeemFathimaAfrah – Elabadagama
12. ShahulHameedF.Hadhiya – Kekunagolla
13. AnsarFathimaAksha – Dodangaslanda
14. UsmanAaliya – Bandarakoswatha
15. AmeenullaSabiraAmeen – Madawala
16. NiyasJumana – Nuraicholai, Puttalam.
17. Naleemdeen F. Nisla – Sangattikkulam, Anamaduwa.
18. RaheemFathimaRusdha – Polgahayaya, Narammala
19. YawanisZafsath Minas – Elabadgama
20. Udhumalebbe F. Raseeka – Kekunagolla
21. FaseehFarha – Viyangalla
22. Jabir FathimaShifna – Galpanawa, Nikaweratiya.
23. Halaldeen F. Hashmath – Panagamuwa
24. NihfarFathimaNishma – Pugoda
25. NidawsSabeeha – Maho
26. Jabir FathimaHafsa – Kinniya
27. SainudeenFathimaAsna – Narammala
28. AfwanFathimaAzeera – Minuwangeta
29. Ismail FathimaRushdha – Kureekotuwa
30. ThowseerdeenF.Azaima – Trincomalee
31. AnasFathima Sana – Panagamuwa
32. MinuskeenAaraFathin – Puttlam
33. MahroofFathimaSahla – Horambawa

### 2022 / 2023 Batch

1. Kaleelurrahman F. Afla – Horambawa
2. YawanisMunazza – Elabadagama
3. ShifanRamla – Thelliyagona, Kurunegala.
4. Abdul GafoorNidhaul Islam – Kinniya
5. NaseemFathimaNusha – Edandawela, Kurunegala.
6. Siddeeque F.Saleema – Kinniyama
7. Abdul Hani Amsinisha – Mullipothana
8. MuzammilF.Sahla – Siyambalagaskotuwa
9. RiyasZainabRifa – Kureekotuwa
10. NiyasFathimaNafla – Thampalagama, Trincomalee
11. Husain FathimaHumaida – Poowella
12. Abdul HameedF.Faroosiya – Polanaruwa
13. FarhanFathimaFasra – Elabadagama
14. JaleelFathimaRihama – Panthanigoda, Narammala
15. Mubarak FathimaAfrosa – Ettalai
16. ZarookFathimaSafa – Kureekotuwa
17. IsfarFathimaHaseena – Galewala
18. ShafeeqFathimaHafsa – Nuwara Eliya
19. FayizFathimaSasna – Silawathurai, Mannar
20. RawsanFathima Hana – Rideegama
21. NiroosFathimaNifla – Thithawelgala
22. IlyasFathimaRimasa – Galpanawa, Nikaweratiya.
23. RizviAzeezAyshaRahmath – Panadura
24. Mohamed NafeelNabeela – Kal Eliya
25. Abdul AzeezFathimaAfra – Siyambalagaskotuwa

### 2023 / 2024 Batch

1. Mubarak Nadha – Hemmathgama
2. Imran Mafaza – Siyambalagaskotuwa
3. RayeesNadha – Nagavillu, Puttalam
4. IqbalNusrath – Kahatagasdigiliya
5. KamardeenShameela – Kinniya
6. NausarHafsa – Kal Eliya
7. AlabdeenHaska – Paragahakotuwa, Siyambalagaskotuwa.
8. NifardeenNaziha – Gelioya
9. KamsilNasiya – Eravur
10. NasarRanaDhilfar – Kinniya
11. Anwar Amna – Dambadeniya
12. Abdul Baree Amana – Thihariya
13. NawasHafsa – Minuwangoda
14. FareesHusna – Kalmune
15. NilamNishma – Dambadeniya
16. WaseemNuha – Poogoda
17. JawahirNuha Maryam – Hasgampola, Siyambalagaskotuwa.
18. NihmathullahRushda – Kinniya
19. SifanSafiyya – Thelliyagona, Kurunegala.
20. SirajudeenSafiyya – Galewela
21. IqbalZainab – Panadura
22. FarookAfra – Kithalawa, Kuliyapitiya.
23. HamzaHifla – Madalassa, Kekunugolla
24. IqbalZulfana – Kekunugolla

# நாட்டின் எதிர்காலத்தை பொறுப்பேற்க பொருத்தமான வேட்பாளர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மாத்திரமே!

## முன்னாள் அமைச்சர் எஸ். பி. நாவின்ன

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே நாட்டின் எதிர்காலத்தைப் பொறுப்பேற்க மிகவும் பொருத்தமானவர் என முன்னாள் அமைச்சர் எஸ். பி நாவின்ன தெரிவித்தார்.

இந்நாட்டில் ஏற்பட்ட நெருக்கடிக்குப் பின்னர், கடந்த இரண்டு வருடங்களில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டுக்காக ஆற்றிய பணிகளை இந்நாட்டின் அனைத்துப் பிரஜைகளும் மறந்துவிடக் கூடாது எனவும் முன்னாள் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

கொழும்பு 07, பிளவர் வீதியில் அமைந்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஜனாதிபதித் தேர்தல் செயற்பாட்டு அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் (21) நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்ட போதே முன்னாள் அமைச்சர் எஸ். பி. நாவின்ன இதனைக் குறிப்பிட்டார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க ஒன்றிணைந்த ஐக்கிய மக்கள் சக்தியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் விக்டர் ஸ்டென்லி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரசாரச் செயலாளர் யு. எல். எம். என். முபீன், ஸ்ரீ டெலோ அமைப்பின் தலைவர் பரராஜசிங்கம் உதயராசா ஆகியோரும் இந்தச் செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றினர்.





இங்கு மேலும் உரையாற்றிய முன்னாள் அமைச்சர் எஸ். பி. நாவின்ன குறிப்பிட்டதாவது:

“நான் 1989 முதல் 2020 வரை அரசியலில் ஈடுபட்டேன். நாட்டின் தற்போதைய நிலைமையின் கீழ் இந்நாட்டின் எதிர்காலத்தை மேம்படுத்துவதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை உறுதிப்படுத்துவதற்காகவே 4 வருடங்களுக்குப் பிறகு, நான் மீண்டும் அரசியலுக்கு வந்தேன்.

இந்த வருடம் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களில் அவர் மிகச் சிறந்த வேட்பாளர். அன்று இந்நாட்டை பொருளாதார ரீதியாக வங்குரோத்து நிலைக்கு இட்டுச்செல்ல யார் செயற்பட்டார்கள் என்பது அனைவருக்கும் தெரியும்.

அதன்போது, நாடு மீண்டும் வரிசை யுகத்திற்குச் சென்றது. இன்று மேடைகளில் சிலர் பல விடயங்களைக் கூறினாலும் அவர்களில் எவரும் அன்று இந்த நாட்டைக் கட்டியெழுப்பும் பொறுப்பை ஏற்கவில்லை.

அன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்நாட்டைக் கட்டியெழுப்பும் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். அவர் அன்றிருந்த வரிசை யுகத்தை முடிவுக்குக் கொண்டு வந்தார். அத்துடன் கடந்த இரண்டு வருடங்களில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்நாட்டிற்கு ஆற்றிய சேவைகளை எந்தவொரு பிரஜையும் மறந்துவிடக் கூடாது.

குருநாகல் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய அரசியல்வாதி என்ற வகையிலும், முன்னாள் அமைச்சர் என்ற வகையிலும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை மாபெரும் வெற்றியாக மாற்றுவதற்கு அவசியமான அதிகபட்ச ஆதரவை வழங்குவேன் என்பதை நான் இங்கு தெரிவிக்கிறேன்".

**விரக்தியடைந்திருந்த மக்களுக்கு எதிர்காலம் பற்றிய நம்பிக்கையை வழங்கியவர் ஜனாதிபதி - ஐக்கிய மக்கள் சக்தியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் விக்டர் ஸ்டான்லி**

ஐக்கிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் விக்டர் ஸ்டான்லி:

“கடந்த இரு வருடங்கள் எவ்வாறு இருந்தது என்பது நாட்டு மக்களுக்குத் தெரிவும். வரிசை யுகத்துக்குள் மக்கள் சிக்கித் தவித்த போது, நாட்டை பொறுப்பேற்றுக்கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நம்பிக்கை இழந்திருந்த நாட்டு மக்களுக்கு நம்பிக்கை கொடுக்கும் வகையில் வரிசைகளுக்கு முடிவு கட்டினார்.

தேர்தல் காலங்களில் பல வாக்குறுதிகளை வழங்கி பலர் மக்களை ஏமாற்றுவர். எனவே போலியான அலைகளின் பின்னால் சென்று மீண்டும் வரிசை யுகம் தோன்ற வழி வகுக்கக் கூடாது. அதனால் நாட்டினதும் நாட்டு மக்களினதும் எதிர்காலத்திற்காக ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவளிக்க தீர்மானித்தோம்".

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரசாரச் செயலாளர் யூ.எல்.எம்.என்.முபீன்:

"மட்டக்களப்பில் முஸ்லிம் காங்கிரஸின் செயற்பாட்டாளர்கள் பலரும் ஜனாதிபதிக்கு ஆதரவளிப்பர். கிழக்கு மாகாண மக்களின் பிரச்சினைகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் மட்டுமே தீர்வு வழங்க முடியும்.

இரண்டு வருடங்களுக்கு முன்னதாக நாட்டு மக்கள் பல்வேறு கஷ்டங்களை அனுபவித்தனர். அன்றிருந்த நிலையை விடவும் இன்றைய நிலைமை நல்லதாகவே உள்ளது.

அதனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நாட்டை முன்னேற்றுவதற்கான திட்டம் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட வேண்டும். இந்தப் பயணம் தடைப்பட்டால் நாடு மீண்டும் சரிவடையும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டு மக்களின் பொருளாதாரம், சமூகப் பிரச்சினைகளைப் புரிந்துகொண்ட தலைவர். அவருக்கு சரியான அரசியல் நோக்கம் இருப்பதால் அவருக்கு நாம் ஆதரவளிப்போம். ஜனாதிபதியின் வெற்றிக்கும் வழி செய்வோம்".

டெலோ அமைப்பின் தலைவர் பரராஜசிங்கம் உதயராசா:

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் நாட்டைக் காப்பதாகச் சொன்ன தலைவருக்கு வாக்களித்தோம். ஆனால் அதற்கு மாறாக நாட்டின் பொருளாதாரம் சரிந்து வரிசை யுகம் தோன்றியது. மீண்டும் அந்த நிலைமை வரக்கூடாது.

எதிர்க்கட்சித் தலைவர்கள் நாட்டின் பொறுப்பை ஏற்க மறுத்த வேளையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நாட்டை பொறுப்பேற்றுக்கொண்டு நிலையான தன்மையை ஏற்படுத்தினார். சரிவிலிருந்து நாட்டை மீட்ட தலைவர் என்ற காரணத்தினாலேயே ஜனாதிபதிக்கு ஆதரவளிக்கிறோம். எதிர்காலத்திலும் அவராலேயே நாட்டை மீட்டெடுக்க முடியும்.

சஜித் பிரேமதாச வீடமைப்பு அமைச்சராக இருந்த காலத்தில் எங்கள் பகுதிகளில் ஆரம்பிக்கப்பட்ட வீடமைப்புத் திட்டங்கள் சாத்தியமாக நிறைவு செய்யப்படவில்லை. அப்போதே அமைச்சர் என்ற வகையில் அவர் தோற்றுவிட்டார். போலி வாக்குறுதிகளால் மக்களை ஏமாற்ற வேண்டாமென கேட்டுக்கொள்கிறோம்".



**ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயற்பாட்டாளர்கள் அதிகளவானோரின் ஆதரவு ஜனாதிபதிக்கு உள்ளது _ ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரசாரச் செயலாளர் யு. எல். எம். என். முபீன்**

**சஜித் பிரேமதாச அமைச்சராக இருந்த போது தோல்வியடைந்தார்_ ஸ்ரீ டெலோ அமைப்பின் தலைவர் பரராஜசிங்கம் உதயராசா**

*(ஜனாதிபதி ஊடகப் பிரிவு)*

# மாகாணசபைகளுக்கு பொலிஸ், காணி அதிகாரங்களை வழங்க முடியாது!

## நாமல் ராஜபக்ஷ

தேர்தல் காலத்தில் வடக்கில் உள்ளவர்களை ஏமாற்ற வேண்டிய தேவை கிடையாது. முடிந்ததை முடியும் என்பேன், முடியாததை முடியாது என்பேன். தமிழர்களின் கலாசாரத்தைப் பாதுகாப்பேன். மொழி உரிமையும் வழங்குவேன். ஆனால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தை ஒன்றிணைத்து காணி மற்றும் பொலிஸ் அதிகாரத்தை ஒருபோதும் வழங்க மாட்டேன் என பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் முதலாவது பிரசாரக் கூட்டம் கடந்த புதன்கிழமை அநுராதபுரம் நகரில் இடம்பெற்றது. இதன்போது உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன இந்த நாட்டின் அரசியல் வரைபடத்தை மாற்றியமைத்தது. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தேசிய உற்பத்திகளை முன்னிலைப்படுத்திய பொருளாதார திட்டங்களை முன்னெடுத்து குறுகிய காலத்தில் நாட்டை பல்வேறு துறைகளில் முன்னேற்றினார்.

2015 ஆம் ஆண்டு பொருளாதார ரீதியில் முன்னேற்றமடைந்த நாட்டை கையளித்தோம். 2019 ஆம் ஆண்டு பொருளாதார மட்டத்தில் பாதிக்கப்பட்டிருந்த நாட்டையே கோட்டபய ராஜபக்ஷ அரசாங்கத்தை பொறுப்பேற்றார். பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் கொவிட் பெருந்தொற்றுத் தாக்கத்துக்கும் முகங்கொடுக்க நேரிட்டது. பொருளாதாரமா அல்லது மக்களின் உயிரா என்ற தீர்மானமிக்க கேள்வி எழுந்த போது மக்களின் உயிரையே பாதுகாத்தோம்.

நாட்டின் தேசியத்துக்கும், இராணுவத்தினருக்கும் எதிரான தீர்மானங்களை ஒரு போதும் எடுக்க முடியாது. சந்தர்ப்பவாத அரசியலில் ஈடுபடவும், குறுகிய நோக்கங்களுக்காக செயற்படவும் நாங்கள் தயாராகவில்லை என்பதால் தனித்து தீர்மானங்களை எடுத்துள்ளோம். சவால்களை கண்டு நாங்கள் அச்சமடையவில்லை. சவால்களை நான் விரும்புகிறேன். எவர் மீதும் சேறு பூசவில்லை. கொள்கைகளை முன்னிலைப்படுத்தி செயற்படுகிறோம்.





தேசிய உற்பத்திகளை நிச்சயம் மேம்படுத்துவோம். விவசாயத்துறையில் இருந்து எமது தேசிய உற்பத்தி எழுச்சியை முன்னெடுப்போம். விவசாயிகளை ஊக்குவிப்பதற்கு முழுமையான ஒத்துழைப்பினை வழங்குவோம். கடன் பெற்று உணவு வழங்குவது சிறந்த பொருளாதார கொள்கையல்ல, விவசாயிகளின் பொருளாதாரத்தை பலப்படுத்துவோம்.

இலங்கை ஒற்றையாட்சி நாடு. நாட்டின் ஒற்றையாட்சியை பாதுகாக்கவே வீரர்கள் போரிட்டார்கள். நாங்கள் அரசியலில் இருக்கும் வரை இந்த நாட்டில் எல்லைக் கிராமங்கள் தோற்றம் பெறுவதற்கு இடமளிக்க போவதில்லை. இந்த பௌத்த நாட்டில் அனைத்து மதங்களுக்கும் முன்னுரிமை மற்றும் கௌரவமளிக்க தயார். அதனை செய்வோம். அதேபோல் மாகாண சபைக்கு பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை ஒருபோதும் வழங்கமாட்டோம். 2005, 2015ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட விவசாயக் கொள்கை, நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இளம் தலைமுறையினருக்கு நவீன விவசாயத்தை அறிமுகப்படுத்துவோம். மீண்டும் உர மானியம் வழங்க நடவடிக்கை எடுப்போம்.

சவால்களுக்கு நாங்கள் பயப்படவில்லை. நான் சவால்களில் வளர்கிறேன். அவற்றை என் தந்தையிடமிருந்து கற்றுக்கொண்டேன்".

# நாங்கள் ஒருபோதுமே பயந்து ஓடுபவர்களல்லர்

## அநுரகுமார திஸாநாயக்க

தேசிய மக்கள் சக்தியை சேர்ந்த நாங்கள் ஒருபோதுமே பயந்து ஓடுபவர்களல்லர். இந்தச் சவாலை நாங்கள் ஏற்றுக்கொள்வதும் பயந்தோடுவதற்காக அல்ல. நாங்கள் பொறுப்பினை ஏற்றுக் கொள்ளத் தயார்.

இவ்வாறு ஜனாதிபதி வேட்பாளர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைமைக் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

"அரசாங்கத்தை பொறுப்பேற்குமாறு ராஜபக்ஷக்கள் எங்களுக்கு அழைப்பு விடுக்கவில்லை. அதிகாரத்தை தாருங்கள் என்று ஜனாதிபதி கோட்டாபயவுக்கு கடிதம் அனுப்பினோம். அந்தக் கடிதம் கிடைத்தது என்று கூட எங்களுக்கு பதில் கிடைக்கவில்லை.

அத்துடன் தேசிய மக்கள் சக்திக்கு அதிகாரத்தை பெற்றுக்கொடுப்பது ஊழலுக்கும், மோசடிக்குமான முற்றுப்புள்ளி ஆகும். ஆகவே ராஜபக்ஷக்கள் ஒருபோதும் எங்களுக்கு அதிகாரத்தை கொடுக்கமாட்டார்கள்.

இந்த ஊடக சந்திப்புக்கான அழைப்பு விடுக்கப்பட்டமைக்கான காரணம் தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் இயக்கம் தொடர்பில் பதற்றமடைந்துள்ள குழுக்கள் முன்வைக்கின்ற குறைகூறல்கள் பற்றிய எங்கள் தரப்பிலான கருத்துக்களை முன்வைப்பதற்காகும். இந்த ஊடக சந்திப்பில் தேசிய மக்கள் சக்தியின் பல்வேறு பங்குதாரர்களான அமைப்புகளை பிரதிநிதித்துவம் செய்கின்ற தோழர்கள் பங்குபற்றுகிறார்கள். தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் இயக்கத்திற்கு நாங்கள் நீண்ட காலமாக தயாராகி வந்தோம். அதற்காக நாங்கள் பல்வேறு துறைகளை சார்ந்த அமைப்புக்களுடன் செயலாற்றி வந்தோம். சட்டத்தரணிகள் குழுக்கள், பொறியியலாளர்கள், கலைஞர்கள், தொழில்வாண்மையாளர்கள் இளைப்பாறிய முப்படை கூட்டமைப்பைச் சேர்ந்தவர்கள், அதைப்போலவே ஏனைய இளைப்பாறியவர்கள், வலது குறைந்தோர், கமக்காரர்கள், மீனவர்கள், இவர்கள் அத்தனைபேரையும் நாங்கள் திட்டமிட்ட அடிப்படையில் அணிதிரட்டி வருகிறோம்.

அதனால் மக்கள் பலமே எங்களின் சக்தியாக மாறியிருக்கிறது.



அதனால் நான் நினைக்கிறேன் இந்த தேர்தல் இயக்கத்தின் இந்த பாசறைகளின் பிரிகையிடலை உற்றுநோக்கினால் தேசிய மக்கள் சக்தியின் பலமான தன்மையும் அவர்களின் பலவீனமான தன்மையும் தற்போது நிரூபிக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க நாங்கள் கடந்த 17 ஆம் திகதி எங்களுடைய தோ்தல் இயக்கத்தை தென்னிலங்கையில் தொடங்கினோம். தங்காலை, மாத்தறை, காலியில் பிரதான கூட்டத்தொடர்களை நடாத் கிரிபத்கொட, கொலன்னாவ, கடுவெல மக்களை சந்தித்தோம்.

மக்கள் எம்மை நோக்கி பெருந்திரளாக அணிதிரண்டு வந்தார்கள். நாங்கள் ஒரு பலம்பொருந்திய இயக்கம் என்ற வகையில் இதற்கு முகம்கொடுத்திருக்கிறோம்.

இந்த நாட்டின் நாகரீகம், இந்த நாட்டின் ஒழுக்கநெறிகள் கட்டியெழுப்பப்பட்டுள்ள விதத்தை நன்றாக உணர்ந்து கொண்ட அரசியல் இயக்கமே நாங்கள். ஒவ்வொரு மக்கள் சமுதாயத்திற்கும் தனக்கென தனித்துவமான அடையாளங்கள் இருக்கின்றன.

தனித்துவமான கலாசார வைபவங்கள் இருக்கின்றன. தேசிய மக்கள் சக்தியின் எதிர்பார்ப்பு என்ன? தனித்துவமான கலாசார வைபவங்கள், சமய விழாக்கள், தனித்துவமான மதச்சம்பிரதாயங்கள் என்பவற்றை நன்றாக பாதுகாத்து, அவற்றுக்கு மதிப்பளித்து அவற்றை பாதுகாத்து வருங் கால சந்ததியினருக்கு ஒப்படைப்பதே தேசிய மக்கள் சக்தியின் நோக்கமாகும். எங்களுக்கு அனைவரையும் பாதுகாக்க வேண்டிய கடப்பாடு உண்டு" என்றும் அவர் தெரிவித்தார்.

# தலைவர் அஷ்ரஃப் அவர்களும் தவிசாளர் பாரூக் அவர்களும்

## சவால்களும் சாதனைகளும் 06

இலங்கையின் அரசியல் சூழலில் அரசியல் களத்தில் இருக்கும் அனைத்து மக்கள் பிரதிநிதிகள், அரசியலில் ஆர்வம் உள்ளவர்கள், மற்றும் இதர இளம் தலைமைத்துவ வழிகாட்டலுக்கான பயிற்சியைக் பெற்றுக் கொள்ளக் கூடிய நிறைந்த விடயங்கள் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தாபகத் தலைவர் எம். எச். எம். அஷ்ரஃப் அவர்களிடத்திலும் சரி அதன் தவிசாளர் எம். எச். பாரூக்கிடத்திலும் சரி இந்த இருவர்களிடையே அரசியல் பாடங்களை கற்றுக் கொள்ள முடியும். ஒன்று அவர்களுடைய அனுப முயற்சிகளை துருவித் துருவி ஆராயும் போது வெளிப்பட்டு நிற்கும் அரசியல் அறிவு ஒரு தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தை உருவாக்கியதைப் போல், துறைமுகத்தில் விகிதாசார எண்ணிக்கைக்கு ஏற்ப முஸ்லிம் இளைஞர்களுக்கு தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்ததைப் போல் கல்முனை சந்தாங்கேணி மைதானத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பெரும் பேராளர் மாநாட்டை அதன் தவிசாளர் எச். எம். பாரூக் தலைமையேற்று நடத்தியதைப் போல் அல்லது அன்றைய ஜனாதிபதி ஆர். பிரேமதாசவிடத்தில தாபகத் தலைவர் எம். எச். எம். அஷ்ரஃப் பின்தங்கிய மாவட்டங்களில் உள்ள மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் நுழைவினைப் பெற்றுக் கொள்வதற்கான வெட்டுப்புள்ளியை பெற்றுக் கொடுத்ததைப் போல், அத்தகைய சவால்களை வெற்றிகொள்வதற்கு அரசியல் நுண்ணறிவும் மதிநுட்பமும் அவசியமாக இருந்து கொண்டிருக்கிறது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தாபகத் தலைவர் எம். எச். எம். அஷ்ரஃப் அவர்களின் பாசறையில் வளர்ந்த ஹிஸ்புல்லாஹ், மட்டக்களப்பு புனாணையில் தனியார் பல்கலைக்கழகம் ஒன்றை உருவாக்குவதற்கு முனைந்த சமயத்தில் அவர் எதிர்கொண்ட சவால்களைப் போல் அரசியல் கல்வி அறிவின் பாடங்களைக் கற்றுக் கொள்ளலாம்.

மற்றையது அரசியல் ஊடாக மக்களின் உரிமைகள் அபிலாஷைகள், பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும் என்ற நோக்குடன் செய்யப்படும் முயற்சிகள். அரசியல் ஆர்வத்தையும் அரசியல் கனவுகள், நீண்ட கால இலட்சியம் அல்லது நோக்குடன் அதற்கான அறிவார்ந்த விடயங்களை தாபகத் தலைவர் எம். எச். எம். அஷ்ரஃப் மற்றும் தவிசாளர் எச். எம். பாரூக் ஆகியோருடைய அரசியல் பயணத்தின் மூலம் கற்றுக் கொள்ள முடியும். இதில் முக்கியமான விடயம் என்னவென்றால் சமகாலத்தில் அரசியலில் பிரவேசித்து களத்தில் செயற்படும் அரசியல் பிரமுகர்களுக்கும், இக்கட்சி சாராத ஏனைய கட்சிகளில் உருவான அரசியல் செயற்பாட்டாளர்களுக்கிடையே நிறைய வித்தியாசங்கள் உண்டு. ஒரு அரசியல்வாதியாக வர நினைப்பவர் அரசியலில் தம் சமூகம் சார்ந்த விடயத்தை தெளிவுற கற்றறிந்து இருக்க வேண்டும். அரசியல் பிரவேசித்ததன் ஊடாக சமூகம் சார்ந்த விடயங்களைப் பற்றிச் சிந்திப்பதற்கான திறனையும், அதற்கான நுட்பங்கள் உத்திகளை இலகுவாகக் கற்றறிந்து கொள்ள வாய்ப்பு அதிகம் இருக்கும்.

தாபகத் தலைவர் எம். எச். எம். அஷ்ரஃப் அவர்களுடன் இணைந்து அரசியல் பணிகளை ஆற்றிய முன்னாள் கென்யா நாட்டுத் தூதுவர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முன்னாள் தவிசாளர் சட்டத்தரணி எச். எம். பாரூக் தினகரன் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வி.

**ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் வளர்ச்சிக்காக ஆரம்பத்தில் கைகொடுத்து ஊக்குவித்தவர்கள் பலர் உண்டு. அதனால்தான் இக்கட்சி முஸ்லிம் மக்கள் மத்தியில் பிரபல்யம் அடையத் தொடங்கியது இருப்பினும் தவிசாளர் என்ற வகையில் தாபகத் தலைவர் எம். எச். எம். அஷ்ரஃபுடன் நெருங்கியப் பழகியவர் என்ற வகையில் உங்களால் எவ்வகையிலான இயன்ற பங்களிப்பை வழங்கியுள்ளீர்கள் என்று கூறுவீர்களா? அவருடைய நற்பண்புகள் குறித்தும் கூறுவீர்களா?**

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் ஆரம்ப கால அங்கத்தவர் என்ற அடிப்படையில் அஷ்ரஃப் மரணம் எய்தும் வரையிலும் அவருடன் மிகக் கிட்ட நெருங்கிச் செயற்பட்டவன் என்ற வகையில் எனக்கு கட்சிக்காக உழைத்த தொண்டர்கள் பற்றி மிக நீண்ட அனுபவம் இருக்கிறது. நான் கட்சியில் படிப்படியாக முன்னேறி தவிசாளர் பதவியைப் பெற்றுக் கொண்டவர் அல்ல.



திடீரென்று உயர் பதவியைப் பெற்றவன். ஏனென்றால் இந்தக் கருத்தை அஷ்ரஃப் கூறுவார். மனமுவந்து கட்சிக்காகவும் அஷ்ரஃப் அவர்களுடனும், ஏனையவர்களுடனும் பணியாற்றினேன். கட்சி சவால்களை எதிர்நோக்கிய போது எனது வாகனத்தைக் கொடுத்தும் கையில் உள்ள பணத்தைச் செலவு செய்தும் பங்களிப்புச் செய்துள்ளேன். கட்சி கீழே விழுந்து விடும் என்ற தருணத்தில் எனது வீட்டில் உயர் பீடக் கூட்டம் நடத்தப்பட்டது. மருதூர்க்கனி, ஹசன் அலி, எஸ். எம். ஏ. கபூர், டொக்டர் உதுமாலெப்பை, மசூர் மௌலான போன்ற ஆரம்ப கால உறுப்பினர்கள் எந்தவொரு பிரதி உபகாரமும் பாராமல் செய்த சேவையின் காரணமாகத் தான் கட்சி வளர்ந்தது. உண்மையில் ஆரம்ப கால கட்சியின் உயர் பீட உறுப்பினர்கள் அஷ்ரஃப் அவர்களின் தரத்தைப் பற்றி யோசிக்க வில்லை.

அவர் செய்யும் சேவையைப் பார்த்து இணைந்திருந்தார்கள். அதனால் கட்சி துரித மாக வளர்ச்சி பெற்றது.

அப்பொழுது அஷ்ரஃப் இடத்தில் இருந்த பண்பு கட்சிக்காக யார் யாரெல்லாம் தியாகம் செய்வார்களோ அவர்கள் எல்லோரையும் அணைத்துக் கொள்வார். அவர் மரணம் அடையும் வரையிலும் அந்த உயர்ந்த பண்பு அவரிடத்திலே இயல்பாகவே இருந்தது. அவர் யாரையும் பதராக நினைத்து ஒதுக்க மாட்டார். ஒரு கால கட்டத்தில் எமது கட்சியின் வளர்ச்சிக்குச் சவாலாக அப்போதைய மறைந்த அமைச்சர் ஏ. ஆர். எம். மன்சூர் செயற்பட்டார்.

**தாபகத் தலைவர் அஷ்ரஃபுக்கு அளிக்கப்பட்ட மகத்தான வரவேற்புப் பற்றிக் கூறுவீர்களா?**

நாம் எதிர்பாராதளவுக்கு மிகப் பிரமாண்டமான வரவேற்பு அளிக்கப்பட்டது என்று கூறலாம். அப்போது உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடைபெற்றது. அத் தேர்தல் பிரசாரப் பணிக்காக கண்டியில் இருந்து தலைவர் அஷ்ரஃப் எனது வாகனத்தில் சென்றார். அம்பாறை நகரைத் தாண்டினால் கண்ணுக்கு எட்டிய தூரம் எல்லாம் பச்சைப் பசேலெனக் காட்சியளிக்கும் வயல் வெளி. அங்குள்ள பிரதான வீதியானது சமவெளியிலே அமைந்துள்ளது.



எட்டிப் பார்த்தால் அந்தப் பாதையின் தூரம் புலப்படும். நாங்கள் அம்பாறையைத் தாண்ட அவரை அழைத்துச் செல்ல மக்கள் கூட்டம் தூரத்தில் இருந்து வருகை தந்திருந்தார்கள்.



நாங்கள் சென்ற வாகனத்தை மக்கள் சூழ்ந்து கொண்டார்கள். அப்பொழுது அங்கு சூழ்ந்து கொண்ட மக்களைப் பார்த்து அத்தனை நபர்களுடைய பெயர்களையும் சொல்லி அவர் உச்சரித்து அழைத்தார். அது எனக்கு வியப்பாக இருந்தது. அது ஒரு தலைவருக்கு இருக்க வேண்டிய மிக முக்கியமான உயர்ந்த பண்பு. எப்பொழுதும் எமது தொண்டர்களை அவர்களுடைய பெயரைச் சொல்லி அழைத்தால் அதை விட வேறு சந்தோசம் ஒன்றும் இல்லை என்பார்கள்.

பல நூற்றுக் கணக்கான வாகனங்கள் அந்த ஊர்லத்தில் பங்கேற்றிருந்தன. கண்ணுக்கு எட்டிய தூரமெல்லாம் வாகனம். அந்த இடத்தில் இருந்து ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டோம்.

அன்றைய தினம் சாய்ந்தமருதில் உள்ள தலைவர் அஷ்ரஃபுடைய மைத்துனர் ஓய்வு பெற்ற மறைந்த மர்ஹூம் நீதிபதி ஹுஸைன் அவர்களுடைய இல்லத்தில் தங்கியிருந்தோம். அங்கு சென்ற சமயம் ஒரு நாள் இரவு எனக்கு காய்ச்சல். கல்முனைக் குடி, சாய்ந்தமருது ஊர்களில் நடைபெற்ற கூட்டங்களுக்கு நான் செல்லவில்லை. கூட்டம் முடிந்து நீதிபதி ஹுஸைனுடைய இல்லத்திற்கு வந்தார்கள்.

என்னுடன் உடத்தலவின்னை நஜீப், அக்குறணை பங்கொள்ளாமட ஹமீட் மாஸ்டர் வந்திருந்தார்கள். தலைவர் அஷ்ரஃப் அவர்களை அழைத்துச் சென்றிருந்தார். அஷ்ரஃப் அவர்கள் கூட்டத்தை முடித்துக் கொண்டு வீடு வரும் போது வீட்டின் வாசலில் வைத்து தவிசாளருக்கு காய்ச்சல் தூங்குகிறார்.

யாரும் பேசக் கூடாது' என்றார். அவர்கூறிய குரல் எனக்கு கேட்டது. அவர் மற்றையவர்களுடைய உணர்வுகளை மதிப்பதில் எந்தளவு கரிசனை காட்டினார் என்பதை நாம் அறிந்து கொள்ளலாம்.

**உங்களுடைய தலைமைத்துப் பண்பை நன்கு அறிந்துதான் அஷ்ரஃப் கட்சியின் தவிசாளர் பதவியை வழங்கியிருந்தார். அந்த வகையில் நீங்கள் தீர்க்கமான முறையில் எடுத்த முடிவை அஷ்ரஃப் அவர்கள் அங்கீகரித்துள்ளார்களா?**

நிச்சயமா. அதாவது எந்தவொரு கூட்டம் நடந்தாலும் நான்தான் தலைமை தாங்குவேன். அந்தப் பழக்க வழக்கம் இன்னும் இருந்து கொண்டு இருக்கிறது. ஊரில் பொது விடயமாக இருந்தாலும் பள்ளிவாசல் விடயமாக இருந்தாலும் பாடசாலை விடயமாக இருந்தாலும், குடும்பப் பிரச்சினையாக இருந்தாலும் அந்தப் பொறுப்பை இன்று வரை செய்து கொண்டு இருக்கின்றேன்.

ஒரு தடவை தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை யாருக்குக் கொடுக்கலாம் என்ற கருத்து முரண்பாடுகள் இருந்தன. லிபரல் கட்சியைச் சேர்ந்த அசித பெரேரா என்ற சிங்கள சகோதரர் ஒருவருக்கு தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவிய வழங்க வேண்டும் என்ற எண்ணம் அவருடைய உள் மனதில் இருந்தது. இந்தப் பிரச்சினை இருந்து கொண்டிருக்கும் திடீரென கல்முனைக்குச் சென்று விட்டார். அங்கு இருந்து என்னிடம் 'எல்லோரையும் கூப்பிட்டு ஒரு முடிவினை எடுக்குமாறு' தெரிவித்தார்.

அந்த நேரத்தில் 90 விகிதமானவர்களுடைய கருத்துக்கள் அசித பெரேராவுக்கு அந்த நியமனம் வழங்குவதை விரும்பவில்லை. இந்த இடத்தில் எனக்கு ஓர் இக்கெட்டான நிலை ஏற்பட்டது. நான் மனச்சாட்சிக்கு விரோதமாக தீர்ப்புகள் வழங்குவதில்லை. எனினும் நான் மூன்று பேர்களின் பெயர்களை பரிந்துரை செய்தேன்.

இரு வருடங்கள் அந்த மூன்று பேரும் இடம்பெற வேண்டும் என்று பரிந்துரை செய்தேன். அவர் அதை ஏற்றுக் கொண்டார். அவருடைய சொந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி அவர் அசித பெரேராவை முதலில் நியமித்தார். ஏன் அதைச் செய்தார் என்றால் முஸ்லிம் காங்கிரஸ் கட்சி முஸ்லிம்களுடைய கட்சியாக இருக்க வேண்டும் என்பதற்காக அல்ல. அது எல்லோருடைய கட்சியாகவும் இருக்க வேண்டும் என்பதற்காகச் செய்தார். இக்கட்சியில் பௌத்த தேரர் ஒருவரையும் இணைத்துக் கொண்டார். அவர் முஸ்லிம் காங்கிரஸ் என்று பெயர் வைத்தாலும் ஏனைய சமூகத்தையும் உள்ளடக்கித்தான் செய்கின்றோம் என்று தொடர்ந்து செய்து காட்டினார். தலைவர் அஷ்ரஃபுக்கு ஆரம்ப காலத்தில் இருந்து ஏனைய சமூகங்களுடன் இணைந்து போக வேண்டும். ஒற்றுமையாகவும் பரஸ்பர நல்லெண்ணங்களுடன் சிநேகமாகவும் சக வாழ்வுடனும் வாழ வேண்டும் என்ற நல்ல மனப்பாங்கு இருந்தது.

முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம் தேசிய வாதத்தின் தனித்துவமான வடிவத்தைக் கொண்டிருக்கவில்லை. மாறாக தாபகத் தலைவர் அஷ்ரஃப் எல்லா இன மக்களுடைய மக்களுடனும் சமத்துவமாகப் பயணம் செய்ய வேண்டும் என்ற மனப்பாங்கு அவரிடம் அதிகளவு இருந்ததாக நம்பப்படுகிறது.

அதனால் தான் நுஆ என்ற கட்சியை உருவாக்கினார்.

**அதன் முதல் தலைவர் நீங்கள் அவற்றின் உருவாக்கம் பற்றிக் கூறுவீர்களா?**

முஸ்லிம் காங்கிரஸ் என்ற கட்சியுடன் மேலெழுந்து செல்லாமல் நுஆ என்ற கட்சியைத் தொடங்கினார். அது பரந்த எண்ணத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. இக்கட்சியை அசாத் சாலி எடுத்து நடத்தி வருகிறார். அதன் முதல் தலைவர் என்னைத் தெரிவு செய்தார். அதன் கொடியை நான்தான் ஏற்றினேன். அதற்கு நிறைய விமர்சனங்கள் இருந்தன. இரு வருடங்கள் அக்கட்சியின் தலைவராக இருந்தேன்.

எனினும் தலைவர் அஷ்ரஃப் ஒன்றைத் தீர்மானித்து விட்டார் எனில் இந்த வேலைக்கு இவர்தான் பொருத்தம் என்றால் அதை அவர் மாற்றமாட்டார்.

அவர் மனைவியால் கூட மாற்ற முடியாது. எனது காலத்தில் பெரியளவில் கட்சி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை. அவர் மனைவி அவர் உயிரிழந்த பின்பு தலைவியாக இருந்தார்.

அதன் மூலம் அவர் அமைச்சராக இருந்து நிறையப் பணிகள் செய்தார். கட்சியின் தலைமையகம் அமைந்துள்ள தாருஸ்ஸலாத்தின் இடத்தைப் பெற்றுக் கொள்வதற்காக லிபியா நாட்டின் ஊடாக எம். எம். சுஹைர் உதவி செய்தார்.

அந்த உதவி வழங்கியமைக்காக நன்றிக் கடனாக எம். எம். சுஹைருக்கு தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இரு வருடம் வழங்கினார்.

**(இன்னும் தொடரும்)**

நேர்காணல் இக்பால் அலி

## பாணந்துறை அல் பஹ்ரியாவில் இரு பெரும் விழாக்கள்

**(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)**

பாணந்துறை அல் பஹ்றியா தேசிய பாடசாலையின் மாணவர் தலைவர்களுக்கான சின்னம் சூட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை (23) நடைபெறவுள்ளதோடு கல்லூரியின் பரிசளிப்பு விழா2024 நிகழ்வு எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை (25) வைபவரீதியாக இடம்பெறவுள்ளது.

கல்லூரியின் அதிபர் எம்.ஐ.எம். ரிஸான் தலைமையில் இடம்பெறவுள்ள மாணவர் தலைவர்களுக்கான சின்னம் சூட்டு விழாவில் பாணந்தறை வடக்கு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சஞ்ஜீவ லக்மால் பிரதம அதிதியாக கலந்து கொள்ளவுள்ளார். சட்டத்தரணி பாத்திமா ஸுஹ்ரியா கௌரவ அதிதியாக கலந்துகொள்ளவுள்ளார். கல்லூரியின் 2024ஆம் ஆண்டுக்கான பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாக கல்வி அமைச்சின் முஸ்லிம் பாடசாலைகள் அபிவிருத்திப் பிரிவின் பணிப்பாளர் மேஜர் என்.டீ. நஸுமுதீன் கலந்துகொள்ளவுள்ளார். களுத்துறை வலய கல்விப் பணிப்பாளர் ஏ.யூ. விக்ரமாரச்சி விஷேட அதிதியாகவும் மற்றும் களுத்துறை வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.ஜெயகுமார் கௌரவ அதிதியாகவும் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

## திக்குவல்லை ஸும்ரியின் "நட்பு" சிறுகதைத் தொகுதி கொழும்பில் வெளியீடு

நாடறிந்த எழுத்தாளரும் நாடக ஆசிரியரும் வானொலிக் கலைஞருமான திக்குவல்லை ஸும்ரியின் "நட்பு" சிறுகதைத் தொகுதியின் வெளியிட்டு விழா எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு கொழும்பு, டீ.ஆர். விஜேவர்த்தன மாவத்தை தபால் திணைக்கள கேட்போர் கூடத்தில் வெகு விமர்சையாக நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரபல எழுத்தாளரும் கவிஞரும் நாவலாசிரியரும் பன்னூலாசிரியருமான திக்குவல்லை கமால் தலைமை வகிக்கவுள்ளார்.

பிரதம அதிதியாக கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் கலந்து சிறப்பிக்க உள்ளார்.

அத்துடன் இந்த நிகழ்வில் வாசனா தனியார் வைத்தியசாலையின் தலைவரும் தொழிலதிபருமான கலாநிதி ரம்ஸி அமானுல்லாஹ் விசேட அதிதியாக கலந்து கொள்வதோடு நூலின் முதற் பிரதியையும் பெற்றுக் கொள்வார்.

ஹிஜாஸ் சர்வதேச பாடசாலையின் தலைவர் என்.எம்.எம். ஹிஸ்புல்லாஹ் சிரேஷ்ட அதிதியாகவும் கௌரவ அதிதிகளாக சிரேஷ்ட சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ் மற்றும் சட்டத்தரணிகளான எம்.ஆர்.எம். ரம்ஸீன், சால்தீன் எம். ஸப்ரி ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

சிறப்பு அதிதிகளாக ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத் தலைவர் என்.எம். அமீன், முஸ்லிம் சேவைப் பணிப்பாளர் எம்.ஜே. பாத்திமா ரினூஸியா, ஒஸ்டம் நிறுவனத்தின் ஸ்தாபகத் தலைவர் எம்.எச்.எம். நஸார், எம்.வை.எம். இக்றாம், ஹிஜாஸ் சர்வதேச பாடசாலையின் பணிப்பாளர்களான ஸரீனா ஹிஸ்புல்லாஹ், ஹஸ்னா ஹிஸ்புல்லாஹ் இஃப்லால், டாக்டர் எம்.இஸட்.எம். இஃப்லால், கலைஞர் எம்.எஸ்.எம். ஜின்னா, டாக்டர் ஸஹாமா ஸப்ரீன், இல்ஹாம் மசூர் மௌலானா, தினகரன் ஆசிரிய பீடத்தின் சிரேஷ்ட ஊடகவியலாளர் ஷம்ஸ் பாஹிம், மௌலவி எம்.எஸ்.எம். சுல்தான், அஷ்ஷெய்க் முஹம்மத் பகீஹுத்தீன், சட்டத்தரணி அஷ்ஷெய்க் சமீல் எம். சுல்தான் ஆகியோர் கலந்துகொண்டு விழாவை சிறப்பிக்கவுள்ளனர்.




இந்த நிகழ்வினை செல்வன் தில்ஷாத் முஹம்மத் உமர் கிராஅத் ஓதி ஆரம்பித்து வைக்க, வரவேற்பு கீதத்தினை என்.எம். ஹிமாயத்துல்லாஹ் முன்வைப்பார். தொடர்ந்து வரவேற்புரையை திக்குவல்லை ஸப்வான் நிகழ்த்த, தலைமையுரையை திக்குவல்லை கமால் நிகழ்த்துவார்.

நூலாசிரியர் அறிமுகத்தை அதிபர் எம்.ஆர்.எம். ரிஸ்கி நிகழ்த்துவார். விடிவெள்ளிப் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் எம்.பி.எம். பைரூஸ் வாழ்த்துரை நிகழ்த்துவார். கவிதைப் பொழிவினை கவிஞர் எம்.எஸ். அப்துல் லதீப் மற்றும் கவிதாயினி வெலிகம ரிம்ஸா முஹம்மத் ஆகியோர் நிகழ்த்துவார்கள். சிறுகதை நூலாய்வினை கலாநிதி எம்.சி. ரஸ்மின் நிகழ்த்துவார்.

தொடர்ந்து சஞ்சாரம் 'பிஞ்சு மனம்' நிகழ்ச்சியை ஸஹாரா இஸ்பஹான், இஸ்ஸா இஸ்பஹான் ஆகியோர் வழங்குகின்றனர். தொடர்ந்து "நட்பு" சிறுகதை நூலிலிருந்து ஒரு கதையை தெரிந்து சொல்ல வருகிறார்கள் வானொலிக் கலைஞர்களான சில்மியா ஹாதி மற்றும் ஜுனைத் எம். ஹாரிஸ் ஆகியோர்.

பிரபல வானொலி சஞ்சாரம் சமூகச் சித்திரம் நிகழ்ச்சியை வானொலிக் கலைஞர்களான மஹ்தி ஹஸன் இப்றாஹீம், ஜெய் ரஹீம் ஷஹீத், திக்குவல்லை ஸப்வான் ஆகியோர் வழங்குவர்.

தொடர்ந்து ஏற்புரையை திக்குவல்லை ஸும்ரி நிகழ்த்த நன்றியுரையினை ரஹீமா ரம்ஸி வழங்குவார்.

(தகவல் ; பாரா தாஹிர்)

# இஸ்லாமிய சிந்தனையும் நவீன சவால்களும்

"இஸ்லாமிய சிந்தனையும் நவீன சவால்களும்" எனும் தலைப்பிலான விஷேட உரை நிகழ்ச்சியொன்று பேருவளை, ஸிமிச் (ZIMICH) வரவேற்பு மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (18) மாலை நடைபெற்றது.

அப்துல் காதிர் ஆலிம் அஹ்மத் ஸஹீல் (அல் அஸ்ஹரி) தலைமையில், காரி எம். ரஸீன் மௌலவியின் கிராஅத்துடன் ஆரம்பமான இந்நிகழ்வில், கட்டார் ஹம்மாத் பின் கலீபா சர்வதேச இஸ்லாமிய பல்கலைக்கழக மத ஒப்பாய்வுத் துறை மற்றும் இஸ்லாமிய கற்கை நெறித்துறை பேராசிரியர் கலாநிதி தீன் முஹம்மத் (அல்அஸ்ஹரி) விசேட பேச்சாளராக கலந்து கொண்டார். அன்னார் நிகழ்த்திய உரையை காலத்தின் தேவை கருதி தொகுத்து வழங்கப்படுகிறது.




இன்று உலகில் காணப்படுகின்ற சமூகத்தார்களில் மிகவும் சக்திவாய்ந்த உம்மத்தாக திகழ வேண்டியவர்கள் முஸ்லிம்களே. அத்துடன் பெரும்பான்மையான சமூகமாகவும், பொருளாதார செல்வத்தைக் குறிக்கும் எரிபொருள் வளம் மற்றும் ஆட்பலம் வசதி, வாய்ப்புகள் என்று மாற்றக்கூடிய பலம்வாய்ந்த உம்மத்தாக இருக்க வேண்டியவர்கள். ஆனால், சகல சமூகங்களாலும் நசுக்கி, அடக்கி ஒடுக்கப்படும் பரிதாபத்திற்குரிய உம்மத்தாகவும் முஸ்லிம்களே திகழ்கிறார்கள். இந்த சவாலை எதிர்கொள்ளக் காரணமென்ன?

இது குறித்து, நாம் அவசியமாகவும், அவசரமாகவும் சிந்திக்க கடமைப்பட்டுள்ளோம். முஸ்லிம் நாடுகளிலும் முஸ்லிம்கள் சிறுபான்மையாக வாழும் இந்தியா, இலங்கை உள்ளிட்ட நாடுகளிலும் முஸ்லிம்கள் அனுபவித்துக் கொண்டிருக்கும் துன்ப, துயரங்கள் குறித்து ஊடகங்கள் வாயிலாக அன்றாடம் கண்டும், கேட்டும் வருகிறோம். எமது தனித்துவத்தைக்காட்ட முடியாத இழி நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம். இந்த சவாலை வெற்றி கொள்வது எப்படி?



இஸ்லாமிய சிந்தனையில் ஈடுபடுகிறவர்கள் மேற்படி சவாலை சமாளிக்க முஸ்லிம் உம்மத்தினர்களுக்கு வழிகாட்ட வேண்டும். இந்த இடத்தில் இஸ்லாமிய சிந்தனை என்றால் என்ன? என்ற தெளிவு ஒவ்வொரு உம்மத்தினரிடையேயும் இருக்க வேண்டும். அது இல்லாததால் சவாலை வெற்றி கொள்ள முடியாத நிலையில் உள்ளோம்.

இஸ்லாமிய சிந்தனையாளர், புத்திஜீவிகள் எனப்படுவோர் உலகில் சகல நாடுகளிலும் காணப்படுகிறார்கள். ஆனால், முறையான சிந்தனை இன்றோ ஒற்றுமை குலைந்து, பிரிவுபட்டு ஒருவரோடொருவர் மோதிக் கொண்டும் இருப்பதற்கு சரியான சிந்தனைத் தெளிவின்மையே காரணமாகும். இவர்களை எப்படி இஸ்லாமிய சிந்தனையாளர் என்ற வட்டத்திற்குள் வைத்து கணிக்க முடியும்? தடியெடுத்தவர்கள் எல்லோரும் வேட்டைக்காரர்கள் என்ற நிலையைத்தான் தோற்றுவித்துள்ளது. இதனால் பிறரால் பணிவான பார்வையில் தான் எமது உம்மத் நோக்கப்படுகிறது. எனவே, இஸ்லாமிய சிந்தனை என்பதன் உண்மைத் தன்மையை உணர்ந்து அதனை முறையாகப் பேணுவதன் மூலமே வெற்றி நடை போடலாம்.

சமூகத்தால் அங்கீகரிக்கப்பட்ட உலமாக்கள் எங்களுக்கு வழிகாட்டிக்கொண்டிருக்கிறார்கள். இற்றைக்கு சுமார் 1400 ஆண்டுகளுக்கு முன்னர் "வஹி" மூலம் எல்லாம் வல்ல அல்லாஹ்வால் வகுத்தளிக்கப்பட்ட அல்குர்ஆனே எமது முதலாவது சிந்தனைக்குரிய மூலாதாரமாகும். அதற்கடுத்தபடியாக, குர்ஆன் போதனைக்கு ஏற்ப சொல், செயல் மூலம் வாழ்ந்து காட்டிய ரஸூல் (ஸல்) அவர்களின் சுன்னாவாகும். இவை இரண்டுமே எமது மூலாதாரங்களாகும். இவற்றுக்கு அடுத்தபடியாக, குர்ஆன், ஹதீஸ் எனும் ஸுன்னாவிலிருந்து உலமாக்கள் ஒன்றுபட்டு வெளியிடும் மார்க்க பத்வாவாகும். இது இஜ்மா என்று குறிப்பிடப்படுகிறது. இதற்கு அடுத்தபடியாக கியாஸ் எனும் ஆதாரம் அடங்குகிறது. இதுவும் குர்ஆன், ஸுன்னாவிலிருந்தே எத்தகைய பிசகுகளும் இன்றி எடுக்கப்படும் முடிவாகும். இந்த அடிப்படையில் நோக்கும் போது அல்குர்ஆனும், அல்ஹதீஸுமே அடிப்படை மூலாதாரங்களாகக் கொள்ளப்படுகிறது.

இது இவ்வாறிருக்க, நவீன லோகாயத வாதத்தால் ஈர்க்கப்பட்ட இஸ்லாமிய சிந்தனையாளர் எனப்படுவோர் ஷிர்க், பித்அத் எனக்கூறி வெளியிடும் கருத்துக்கள் உண்மையான இஸ்லாமிய சிந்தனைக்குட்பட்டவையல்ல. இவர்களின் கூற்று சரி என்றால் கிட்டத்தட்ட 1400 வருடங்களாக இவற்றைப் பின்பற்றியும், செய்தும் வந்தவர்கள் எல்லோரும் வழி தவறியவர்களா? என்ற வினா எழுகிறதல்லவா?

மனிதனைப் படைத்த அல்லாஹ், மனிதன் எவ்வாறு வாழ வேண்டும்?, எப்படி இயங்க வேண்டும்? என்று வழிகாட்டுவதற்காகவேதான் வேதங்கள், ஸுஹுபுகள் இவற்றை போதிக்க நபிமார், ரஸூல்மார்களை தந்தான். இந்த வரிசையில் வந்த இறுதி வேதம்தான் அல்குர்ஆன், வழிகாட்டி ரஸூல் (ஸல்) அவர்கள். எனவே, எமது வாழ்க்கை இந்த இரண்டு மூலாதாரங்களின் அடிப்படையில் அமைய வேண்டும்.

அடுத்து, இவற்றின் அடிப்படைகளிலிருந்து பெறப்பட்ட இஜ்மா, கியாஸ் மூலாதாரங்களாகவே அமைய வேண்டும். ஆனால், இன்று நடந்துள்ளதென்ன? அமெரிக்கா, ஐரோப்பா உள்ளிட்ட மேல் நாடுகள் முஸ்லிம்களின் சீரான சிந்தனைப் போக்குகளை திட்டமிட்டு மாற்றி விட்டார்கள். இந்த சிந்தனைத் தாக்கத்தாலேதான் குர்ஆன், ஸுன்னாவுக்கு புதுப்புது வியாக்கியானங்கள் கொடுக்கப்பட்டு திசை திருப்பப்பட்டுள்ளன. இதனால் பிளவும், பிரச்சினைகளிலும் சிக்கித் தவிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். மேல் நாட்டின் சதி வலையில் சிக்கியதன் பலனைத்தான் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம்.



குர்ஆன், ஸுன்னாவுக்கேற்ப எங்களை மாற்றியமைத்துக்கொள்ளாது, எங்களுக்குத் தேவையான நாம் விரும்பும் பகுத்தறிவுக்கு ஏற்றவாறு குர்ஆன், ஸுன்னாவுக்கு வியாக்கியானம் செய்து மாற்றியமைத்துக் கொண்டு தோல்வியின் பக்கம், தீமையின் பால் விரைந்து கொண்டிருக்கிறோம்.

மூளைச் சளவைக்குட்படுத்தப்பட்ட சிந்தனையாளர், புத்திஜீவி எனப்படுவோரால் அவர்கள் விரும்பும் இஸ்லாத்தை நிலை நிறுத்துவதற்காக எத்தனையோ பத்வாக்களை பகிர்ந்து நடைமுறைப்படுத்தி வருகிறார்கள்.

சர்வதேச தொலைக்காட்சியூடாக பச்சையாக ஹராமாக்கப்பட்டவற்றை ஹலால் படுத்தி வருகிறார்கள்.

ரஸூல் (ஸல்) அவர்களின் காலத்திலிருந்து, நான்கு கலீபாக்கள், தொடர்ந்து தாபிஈன்கள் என்று வரிசையில் வந்து ஏறக்குறைய 300 வருடங்கள் வரையில் இஸ்லாமிய உம்மத் இடையே இஸ்லாமிய சிந்தனை அடிப்படையில் குழப்பங்கள் தோன்றவில்லை. அதனால், முஸ்லிம்கள் உலகில் உன்னத நிலையில் வெற்றிப்பாதையில் வீர நடை பயின்றனர்.

மேற்கத்திய சிந்தனையின் தாக்கத்தால் வெளியிடும் புதுப்புது பத்வாக்களைக் கண்டு இந்த கருத்து அதபில்லை என்று மலேஷியாவின் மாபெரும் இஸ்லாமிய சிந்தனையாளரான செய்யத் முஹம்மத் நதீம் அவர்களை நவீன புத்திஜீவிகள் ஏற்றுக் கொள்வதில்லை. உண்மையான சீர்த்திருத்த வாதிகளை ஏற்காது புறந்தள்ளியமையே இஸ்லாமியர்களின் வீழ்ச்சிக்கு காரணமாகும்.

மேல் நாட்டு சிந்தனையில் அல்லாஹ் ரஸூலை தூரமாக்கக்கூடிய எத்தனையோ நூல்கள் வெளி வந்துள்ளன. இந்த வரிசையில் குர்ஆன், ஹதீஸை திருத்தி வாசிக்கவும், நவீன உலகுக்கு ஒத்துப்போகக்கூடிய வகையில் மாற்றியமைக்கவும் கூடிய வகையில் முஸ்லிம் புத்திஜீவிகள் மத்தியில் புதுப்புது சிந்தனைகள் வளர்க்கப்பட்டு வருகின்றன.

சில நூற்றாண்டுகளாக எமது பாரம்பரிய கலாசார பண்புகளோடு வாழ்ந்து வந்தோம். அவை படிப்படியாக மாற்றப்பட்டு, இன்று இழிவின் உச்சநிலைக்கே வந்து கொண்டிருக்கிறோம். அமெரிக்கா, ஐரோப்பா போன்ற மேல் நாடுகளைப் பின்பற்றும் நிலைக்கு வந்துள்ளோம்.

ஏன் குர்ஆன், ஸுன்னாவே எமது வழிகாட்டி என்பதற்கு படிப்படியாக பிரியா விடை கொடுக்கிறோம். இன்று மேல் நாடுகளில் குடியிருக்கும் கலாசாரம் வளர்ந்துள்ளது. அங்கு குடியேறிய முதல் சந்ததியிடம் 50 வீதமே சன்மார்க்க வழிமுறை இருக்கும் இரண்டாம் சந்ததியிடம் அதில் குறைவு கண்டு மூன்றாம் சந்ததியிடம் இஸ்லாமிய சிந்தனை அறவே அற்றுப்போகும்.

உலமாக்கள் நபிமார்களின் வாரிசுகள். அறிவும், தக்வாவும் உலமாக்களின் வாரிசுகள். இவ்வாறிருக்க அறிவை மதச்சார்பற்றதாக்கி விட்டார்கள். அறிவை மதத்தோடு தொடர்பற்ற ஒன்றாக்கி, மதத்தை தூரமாக்கி விட்டார்கள். இதனால், ஆத்மீக பண்பற்ற உலகத்தையே எதிர்காலத்தில் பார்க்கப்போகிறோம். இதன் விபரீத விளைவு என்னவாகும் என்பதை நினைத்துப் பாருங்கள். அடுத்த கனம் என்ன நடக்கும் என்பதை அறிந்தவன் அல்லாஹ் ஒருவனே.

வங்காளதேசத்தில் சேக். ஹஸீனா பதவிக்காலம் முடியும் முன்னரே பதவி கவிழ்க்க நேரிட்டது. இதுதான் மனித சிந்தனையின் விளைவு. எனவே அல்லாஹ்வும், நபி (ஸல்) சொன்னபடியே எமது அனைத்து செயற்பாடுகளும் அமைய வேண்டும். இதற்கு மாற்றமாக எந்த அறிவியல் சிந்தனை மேலிட்டாலும் அது வீழ்ச்சியின் பாலே எம்மை இட்டுச்செல்லும்.

ரஸூல் (ஸல்) அவர்கள் காலம் முதல் பின்பற்றப்பட்டு வந்த எத்தனையோ நடைமுறைகள் ஷிர்க்காக பேசப்படுகின்றன. ரஸூல் (ஸல்) அவர்கள் சாதாரண மனிதனாக்கப்பட்டு விட்டார்கள். அல்லாஹ்வுக்காக செய்ய வேண்டியன, செய்யக் கூடாதன எல்லாம் தலைகீழாக்கப்பட்டுள்ளன.

உதாரணமாக, ஒருவர் தனக்கு வசதியான, நாளொன்றில், வசதியான நேரத்தில் விருந்து கொடுத்தாரென்றால், ரஸூலுல்லாஹ் இந்த நாளில், இந்த நேரத்தில் விருந்து கொடுத்ததாக ஆதாரமுண்டா? போன்ற விதண்டாவாதம் புரிந்து நல்லதொன்றையும் புரிந்தவரை கொச்சைப்படுத்துவதை காண்கிறோம்.

வீடு, வாசல்களில் காலை, மாலை புரிந்து வந்த திக்ர், அவ்ராதுகளுக்கும் விடை கொடுத்து வருகிறார்கள். மலசல கூடங்களில் ஷைத்தான் இருக்கிறான்.

அவனை விரட்டுவதற்கான அவ்ராது, துஆக்கள் இருக்கின்றன. இன்று வீட்டு அறைகளிலே மலசலகூடம் உள்ளது. துஆக்கள் வேண்டாம் என்றால் வீட்டுக்குள்ளே ஷைத்தானை வரவழைக்கவா இவர்கள் கூறுகிறார்கள்? இவை போன்ற நவீனத்துவ கருத்துகளால் இஸ்லாம் கொச்சைப்படுத்தப்படுகிறது.

மேல்நாட்டு கலாசார மோகத்தால் உந்தப்பட்ட முஸ்லிம்களும், முஸ்லிம் நாடுகளும் தீமைகளை வாரி அனைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களது திருமணம், பிறந்தநாள் கொண்டாட்டங்கள் எல்லாம் நட்சத்திர ஹோட்டல்களில் புகுந்து விளையாடிக் கொண்டிருக்கின்றன. மேலும், ஒருபடி ஏறி களியாட்ட விடுதிகள், சினிமா தியேட்டர்கள் கூட முஸ்லிம் நாடுகளில் பல்கிப் பெருகி கொண்டிருக்கின்றன. இஸ்லாமிய தனித்துவத்துக்காக உருவாக்கப்பட்ட பாகிஸ்தானும் கூட இன்று நவீனத்துவத்துக்குள் வீழ்ந்து நாசத்தின் பால் விரைந்து கொண்டிருக்கின்றதை பார்க்க முடிகிறது.



எனவே, குர்ஆன், ஸுன்னாவை பின்பற்றக் கூடிய உம்மத்தை உருவாக்கி உலகில் வெற்றியாளர்களாக தலை நிமிர்ந்த உம்மத்தாக திகழ அல்லாஹ்விடம் பிரார்த்திப்போமாக!

பேராசிரியர் கலாநிதி தீன் முஹம்மத் (அல் அஸ்ஹரி) இஸ்லாமிய தஃவா பிரசாரப் பணிக்காக ஆற்றும் மாபெரும் சேவைகளுக்காக சங்கைக்குரிய அஷ் செய்ஹ் அப்துல் ரஸ்ஸாக் ஆலீம், சங்கைக்குரிய அஷ் செய்ஹ் அப்துர் ரஹீம் ஆலிம், மௌலவி ஏ.ஸி.ஏ.ஏ. ஸஹில் (அல்அஸ்ஹரி) அப்துல் ஹாதி முஹம்மத் இஜ்லான் ஹாஜியார் ஆகியோர் இந்த நிகழ்வில் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவித்தனர்.



அத்தோடு சாதனைகளையும் பல்வேறு முக்கிய அடைவுகளையும் அடைந்த மார்க்க அறிஞர்களும் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

யமன் ஹளரமௌத் தாருல் முஸ்தபா சர்வதேச இஸ்லாமிய பல்கலைக் கழகத்தில் சரீஆத் துறையில் கற்கை நெறியைப் பூர்த்தி செய்துள்ள அஷ் செய்ஹ் அப்துல் காதர் ஆலிம் பின் அஷ் செய்ஹ் அப்துல் முஹீஸ் ஆலிம் (யமனி) அஷ் செய்ஹ் முஹம்மத் இஸ்மாயில் ஆலிம் பின் அஷ் செய்ஹ் அப்துஸ் ஸமி ஆலிம் (யமனி) அஷ் செய்ஹ் அப்துல் காதர் ஆலிம் பின் முஹம்மத் முஸ்தபா (யமனி) அஷ் செய்ஹ் முஹம்மத் இஸ்மாயில் ஆலிம் அப்துல் ரஷீத் (யமனி) மற்றும் யமன் ஹளரமௌத் ரிபாத் அல் இமாம் முஹாஜிர் இஸ்லாமிய கற்கை நிலையத்தில் இஸ்லாமிய ஷரீஆ துறை கற்கையை பூர்த்தி செய்துள்ள அஷ் செய்ஹ் இஸ்மாயில் ஆலிம் அஹமத் (யமனி) ஆகியோரே இவ்வாறு கௌரவிக்கப்பட்டவர்களாவர்.

சங்கைக்குரிய அஷ் செய்ஹ் ஸக்கி அஹமத் பின் அஷ் செய்ஹ் காலிப் அலவி ஹாஜியார் அலவியதுல் காதிரி நன்றியுரை நிகழ்த்தினார்.

சங்கைக்குரிய ஸாதாத்மார்கள், உலமாக்கள், அறிஞர்கள், அரபுக் கல்லூரிகளின் அதிபர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள், பள்ளிச் சங்க உறுப்பினர்கள், பள்ளிவாசல்களின் இமாம்கள், வக்பு சபை உறுப்பினர்கள், தரீக்காக்களின் முரீதீன்கள், முஹிப்பீன்கள், இஹ்வான்கள் உட்பட பெருமளவிலானோர் நிகழ்வில் பங்குபற்றினர்.





பீ.எம். முக்தார்
பேருவளை விசேட நிருபர்...

DFCC வங்கி
உங்கள் வளர்ச்சிக்கு

# நிதி அறிக்கைகள்

## 2024 ஜூன் 30இல் முடிவடைந்த ஆறு மாதங்களுக்கானது

(இலங்கை மத்திய வங்கியின் திருத்தப்பட்ட
2019.01.18 ஆம் திகதிய சுற்றுநிருபத்திற்கு அமைவானவை)

## வருமானக் கூற்று

| | குறிப்பு | வங்கி முடிவடைந்த 6 மாதங்களுக்கானது 30.06.24 ரூ. '000 | 30.06.23 ரூ. '000 | மாற்றம் % | வங்கி முடிவடைந்த காலாண்டிற்கானது 30.06.24 ரூ. '000 | 30.06.23 ரூ. '000 | மாற்றம் % | குழுமம் முடிவடைந்த 6 மாதங்களுக்கானது 30.06.24 ரூ. '000 | 30.06.23 ரூ. '000 | மாற்றம் % | குழுமம் முடிவடைந்த காலாண்டிற்கானது 30.06.24 ரூ. '000 | 30.06.23 ரூ. '000 | மாற்றம் % |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **வருமானம்** | | 45,628,063 | 56,057,501 | (19) | 20,580,230 | 27,176,625 | (24) | 45,987,728 | 56,356,799 | (18) | 20,792,219 | 27,328,286 | (24) |
| வட்டி வருமானம் | | 39,140,615 | 50,736,975 | (23) | 18,561,073 | 24,822,277 | (25) | 39,153,154 | 50,738,151 | (23) | 18,572,935 | 24,823,097 | (25) |
| வட்டிச் செலவினம் | | 25,417,282 | 35,261,675 | (28) | 11,875,307 | 17,691,878 | (33) | 25,376,763 | 35,201,660 | (28) | 11,855,011 | 17,660,595 | (33) |
| **தேறிய வட்டி வருமானம்** | | 13,723,333 | 15,475,300 | (11) | 6,685,766 | 7,130,399 | (6) | 13,776,391 | 15,536,491 | (11) | 6,717,924 | 7,162,502 | (6) |
| கட்டணம் மற்றும் தரகு வருமானம் | | 2,856,822 | 2,542,370 | 12 | 1,419,786 | 1,180,586 | 20 | 2,856,432 | 2,541,918 | 12 | 1,419,537 | 1,180,440 | 20 |
| கழி: கட்டணம் மற்றும் தரகுச் செலவினங்கள் | | 951,299 | 597,468 | 59 | 489,449 | 300,093 | 63 | 951,299 | 597,468 | 59 | 489,449 | 300,093 | 63 |
| **தேறிய கட்டணம் மற்றும் தரகு வருமானம்** | | 1,905,523 | 1,944,902 | (2) | 930,337 | 880,493 | 6 | 1,905,133 | 1,944,450 | (2) | 930,088 | 880,347 | 6 |
| வியாபார நடவடிக்கைகள் மூலமான தேறிய இலாபம் | 5 | 592,306 | 1,392,375 | (57) | 363,943 | 480,972 | (24) | 592,306 | 1,392,375 | (57) | 363,943 | 480,972 | (24) |
| | 49 | இஹல மஹாவெவ கிராமம், மஹாவெவ<br>GPS Coordinates: 7.452893, 79.827711 | வெற்று நிலம் | 0 | 1 | 10.00 |
| | 50 | தித்தகடே, சிலாபம்<br>GPS Coordinates: 7.579269, 79.840194 | தொழிற்சாலை வளாகம் (குத்தகை) | 4 | 3 | 39.48 |
| திருகோணமலை | 51 | இல.130, இன்னர் லேன் 2, அபேயபுர, திருகோணமலை. | குடியிருப்பு வீடு | 0 | 0 | 29.07 |
| | 52 | இல.56/2, பொராரு, கன்தலே. | வெற்று நிலம் | 1 | 0 | 5.00 |
| | 53 | இல.286/3, பொராரு வீதி, பொராரு, கன்தலே. | வெற்று நிலம் | 1 | 2 | 21.00 |
| | 54 | மட்டக்களப்பு வீதி, கிண்ணியா. | வெற்று நிலம் | 2 | 0 | 6.13 |
| | 55 | பண்டாரநாயக்க மாவத்தை, கன்தலே. | குடியிருப்பு வீடு | 1 | 0 | 13.20 |
| பொலன்னறுவை | 56 | 71/A, ஹத்தமுன, ஹிங்குராக்கொட. | உணவு விடுதி | 0 | 1 | 33.00 |
| கேகாலை | 57 | ரதல தோட்டம், அலியாஸ் தோட்டம், பிபிட்டிய, கேகாலை. | வெற்று நிலம் | 1 | 0 | 2.38 |

மேலதிக விபரங்களுக்கு மற்றும் பிரசுரிக்கப்பட்ட சொத்துக்களை பார்வையிடுவதற்கு கிழமைநாட்களில் காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரையில் **0112456483 / 0112456487 / 0112456459** என்ற இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும். தயவு செய்து உங்கள் விண்ணப்பங்களை முத்திரையிடப்பட்ட காகித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"சொத்துக்களின் விலைமனு"** என்று குறிப்பிட்டு கீழுள்ள முகவரிக்கு 2024/09/11ம் திகதி மாலை 2.00 மணிக்குள் பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கவும்.

செலான் வங்கியின் எந்தவொரு கிளையிலும் ரூ.500/- செலுத்தி விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ள முடியும். ( A/C No. 9973-632241-145)

**முகாமையாளர் - சொத்து பிரிவு**
செலான் வங்கி பிஎல்சி
நிலை 14, செலான் டவர்ஸ்
இல. 90, காலி வீதி, கொழும்பு 03.

www.seylan.lk உள் சென்று விற்பனைக்குள்ள சொத்துக்களை பார்க்கவும். **கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் மற்றும் நிராகரிக்கும் உரிமை முகாமைக்கே உரியது. நிபந்தனைக்குட்பட்டது.**

Fitch Rating: A-(lka), நிறுவனப் பதிவு எண்: PQ9
செலான் வங்கி இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழ் இயங்கும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கியாகும்.

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
வீதி அபிவிருத்தி அதிகாரசபை

## விலைமனுக்கோரல் (IFB)

| ஒப்பந்த இலக்கம் | செயற்திட்டத்தின் பெயர் |
|---|---|
| 01 | புத்தல, ரனுக்கல்ல, கிரிகல்பொத்த வீதியில் மெனிக் கங்கையின் குறுக்கே கட்டப்பட்ட பாலத்தின் மீதமுள்ள பணிகளை செய்தல் |
| 02 | பிபிலை, கெஹெல்கொட்டுவ களுகஹவாடிய வீதியில் தஹமல் ஓயா குறுக்கே கட்டப்பட்ட பாலத்தின் மீதமுள்ள பணிகளை செய்தல் |
| 03 | பிபிலை, மெதலந்த தமுனுவின்ன ஓயா வீதியில் தஹமல் ஓயா குறுக்கே கட்டப்பட்ட பாலத்தின் மீதமுள்ள பணிகளை செய்தல் |
| 04 | பிபிலை, பொக்கேமடவல பதுலுகம்மான வீதியில் மொடியால கந்துர குறுக்கே கட்டப்பட்ட பாலத்தின் மீதமுள்ள பணிகளை செய்தல் |
| 05 | ஹேவாவிஸ்ஸ பௌலான கண்டி வீதியில் பௌலான எல குறுக்கே கட்டப்பட்ட பாலத்தின் மீதமுள்ள பணிகளை செய்தல் |
| 06 | தோப்பூர் ஒழுக்குழி பள்ளிகடு ஆறு வீதி குறுக்கே கட்டப்பட்ட பாலத்தின் மீதமுள்ள பணிகளை செய்தல் |
| 07 | புல்மோட்டை சுனாமி வீட்டுத் திட்டத்தின் வீதி குறுக்கே கட்டப்பட்ட பாலத்தின் மீதமுள்ள பணிகளை செய்தல் |

தேசிய மனு கோரல் போட்டி முறைக்கமைய மேல்குறிப்பிடப்பட்டுள்ள சேவையினை வழங்குவதற்கான விலைமனுக்கள் கோரப்படுகின்றன. ஆர்வமுள்ள மனுதாரர்கள் **2024.08.23** ஆம் திகதி முதல் **2024.09.12** ஆம் திகதி வரை வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் இணையதளம் **www.rda.gov.lk** இனை பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

## தேசிய போக்குவரத்து ஆணைக்குழு

N.T.C NATIONAL TRANSPORT COMMISSION

## விலைமனுக் கோரல்

### பாஸ்டியன் மாவத்தை பேருந்து முனையம் ஐபி அடிப்படையிலான கண்காணிப்பு தீர்வு அமைப்பின் வடிவமைப்பு, வழங்கல், நிறுவுதல் மற்றும் இயக்குதல்

### NTC/2024/G/11

1. போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் கீழ் உள்ள தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் சார்பாக கொள்முதல் குழுவின் தலைவர், பாஸ்டியன் மாவத்தை பேருந்து முனையத்தில் ஐபி அடிப்படையிலான கண்காணிப்பு தீர்வு அமைப்பை வடிவமைத்தல், வழங்குதல், நிறுவுதல் மற்றும் செயல்படுத்துதல் ஆகியவற்றிற்கு தகுதியான ஏலதாரர்களிடமிருந்து சீல் செய்யப்பட்ட ஏலங்களை அழைக்கிறார். தேவைகள் மற்றும் விவரக்குறிப்புகள் பற்றிய விரிவான விளக்கம் ஏல ஆவணத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

2. இலங்கை அரசாங்கத்தின் கொள்முதல் வழிகாட்டுதல்களால் நிர்வகிக்கப்படும் தேசிய போட்டி ஏலம் (NCB) நடைமுறையைப் பயன்படுத்தி ஏலம் நடத்தப்படும் மற்றும் ஏல ஆவணங்களில் கொடுக்கப்பட்டுள்ள தகுதி மற்றும் தகுதித் தேவைகளைப் பூர்த்தி செய்யும் அனைத்து தகுதியான ஏலதாரர்களுக்கும் இது திறந்திருக்கும்.

3. அனைத்து ஏலதாரர்களும் பின்வரும் துறைகளில் அனுபவத்துடன் கட்டுமான தொழில் மேம்பாட்டு ஆணையத்தில் (CIDA) பதிவு செய்திருக்க வேண்டும்.

   a. CIDA பதிவு தேவை:

      i. நிபுணத்துவம் : கூடுதல் குறைந்த மின்னழுத்த நிறுவல்கள்

      ii. தரம் : EM 3

   b. முன் அனுபவம் தேவை

   IP அடிப்படையிலான கண்காணிப்பு தீர்வு அமைப்பின் வடிவமைப்பு, வழங்கல், நிறுவுதல் மற்றும் செயல்படுத்தல் ஆகியவற்றில் அனுபவம் பெற்றிருக்க வேண்டும் (கடந்த 05 ஆண்டுகளுக்குள் இதே போன்ற இயல்புடைய குறைந்தபட்சம் 03 திட்டங்களை முடித்திருக்க வேண்டும்) மற்றும் IP அடிப்படையிலான கண்காணிப்பு தீர்வு அமைப்பின் வடிவமைப்பு, வழங்கல் மற்றும் நிறுவல் துறையில் செயலில் இருக்க வேண்டும். இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.

   மேலே உள்ள (a) மற்றும் (b) க்கான ஆவணச் சான்றுகள் ஏலத்துடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மற்றும் மேலே (a) மற்றும் (b) இல் குறிப்பிடப்பட்டுள்ள தேவையான CIDA பதிவு மற்றும் அனுபவம் இல்லாத நிறுவனங்கள் தகுதியற்றதாகக் கருதப்பட்டு நிராகரிக்கப்படும்.

4. ஆர்வமுள்ள தகுதியுள்ள ஏலதாரர்கள் இயக்குநர் (தர உத்தரவாதம்), தேசிய போக்குவரத்து ஆணைக்குழு, பார்க் வீதி, கொழும்பு 05 என்ற முகவரியில் இலிருந்து மேலதிகத் தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம், மேலே உள்ள முகவரியில் உள்ள NTC அலுவலகத்தில் **2024.08.23** ஆம் திகதி, முதல் வேலை நாட்களில் அலுவலக நேரத்தில் ஏல ஆவணங்களை ஆய்வு செய்யலாம். **தொலைபேசி: 011-2587372, மின்னஞ்சல்:** dir.qa@ntc.gov.lk. ஏல ஆவணங்கள் ஆய்வுகளுக்காக மட்டுமே www.ntc.gov.lk என்ற இணையதளத்தில் விபரங்களை பெற்றுக்கொள்ளலாம்.

5. ஆங்கில மொழியில் உள்ள ஏல ஆவணங்களின் முழுமையான தொகுப்பை, ஆர்வமுள்ள ஏலதாரர்கள் எழுத்துப்பூர்வ விண்ணப்பத்தை சமர்ப்பித்து, **இலங்கை ரூபாய் மூவாயிரத்து ஐந்நூறு (LKR 3,500.00)** திருப்பிச் செலுத்தப்படாத கட்டணமாக **2024.08.23** ஆம் திகதி, முதல் பார்க் வீதி, கொழும்பு 05 இல் உள்ள NTC அலுவலகத்திலிருந்து வேலை நாட்களில் அலுவலக நேரத்தில். பணமாக செலுத்தி வாங்க வேண்டும்.

6. ஏலங்கள் **15.00** மணி நேரத்திற்கு முன்னர் தலைவர், தேசிய போக்குவரத்து ஆணைக்குழு, கொள்முதல் பிரிவு, பார்க் வீதி, கொழும்பு 05 என்ற முகவரிக்கு சமரபிக்கப்பட வேண்டும். **2024.09.18** ஆம் திகதி **(பிற்பகல் 3.00)** மணிக்கு பிறகு தாமதமாக கிடைக்கப்பெறும் ஏலங்கள் மற்றும் மின்னணு முறையில் அனுப்பப்படும் ஏலங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாது மேலும் நிராகரிக்கப்படும்.

7. களப்பயணத்துடன் கூடிய ஏலத்திற்கான முந்தைய கூட்டம் **2024.09.12** ஆம் திகதி அன்று காலை **10.00 மணிக்கு** கொழும்பு 11, பாஸ்டன் மாவத்தை பேருந்து முனையத்தில் நடைபெறும்.

8. ஏல ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வங்கி உத்தரவாதத்தின் வடிவத்தில் அனைத்து ஏலங்களும் **ஒரு இலட்சத்து இருபதாயிரம் ரூபாய் (120,000.00)** ஏலப் பாதுகாப்புடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

9. ஏலங்கள் சமர்ப்பிப்பதற்கான இறுதித் தேதியிலிருந்து **120 நாட்களுக்கு** செல்லுபடியாகும். ஏலங்கள் பெறப்பட்ட உடனேயே, ஏலதாரர்கள் அல்லது பந்தி 6 இல் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் கலந்துகொள்ளும் அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் ஏலம் திறக்கப்படும்.

10. இந்த ஏலத்தை தயாரித்தல் அல்லது வழங்குவது தொடர்பாக விண்ணப்பதாரரால் ஏற்படும் எந்த செலவுகளுக்கும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு பொறுப்பேற்காது.

**தலைவர்**
**தேசிய போக்குவரத்து ஆணைக்குழு**
**241, பார்க் வீதி, கொழும்பு 05,**
**இலங்கை.**

தொலைபேசி: +94112587372 தொலைநகல் : +94112058138 மின்னஞ்சல்: chairman@ntc.gov.lk

SELACINE

## கண்டி கடவத் சதர மற்றும் கங்கவட்ட கோரளை பிரதேச செயலகப் பிரிவு

கண்டி கடவத் சதர மற்றும் கங்கவட்ட கோரளை பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட கள்ளுத் தவறணைகளை குத்தகைக்கு விற்றல் தொடர்பான கேள்விப்பத்திரங்கள் மீண்டும் ஏற்றுக்கொள்ளப்படும்.

1. கண்டி - கொழும்பு வீதியில் இல 01 பிறநாட்டு குடிவகை தவறணைகள் சிறப்புரிமைகளை வாங்குவதற்கு 2024/2025 குத்தகைக்கு விற்றல் தெடர்பான கேள்விப்பத்திரங்கள் 2024.09.10ம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும். (மீளவிற்றல்)

மேலதிக விபரங்களுக்காக 2024.07.05 ஆம் திகதி இலக்கம் 2,392 கொண்ட இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் கெசட் பத்திரத்தை பார்க்கவும்.

**யூ.ஜே.எம்.எஸ்.எஸ்.பீ.ஜயசிங்க**
**பிரதேச செயலாளர்**
**கண்டி**

Best way to fulfil your Future Dreams
Marriage Proposals
in the
Sunday Observer

## ஆர்வ வெளிப்பாட்டிற்கான அழைப்பு (EOI)

### வர்த்தக, வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு

தம்புள்ள தட்பவெப்ப நிலை மற்றும் ஈரப்பதத்தை கட்டுப்படுத்தும் களஞ்சிய செயற்பாடு மற்றும் நிர்வாகத்திற்காக பொருத்தமான நிறுவனமொன்றை தேர்வு செய்தல்

### இறுதித் திகதியை நீடித்தல்

மேலேயுள்ள விடயம் தொடர்பாக 2024 ஜூலை 28 ஆம் திகதியன்று பிரசுரிக்கப்பட்டது என்பதுடன் ஆர்வ வெளிப்பாட்டினை சமர்ப்பிப்பதற்லின் இறுதி திகதி **2024 செப்டெம்பர் 10ஆம் திகதியன்று பி.ப. 3 மணி வரையும்** நீடிக்கப்பட்டுள்ளது.

எதிர்பார்ப்புள்ள விண்ணப்பதாரிகள் வர்த்தக அமைச்சின் **(https://www.trade.gov.lk/downloads/ministry-notifications)** என்ற உத்தியோகபூர்வ இணையதளத்திலிருந்து ஆங்கில மொழியிலுள்ள EoI மற்றும் Rfp ஆகியவற்றை பதிவிறக்கம் செய்யலாம்.

தெளிவுறுத்தல்கள் ஏதுமிருப்பின், +94 011 2304049 என்ற தொலைபேசி மற்றும் **foodcommissioner@gmail.com** என்ற மின்னஞ்சல் மூலமாகவும் / 0112110577 என்ற இலக்கத்தினூடாக பிரதான கணக்காளருடனும் தொடர்பு கொள்ளவும்.

**தலைவர்,**
**அமைச்சு பெறுகைக்குழு**
**வர்த்தக வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு,**
**இல. 492, R.A. டி மெல் மாவத்தை, கொழும்பு - 03.**
**21.08.2024**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

## பெறுகை அறிவித்தல்

### கம்பஹா விக்கிரமாராச்சி ஆயுர்வேத சுதேச மருத்துவ பல்கலைக்கழகம்

2024/2025ஆம் ஆண்டுகளின் பொருட்டு கம்பஹா விக்கிரமாராச்சி சுதேச வைத்திய பல்கலைக்கழகத்திற்கு பின்வரும் சேவைகள் வழங்குவதற்காக தகுதிவாய்ந்த நிறுவனங்களிடமிருந்து தேசிய போட்டி ரீதியிலான கேள்வி கோரல் (NCB) முறையின் கீழ் முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| பெறுகை இலக்கம் | விபரம் | கேள்விப் பிணை முறி | செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|
| GWUIM/GA/05/SEC/2024 | பாதுகாப்புச் சேவைகள் வழங்கல் | ரூபா 200,000.00 | 2024.12.07ஆம் திகதி வரை அல்லது அதற்கு மேல் |

**தகுதிகள்:**

1. அரசாங்கம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனங்களுக்கு பாதுகாப்புச் சேவைகளை வழங்குதல் தொடர்பில் வியாபாரமாகப் பதிவு செய்யப்பட்டது முதல் 05 வருடங்களுக்குக் குறையாத சேவை அனுபவம் உள்ள மற்றும் அந்தக் காலப்பகுதியினுள் குறைந்தபட்சம் 02 வருட காலம் அரச பல்கலைக்கழகம் அல்லது தனியார் பல்கலைக்கழகங்களுக்கு திருப்திகரமான பாதுகாப்புச் சேவையை வழங்கியுள்ள மற்றும் அபகீர்த்தியானோர் பட்டியலிடப்படாதவராக (Blacklist) இருத்தல் வேண்டும்.
2. பாதுகாப்பு அமைச்சின் சிவில் பாதுகாப்புப் பிரிவின் பதிவானது ஒரு வருடத்திற்குச் செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரம் இருத்தல் வேண்டும்.
3. 2023-12-31/2024-03-31ஆம் திகதியில் முடிவடைந்த 03 வருட காலத்தினுள் பாதுகாப்புச் சேவைகள் வழங்குவதன் மூலமான சராசரி வருடாந்த புரள்வானது (Average Annual Turnover) 30.0 மில்லியன் ரூபாவுக்கு மேல் இருத்தல் வேண்டும்.

சகல கேள்விப் படிவங்களுடனும் மேற்கூறப்பட்ட பெறுமதி மற்றும் செல்லுபடிக் காலத்தைக் கொண்ட இலங்கையில் பதிவு செய்துள்ள வர்த்தக வங்கியொன்றில் துணை வேந்தர், கம்பஹா விக்கிரமாராச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகம் எனும் பெயரில் பெற்றுக்கொண்ட மீளளிக்கப்படும் கேள்விப் பிணை முறி அல்லது இந்தப் பல்கலைக்கழகத்தின் சிறாப்பருக்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் மூலப் பிரதியை இணைத்திருத்தல் வேண்டும்.

இது தொடர்பான மேலதிக விபரங்களை பதில் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் - பொது நிர்வாகம் (033-2223784 அல்லது 033 2222748/740 நீடிப்பு இலக்கம் 136) மூலம் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் கேள்வி ஆவணங்களை வேலை நாட்களில் இலவசமாக பரீட்சித்துப் பார்க்கலாம்.

மேற்படி சேவை வழங்கலுக்கு இயைபான இடத்தை 2024-08-27ஆம் திகதி முதல் 2024-09-11ஆம் திகதி வரையில் மு.ப. 09.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரை பரீட்சித்துப் பார்க்கலாம். இது தொடர்பான கேள்விக்கு முன்னரான கூட்டமொன்று (Pre-bid Meeting) 2024-09-04ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு பல்கலைக்கழக நிர்வாகக் கட்டிடத்தின் இரண்டாம் மாடியிலுள்ள குழு கூட்ட அறையில் இடம்பெறும் என்பதுடன் கேள்விகளைச் சமர்ப்பிக்க விரும்பும் அனைத்து ஆர்வமுள்ள கேள்விதாரர்களின் வருகை எதிர்பார்க்கப்படுகிறது.

சகல கேள்விப் படிவங்களையும் சிங்கள மொழியில் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் இது தொடர்பில் ஆர்வமுள்ள கேள்விதாரர்களினால் 2024-08-26ஆம் திகதி முதல் 2024-09-12ஆம் திகதி வரையான காலத்தில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையான வேலை நாட்களில் தமது நிறுவனக் கடிதத் தலைப்பில் எழுத்து மூல வேண்டுகோளொன்றுடன் நிறுவனத்தின் சிறாப்பருக்கு மீளளிக்கப்படாத 5,000.00 ரூபாவைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு சகிதம் பதில் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் - பொது நிர்வாகம் அவர்களுக்குச் சமர்ப்பிப்பதன் பேரில் கேள்விப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் படிவங்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென வெவ்வேறாகக் குறிப்பிட்டு முத்திரையிட்ட கடித உறைகளில் இட்டு மீண்டும் அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு முத்திரைக் குறி பொறித்து அதன் இடது பக்க மேல் மூலையில் ''கம்பஹா விக்கிரமாராச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகத்திற்கு பாதுகாப்புச் சேவைகளை வழங்குதல் - 2024/2025'' எனத் தெளிவாக குறிப்பிட்டு முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விப் படிவங்களை 2024-09-13ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன்னர் நிர்வாகக் கட்டிடத்தின் இரண்டாம் மாடியிலுள்ள பதிவாளர் அலுவலகத்திற்கு அருகில் வைக்கப்பட்டுள்ள பாதுகாப்புச் சேவைகள் வழங்குதல் 2024/2025ஆம் வருடம் எனும் கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.

கேள்விகள் ஏற்றுக்கொள்வது முடிவடைந்ததும் அவை உடனடியாக திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் முறையான அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.

இதற்கு இயைபான மேலதிக தகவல்கள் கேள்விப் படிவங்களில் தரப்பட்டுள்ளன.

திணைக்களப் பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

பல்கலைக்கழகத்தின் நிர்வாகத்திற்குப் புறம்பாக நாட்டினுள் ஏற்படக்கூடிய அவசர நிலைமை காரணமாக மேற்கூறப்பட்ட தினத்தில் ஏதாவது திருத்தங்கள் செய்ய நேரிட்டால் அது பற்றி பல்கலைக்கழகத்தின் www.gwu.ac.lk எனும் இணையத்தின் ஊடாக அறிவிக்கப்படும்.

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக் குழு,**
**கம்பஹா விக்கிராமாரச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகம்,**
**கண்டி வீதி, யக்கல.**

**2024-08-23.**

SUNDAY OBSERVER
Marriage Proposals
Decades of Trusted Service
Best way to fulfil your Future Dreams
Affordable & Attractive Packages for YOU.
Pay online & Save your precious time
BANK OF CEYLON BOC Acc. No. 000000377 Corporate Branch
077 7 278 948 / 011 2 429 343/ 342 / 011 2 429 383 E-mail - classified@lakehouse.lk
WE ACCEPT VISA

# தேயிலை பயிர் செய்கையாளர்களுக்கு மானிய விலையில் இரசாயன உரம்

## அமைச்சரவை அங்கீகாரம்

தேயிலை பயிர் செய்கையாளர்களுக்கு 50 கிலோகிராம் இரசாயன உரப்பை ஒன்று 4000 ரூபாவுக்கு மானிய விலைக்கு வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

தேயிலை உற்பத்தியை அதிகரிப்பதற்காக உரப்பாவனையை ஊக்குவிக்கும் நோக்கில், அரச உரக் கம்பனியான ஸ்டேட் பேர்டிலைசர் கம்பனி லிமிட்டட் மூலம் வழங்குவதற்கு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. விவசாய மற்றும் பெருந்தோட்ட அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கே அமைச்சரவை இவ்வாறு அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இது தொடர்பாக நேற்று முன்தினம் (21) நடைபெற்ற அமைச்சரவையில் கூட்டத்தில்,

தேயிலை உற்பத்தியை அதிகரிப்பதற்காக தேயிலை பயிர் செய்கையாளர்களுக்கு உர மானியம் வழங்குதல், கடந்த காலப்பகுதியில் உரத்தின் விலை அதிகரிப்பால் மற்றும் இரசாயன உரத்தடை போன்ற காரணிகளால் தேயிலைச் செய்கையில் உரப்பாவனை குறைந்தமையே தேயிலை உற்பத்தி வீழ்ச்சியடைவதற்கான காரணங்கள் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

அதனால் தேயிலை உற்பத்தியை அதிகரிப்பதற்காக உரப்பாவனையை ஊக்குவிக்கும் நோக்கில் பயிர் செய்கையாளர்களுக்கு சலுகைகளை வழங்குவது காலத்தின் தேவையாக உள்ளது.

அதற்கமைய, அரச உரக் கம்பனியான ஸ்டேட் பேர்டிலைசர் கம்பனி லிமிட்டட் மூலம் 50 கிலோகிராம் இரசாயன உரப்பை ஒன்று ரூபா 4000 இற்கு மானிய விலைக்கு தேயிலை பயிர் செய்கையாளர்களுக்கு வழங்குவதற்காக விவசாய மற்றும் பெருந்தோட்ட அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# காட்டு யானைகளிடமிருந்து உடன் தீர்வை பெற்றுத்தருமாறு பிரதேச மக்கள் கோரிக்கை

**ஊவா சுழற்சி நிருபர்**

வெல்லவாய மற்றும் தனமல்வில பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு நடுவில் அமைந்துள்ள கித்துல் கொட்டே கிராமத்துக்குள் காட்டு யானைகள் தினமும் படையெடுத்து வருவதாக பிரதேச மக்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

இக் காட்டு யானைகள், பயிரிடப்பட்டுள்ள தென்னை மரங்கள், பலா மரங்கள் உள்ளிட்ட பல தோட்டங்களை முற்றாக அழித்துவருவதாக தெரிவித்த பிரதேசவாசிகள், அறுவடைக்கு தயாராக இருந்த தென்னை, பலா மரங்களை அடியோடு அழித்துள்ளதாகவும் இதனால் தாம் பெரிதும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளதாகவும் கவலை தெரிவிக்கின்றனர். காட்டு யானைகளின் தாக்குதலினால் பெருமளவிலான விவசாய நிலங்களில் பயிரிடப்பட்ட விளை பொருட்கள், மனித உடைமைகள் மற்றும் உயிர்கள் பலியாகியுள்ளதோடு, யானை மனித மோதலினால் பெருமளவான காட்டு யானைகளும் அழிவடைந்துள்ளமை வருத்தமளிப்பதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

பல வருடங்களாகவே இக் காட்டு யானைகளின் அச்சுறுத்தல் இருந்து வருவதாகவும், தாம் தொடர்ச்சியாக எதிர்நோக்கும் இப் பிரச்சினைகளுக்கு, உரிய அதிகாரிகள் உடனடி தீர்வை வழங்க வேண்டுமெனவும் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.





# புதையல் தோண்டுவதற்காக பழிகொடுக்கப்பட்ட பெண் மந்தாரநுவர சம்பவம் – விசாரணைகளில் அதிர்ச்சி



நுவரெலியா, மந்தாரநுவரயில் படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டிருந்த பெண்ணின் சடலம் நேற்று முன்தினம் (21) தோண்டி எடுக்கப்பட்டுள்ள நிலையில், பிரேத பரிசோதனை நேற்று (22) மேற்கொள்ளப்பட்டதாக மந்தாரநுவர பொலிஸார் தெரிவித்தனர்.

ஹேவாஹட்ட முள்ளோயா தோட்டத்தைச் சேர்ந்த 36 வயதுடைய சிவலிங்கம் தர்ஷினி என்ற பெண், மந்தாரநுவர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோனப்பிட்டிய, சீனாபிட்டி தோட்ட அடர் வனப் பகுதியில் இவ்வாறு படுகொலைசெய்யப்பட்டு புதைக்கப்பட்டிருந்தார்.

இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

சம்பவத்தில் சடலமாக தோண்டி எடுக்கப்பட்ட பெண் அக்கரப்பத்தனை மன்றாசி பிரதேச வைத்தியசாலையில் தாதியாக பணியாற்றி வந்துள்ளார். கடந்த 6 மாதத்துக்கும் மேலாக குறித்தப் பெண் காணாமற்போயிருந்ததாக அக்கரப்பத்தனை மற்றும் மந்தாரநுவர பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இந்நிலையில், காணாமற்போன பெண் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார்,

காணால்போயிருந்த பெண் பாவித்து வந்ததாக கூறப்படும் கைத்தொலைபேசி கடந்த இரண்டு தினங்களுக்கு முன் இயங்கியுள்ளமையை கண்டுபிடித்துள்ளனர்.

இதனை ஆதாரமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில், மன்றாசி பிரதேச வைத்தியசாலையில், காணாமற்போயிருந்த பெண்ணுடன் பணியாற்றிய நபரொருவர் அப் பெண்ணின் கைத்தொலைபேசியுடன் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில், கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர், இப் பெண்ணை படுகொலைசெய்து புதைக்கப்பட்டுள்ள சம்பவம் தெரியவந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர், கோனப்பிட்டிய சீனாபிட்டி கீனாகலை தோட்ட அடர் வனத்தில், புதையல் தோண்டுவதற்காக பழி கொடுப்பதற்கு, இப்பெண்ணை கடத்திச் சென்று படுகொலை செய்து புதைத்துள்ளமை விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

**(ஆ.ரமேஸ்)**

# வெற்றி பெற்று பதவிக்கு வந்ததும் வேலையில்லாப் பிரச்சினைக்கு தீர்வு

## தம்புள்ளையில் நாமல் உறுதி

**தம்புள்ள தினகரன் நிருபர்**



தான் தேர்தலில் வெற்றி பெற்று பதவிக்கு வந்ததும் இந் நாட்டின் வேலையில்லாப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைப்பதுடன், தொழில் நுட்பத்துறையில் புரட்சியொன்றும் ஏற்படுத்தப்படும் என பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இளைஞர்களை விவசாயத் துறையின் விவசாயிகளாக மாற்றி வேலையில்லாப் பிரச்சினைக்கு விடிவு காண்பது உறுதி எனவும் தெரிவித்தார். தம்புள்ள பொருளாதார மத்திய நிலையத்துக்கருகில் தம்புள்ள மாநகர சபையின் முன்னாள் முதல்வர் ஜாலிய ஓபாத்தவினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வரவேற்பு நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இந்நிகழ்வில் மாத்தளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நாலக்க கோட்டேகொடவும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பதுளை – ஸ்பிரிங்வெளி வீதியில் விபத்துக்குள்ளான இ.போ.ச பஸ்





பதுளை ஸ்பிரிங்வெளி வீதியில் வீரியபுர பிரதேசத்தில், இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ் ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளது.

பஸ்ஸின் பின்பகுதியில் உள்ள சக்கரம் ஒன்று நீங்கியமையினால் இவ் விபத்து இடம்பெற்றுள்ளதாக பதுளை பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்துக்குள்ளான பஸ், பெத்தேகமவில் இருந்து ஸ்பிரிங்வெளி ஊடாக பதுளை நோக்கி பயணித்துக் கொண்டிருக்கையில் இவ் விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தின்போது, பஸ்ஸில் சுமார் 80 பேர் வரை பயணித்துள்ளதாகவும் எவருக்கும் காயங்கள் எதுவும் ஏற்படவில்லை என தெரிவிக்கும் பதுளை பொலிஸார், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# சிறுவர் இல்லத்திலிருந்து நான்கு சிறுவர்கள் மாயம்

**ஊவா வெல்லஸ்ஸ விஷேட நிருபர்**

வெல்லவாய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எல்லபாறை பிரதேசத்தில் அமைந்துள்ள சிறுவர் இல்லமொன்றிலிருந்து நான்கு சிறுவர்கள் காணாமல் போயுள்ளதாக வெல்லவாய பொலிஸார் தெரிவித்தனர். 16 மற்றும் 14 வயதுகளையுடைய இரண்டு சிறுவர்களும் 15 வயதுடைய இரண்டு சிறுவர்களுமே இவ்வாறு காணாமல் போயுள்ளனர். காணாமல்போன நான்கு சிறுவர்களும் சிறுவர் இல்லத்திற்கு தெரியப்படுத்தாது இவ்வாறு வெளியேறியுள்ளதாக முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

காணாமல்போன குறித்த நான்கு சிறுவர்களையும் தேடி வெல்லவாய பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பாலியல் துஷ்பிரயோகத்துக்குள்ளான மாணவிக்கு நீதிகோரி நீதிமன்றத்திற்கு முன்பாக போராட்டம்

மொனராகலை, தனமல்வில பிரதேசத்தில் கூட்டுப் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்ட மாணவிக்கு, நீதி கோரி வெல்லவாய நீதவான் நீதிமன்றத்திற்கு முன்பாக மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மொனராகலை, தனமல்வில பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் மாணவி ஒருவரைக் கூட்டுப் பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட பெண் உட்பட 18 பேரும் நேற்று (22) வெல்லவாய நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளனர்.

இதன்போதே பாதிக்கப்பட்ட மாணவிக்கு நீதி கோரி பிரதேச மக்கள் பதாகைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுட்டிருந்தனர்.


## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

**வன சீவராசிகள் மற்றும் வன வள பாதுகாப்பு அமைச்சு**

**கொழும்பு 07 இல் அமைந்துள்ள வன சீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சின் உள்ளக வேலைகள்**

1. வன சீவராசிகள் மற்றும் வன வள பாதுகாப்பு அமைச்சின் பெறுகைக் குழு (MPC) தலைவரினால் அமைச்சு அலுவலகத்தின் உள்ளக வேலைகளுக்காக தகுதி வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள வகையில் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன. மொத்த மதிப்பீட்டுத் தொகை 5.5 மில்லியன் ரூபாவாகும். (வெட் இன்றி)

   வேலைத் தளம் கொழும்பு 07, வன சீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சில் அமைந்துள்ளது. ஒப்பந்த வேலை பிரதானமாக மரத்தாலான தரை வேலைகளை உள்ளடக்கியுள்ளது. இந்த ஒப்பந்தத்தின் முழுமையான வேலைகளை நிறைவு செய்வதற்கான காலம் 02 மாதங்களாகும்.
2. விலைக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் முறையின் கீழ் மேற்கொள்ளப்படும்.
3. இதில் ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை வன சீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சின் பிரதான நிதி அதிகாரி (தொ.பே. 011-3355011) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் வேலை நேரங்களில் மு.ப. 09.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் பரீட்சித்துப் பார்க்கலாம்.

- கட்டிட நிர்மாண வேலைகளுக்காக நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை **(CIDA)** நிறுவனத்தில் C 07 & C 08 தரத்தின் கீழ் பதிவு செய்திருத்தல் வேண்டும்.

4. விலைமனுதாரர்கள் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றை மேற்கூறிய முகவரியில் அமைந்துள்ள வன சீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடமிருந்து 2024-08-23ஆம் திகதி முதல் 2024-09-06ஆம் திகதி வரையான வேலை நேரங்களில் மு.ப. 09.00 மணி முதல் பி.ப. 03.00 மணி வரை எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பித்து மற்றும் மீளளிக்கப்படாத மூவாயிரம் (ரூபா 3000.00) இலங்கை ரூபாவைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். கொடுப்பனவுகளை ரொக்கப் பணமாக மேற்கொள்ள வேண்டும்.
5. முத்திரைக்குறி பொறிக்கப்பட்டு இரு நகல்களிலான விலைமனுக்களை வன சீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சின் கணக்கிடல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட வேண்டும் அல்லது பிரதான நிதி அதிகாரி, வன சீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சு, இல. 07, ஹெக்டர் கொப்பேகடுவ மாவத்தை, கொழும்பு-07, எனும் முகவரிக்கு 2024-09-06ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளும் காலம் நிறைவடைந்த உடனடுத்து கிடைக்கப்பெற்றுள்ள விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். இந்நிகழ்வில் விலைமனுதாரர் அல்லது அவரது பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.
6. விலைமனுக்கள் 2024-11-21ஆம் திகதி செல்லுபடியாதல் வேண்டும்.
7. சகல விலைமனுக்களுடனும் இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்டுள்ள எந்தவொரு வர்த்தக வங்கியொன்றிலிருந்தும் பெற்றுக்கொண்ட ஐம்பதாயிரம் (ரூ. 50,000.00) இலங்கை ரூபாவிற்கான விலைக்கோரல் பிணை முறியொன்றை ''செயலாளர், வன சீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சு'' எனும் பெயரில் சமர்ப்பித்தல் வேண்டும். விலைக்கோரல் பிணை முறியானது 2024-10-07ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.

**தலைவர்,**
**அமைச்சுப் பெறுகைக் குழு,**
**வன சீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சு,**
**இல. 07, ஹெக்டர் கொப்பேகடுவ மாவத்தை,**
**கொழும்பு 07.**

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

**வன சீவராசிகள் மற்றும் வன வள பாதுகாப்பு அமைச்சு**

**கொழும்பு 07 இல் அமைந்துள்ள வன சீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சின் நவீனமயப்படுத்தல் வேலைகள்**

1. வன சீவராசிகள் மற்றும் வன வள பாதுகாப்பு அமைச்சின் பெறுகைக் குழு (MPC) தலைவரினால் அமைச்சு அலுவலகத்தை நவீனமயப்படுத்தும் வேலைகளுக்காக தகுதி வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள வகையில் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன. மொத்த மதிப்பீட்டுத் தொகை 6.3 மில்லியன் ரூபாவாகும். (வெட் இன்றி)

   வேலைத் தளம் கொழும்பு 07, வன சீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சில் அமைந்துள்ளது. ஒப்பந்த வேலைகளில் பிரதானமாக நவீனமயப்படுத்துதல் மற்றும் அலுவலக உள்ளக வேலைகளை உள்ளடக்கியுள்ளது. இந்த ஒப்பந்தத்தின் முழுமையான வேலைகளை நிறைவு செய்வதற்கான காலம் 02 மாதங்களாகும்.
2. விலைக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் முறையின் கீழ் மேற்கொள்ளப்படும்.
3. இதில் ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை வன சீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சின் பிரதான நிதி அதிகாரி (தொ.பே. 011-3355011) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் வேலை நேரங்களில் மு.ப. 09.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் பரீட்சித்துப் பார்க்கலாம்.

- கட்டிட நிர்மாண வேலைகளுக்காக நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை (CIDA) நிறுவனத்தில் C 07 & C 08 தரத்தின் கீழ் பதிவு செய்திருத்தல் வேண்டும்.

4. விலைமனுதாரர்கள் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றை மேற்கூறிய முகவரியில் அமைந்துள்ள வன சீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடமிருந்து 2024-08-23ஆம் திகதி முதல் 2024-09-06ஆம் திகதி வரையான வேலை நேரங்களில் மு.ப. 09.00 மணி முதல் பி.ப. 03.00 மணி வரை எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பித்து மற்றும் மீளளிக்கப்படாத மூவாயிரம் (ரூபா 3000.00) இலங்கை ரூபாவைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். கொடுப்பனவுகளை ரொக்கப் பணமாக மேற்கொள்ள வேண்டும்.
5. முத்திரைக்குறி பொறிக்கப்பட்டு இரு நகல்களிலான விலைமனுக்களை வன சீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சின் கணக்கிடல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட வேண்டும் அல்லது பிரதான நிதி அதிகாரி, வன சீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சு, இல. 07, ஹெக்டர் கொப்பேகடுவ மாவத்தை, கொழும்பு-07, எனும் முகவரிக்கு 2024-09-06ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளும் காலம் நிறைவடைந்த உடனடுத்து கிடைக்கப்பெற்றுள்ள விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். இந்நிகழ்வில் விலைமனுதாரர் அல்லது அவரது பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.
6. விலைமனுக்கள் 2024-11-21ஆம் திகதி செல்லுபடியாதல் வேண்டும்.
7. சகல விலைமனுக்களுடனும் இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்டுள்ள எந்தவொரு வர்த்தக வங்கியொன்றிலிருந்தும் பெற்றுக்கொண்ட எழுபத்தையாயிரம் (ரூ. 75,000.00) இலங்கை ரூபாவிற்கான விலைக்கோரல் பிணை முறியொன்றை ''செயலாளர், வன சீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சு'' எனும் பெயரில் சமர்ப்பித்தல் வேண்டும். விலைக்கோரல் பிணை முறியானது 2024-10-07ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.

**தலைவர்,**
**அமைச்சுப் பெறுகைக் குழு,**
**வன சீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சு,**
**இல. 07, ஹெக்டர் கொப்பேகடுவ மாவத்தை,**
**கொழும்பு 07.**

## அறிவித்தல்

லா.ஃ.ப்ஸ் இகோ ஶ்ரீ லிமிடெட் நிறுவனத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டம் எதிர்வரும் செப்டெம்பர் 6 ஆம் திகதி மு.ப. 10:00 இற்கு மெய்நிகர் முறையில் நடைபெறும் என்பதை இத்தால் அறியத்தருகிறோம்.

ஆண்டு அறிக்கை மற்றும் நிதி அறிக்கைகள் இணையதளத்தில் கிடைக்கப்பெறும் என்பதோடு அந்த ஆவணங்களை அனைத்து பங்குதாரர்களும் கீழ் தரப்பட்டுள்ள குறித்த முகவரியில் இருந்து பெற முடியும்.

லா.ஃ.ப்ஸ் இகோ ஶ்ரீ லிமிடெட்டின் நிறுவன இணையதளம்: https://www.ecosri.lk/investor-relations/

ஏதேனும் விசாரணைக்காக, அலுவலக நேரங்களில் +94 11 556 8257 என்ற இலக்கம் அல்லது buddhima.chathurangi@laugfs.lk என்ற மின்னஞ்சல் வழியாக சட்ட அதிகாரி, புத்திமா வீரதுங்கவை தெடர்புகொள்ளவும்.

**லா.ஃ.ப்ஸ் இகோ ஶ்ரீ லிமிடெட்**
**101 மாயா ஒழுங்கை**
**கொழும்பு 06**

## அறிவித்தல்

**LAUGFS Leisure Limited** நிறுவனத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டம் எதிர்வரும் செப்டெம்பர் 6 ஆம் திகதி மு.ப. 10:30 இற்கு மெய்நிகர் முறையில் நடைபெறும் என்பதை இத்தால் அறியத்தருகிறோம்.

ஆண்டு அறிக்கை மற்றும் நிதி அறிக்கைகள் இணையதளத்தில் கிடைக்கப்பெறும் என்பதோடு அந்த ஆவணங்களை அனைத்து பங்குதாரர்களும் கீழ் தரப்பட்டுள்ள குறித்த முகவரியில் இருந்து பெற முடியும்.

**LAUGFS Leisure Limited** நிறுவன இணையதளம்: https://www.laugfs.lk/agm/ll/leisure_notice_of_meeting.pdf

ஏதேனும் விசாரணைக்காக, அலுவலக நேரங்களில் +94 11 556 8257 என்ற இலக்கம் அல்லது buddhima.chathurangi@laugfs.lk என்ற மின்னஞ்சல் வழியாக புத்திமா வீரதுங்கவை தொடர்புகொள்ளவும்.

**LAUGFS Leisure Limited**
**101 மாயா ஒழுங்கை**
**கொழும்பு 06**

# இலங்கை 'ஏ'யின் தென்னாபிரிக்க சுற்றுப்பயண விபரம் வெளியானது



இலங்கை ஏ அணியின் தென்னாபிரிக்க சுற்றுப்பயணத்திற்கான போட்டி அட்டவணையை இலங்கை கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ளது.

இதன்படி எதிர்வரும் ஓகஸ்ட் 31 ஆம் திகதி தென்னாபிரிக்கா சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் இலங்கை ஏ அணி தென்னாபிரிக்க ஏ அணிக்கு எதிராக இரு ஒருநாள் போட்டிகள் மற்றும் இரு நான்கு நாள் போட்டிகளில் ஆடவுள்ளது.

இதில் ஒருநாள் போட்டிகள் எதிர்வரும் ஓகஸ்ட் 31, செப்டெம்பர் 2 மற்றும் 4 ஆம் திகதிகளில் பொட்செப்ஸ்ரூமில் நடைபெறவுள்ளன. இதனைத் தொடர்ந்து இரு அணிகளும் மோதும் முதலாவது நான்கு நாள் போட்டி கம்பேர்லியில் எதிர்வரும் செப்டெம்பர் 8 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இரண்டாவது நான்கு நாள் போட்டி செப்டெம்பர் 15 ஆம் திகதி தொடக்கம் 18 ஆம் திகதி வரை பனோனி, விலோமூர் பார்க் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

## ஹிக்மா இல்லம் சம்பியன்



**பாலமுனை விசேட நிருபர்**

பாலமுனை றை ஸ்டார் விளையாட்டுக் கழகத்தின் இல்ல விளையாட்டுப் போட்டியில் ஹிக்மா இல்லம் 236 புள்ளிகளைப் பெற்று சம்பியனாக தெரிவானது.

பாலமுனை பொது விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடந்த இந்தப் போட்டியில் றை ஸ்டார் விளையாட்டுக் கழக உறுப்பினர்கள் மூன்று இல்லங்களாக பிரிக்கப்பட்டு இப்போட்டி நடத்தப்பட்டது.

இதில் ஸ்டார்ஸ் இல்லம் இரண்டாம் இடத்தையும் ஹிதாயா ஸ்டார்ஸ் இல்லம் மூன்றாம் இடத்தையும் பெற்றன. இந்நிகழ்வுக்கு பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம். அதாஉல்லா பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

## அனுராதபுரம் சாஹிரா தேசிய போட்டிக்கு தெரிவு



**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

வடமத்திய மாகாண பாடசாலைகளுக்கிடையில் இடம்பெற்ற 18 வயதுக்குட்பட்டோருக்கான கால்பந்தாட்ட போட்டியில் வெற்றியீட்டிய அனுராதபுரம் சாஹிரா கல்லூரி தேசிய போட்டிக்கு தெரிவாகியுள்ளது.

பொலன்னறுவை றோயல் கல்லூரி மைதானத்தில் அண்மையில் (15) நடைபெற்ற இறுதிப் போட்டியில் அனுராதபுரம் புனித ஜோசப் அணியை 3–0 என்ற கோல் கணக்கில் சாஹிரா அணி வென்றது.

இதன் எம்.டீ. ஐமன், எம்.வி.எம். றிஸ்கான், ஜே.ஏ. முக்ஷின் ஆகியோர் கோல் புகுத்தினர்.

## சம்பியனானது ஊவா கிங்



**ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்**

அட்டாளைச்சேனை கோல்ட் ஸ்டார் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற 'மின்னொளி கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில்' பதுளை ஊவா கிங் விளையாட்டுக் கழகம் சம்பியனானது.ஒரு வாரமாக இடம்பெற்ற தொடரின் இறுதிப்போட்டி கடந்த ஞாயிறு இரவு (18) கோல்ட் ஸ்டார் மைதானத்தில் நடைபெற்றது. இதில் அக்கரைப்பற்று டீன் ஸ்டார் விளையாட்டுக் கழக அணியை 2–0 என ஊவா கிங் அணி வென்றது.

இச்சுற்றுத்தொடரின் மூன்றாமிடத்தை மட்டக்களப்பு ஈஸ்ரன் அணியும், நான்காமிடத்தை அட்டாளைச்சேனை கோல்ட் ஸ்டார் அணியும் வென்றன.

# காசாவின் குடியிருப்பு பகுதிகளுக்குள் இஸ்ரேலிய டாங்கிகள் முன்னேற்றம்: மக்கள் தப்பியோட்டம்

## போர் நிறுத்தத்திற்கு நெதன்யாகுவிடம் பைடன் வலியுறுத்து



ஹமாஸ் போராளிகளுடன் சண்டையிட்டு வரும் இஸ்ரேலியப் படை மத்திய மற்றும் தெற்கு காசாவில் ஆழ ஊடுருவி வரும் அதே நேரம் அங்கு நடத்தும் சரமாரி தாக்குதல்களில் நேற்றும் பலர் கொல்லப்பட்டுள்ளனர்.

காசா போர் நிறுத்தம் மற்றும் பணயக்கைதிகளை விடுவிக்கும் உடன்படிக்கை ஒன்றை செய்து கொள்வதற்கு இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவை அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் வலியுறுத்தியதாக வெள்ளை மாளிகை அறிவித்திருக்கும் நிலையிலேயே புதிய தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன.

பல மாதங்கள் நீடிக்கும் போர் நிறுத்தப் பேச்சுவார்த்தையில் இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் தமது நிபந்தனைகளில் உறுதியாக இருக்கும் நிலையில் எந்த முன்னேற்றமும் காண முடியாதுள்ளது.

வடக்கு காசாவின் பெயித் லஹியா நகரில் வீடு ஒன்றை இலக்கு வைத்து நேற்று (22) நடத்தப்பட்ட தாக்குதலில் 11 பேர் கொல்லப்பட்டதோடு மத்திய காசாவின் அல் மகாசி அகதி முகாமில் இடம்பெற்ற தாக்குதலில் உள்ளூர் ஊடகவியலாளர் ஒருவர் உட்பட மேலும் அறுவர் கொல்லப்பட்டதாக காசா மருத்துவ வட்டாரம் தெரிவித்துள்ளது. தெற்கு காசாவில் இடம்பெற்ற வெவ்வேறு தாக்குதல்களில் மேலும் ஐவர் பலியாகியுள்ளனர்.

மத்திய காசாவின் டெயிர் அல் பலாஹ் மற்றும் தெற்கின் கான் யூனிஸ் நகரில் படை நடவடிக்கையை தீவிரப்படுத்தி இருப்பதாக இஸ்ரேல் இராணுவம் குறிப்பிட்டுள்ளது. இதன்போது இராணுவ கட்டுமானங்கள், ரொக்கெட் குண்டுகள் அமைந்திருக்கும் இடங்கள் தகர்க்கப்பட்டு போராளிகள் பலரும் கொல்லப்பட்டதாகவும் அந்த இராணுவம் கூறியது.

பிராந்தியத்திற்கு விஜயம் மேற்கொண்ட அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் அன்டனி பிளிங்கன் போர் நிறுத்த முயற்சியில் எந்த முன்னேற்றமும் இன்றி கடந்த செவ்வாய்க்கிழமை அமெரிக்கா திரும்பினார். இதனையடுத்தே ஜோ பைடன் மற்றும் நெதன்யாகு இடையெ நேற்று முன்தினம் தொலைபேசி உரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

போரை முடிவுக்குக் கொண்டு வந்து காசாவில் உள்ள இஸ்ரேல் மற்றும் வெளிநாட்டு பணயக்கைதிகளை விடுவித்து இஸ்ரேலிய சிறையில் இருக்கும் பல பலஸ்தீன கைதிகளை விடுவிக்கும் உடன்படிக்கை ஒன்றை விரும்புவதாக ஹமாஸ் அமைப்பு குறிப்பிடுகிறது. எனினும் இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா போர் நிறுத்தம் ஒன்றை



எட்டத் தவறி இருப்பதாக அது குற்றம்சாட்டியுள்ளது.

ஹமாஸ் தோற்கடிக்கப்பட்டாலேயே போர் முடிவுக்கு வரும் என்று கூறும் நெதன்யாகு பணயக் கைதிகளை விடுவிக்கும் கைதிகள் பரிமாற்ற உடன்படிக்கை ஒரு தற்காலிக போர் நிறுத்தமாகவே அமையும் என்று கூறி வருகிறார்.

இடம்பெயர்ந்த பலஸ்தீனர்கள் மற்றும் குடியிருப்பாளர்கள் என சுமார் 1 மில்லியன் மக்கள் தங்கி இருப்பதாக குறிப்பிடப்படும் மத்திய காசாவின் டெயிர் அல் பலாஹ்வின் கிழக்கில் இருந்து டாங்கிகள் முன்னேறி வருவதாகவும் அருகாமையில் உள்ள தெற்கு நகரான கான் யூனிஸுடனான நகரின் சில வீதிகள் துண்டிக்கப்பட்டிருப்பதாகவும் குடியிருப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இஸ்ரேலிய டாங்கிகள் கான் யூனிஸின் அல் கராரா மற்றும் ஹமாத் பகுதிகளில் மேற்கை நோக்கி முன்னேறி வரும் நிலையில் மேலும் பல குடும்பங்கள் தமது தற்காலிக முகாம்கள் மற்றும் கூடாரங்களில் இருந்து வெளியேறி வருகின்றனர். சில நேரங்களில் டாங்கிகள் மற்றும் ஆளில்லா விமானங்கள் கடுமையான தாக்குதல்களை நடத்துவதாகவும் குடியிருப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தங்குவதற்கு இடம் அல்லது முகாம்களை கண்டுபிடிக்க தவறிய சிலர் வீதிகளிலும் கடற்கரைகளிலும் உறங்கி வருகின்றனர்.

'கடந்த இரவு ஆளில்லா விமானங்கள் கூடாரங்களை சுட ஆரம்பித்தன, நாம் கீழே படுத்துக்கொண்டோம். சில மணி நேரம் சென்றிருக்கும், டாங்கிகள் நெருங்கி வருவதுபோல் சத்தம் உரக்கக் கேட்டது. எனவே அங்கிருந்து தப்பிச் செல்ல முடிவெடுத்தோம்' என்று கான் யூனிஸில் இருந்து 48 வயதான அல் கலயீனி தொலைபேசி மூலம் ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திடம் தெரிவித்தார்.

'நாம் 48 பேர் கொண்ட ஐந்து குடும்பங்கள் இருக்கிறோம். கடற்கரையை நோக்கி நாம் ஓட்டம் பிடித்தோம். சிலர் வீதிகளிலும் மற்றும் சிலர் கடற்கரை மணலிரும் கூடாரங்கள், போர்வைகள் மற்றும் மெத்தைகள் எதுவும் இன்றி உறங்கிறோம். சிறுவர்கள் மற்றும் பெண்கள் எவ்வளவு பயந்திருப்பார்கள் என்று நினைத்துப்பாருங்கள்' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

காசாவில் பலஸ்தீனர்கள் இடையே போர் நிறுத்தம் பற்றி ஏமாற்றம் அதிகரித்து வருவதாக கலயீனி குறிப்பிட்டார்.

'இந்தப் பேச்சுவார்த்தை கால விரயமானது. நெதன்யாகு தான் செய்வதை தொடர்வதற்கு அவகாசம் வழங்குவதே அவர்களின் நோக்கம். டாங்கிகள் நுழையாத அல்லது குண்டுகள் வெடிக்காத எந்த இடமும் இங்கு இல்லை. எங்கும் இனியும் பாதுகாப்பு இல்லை' என்றார்.

2.3 மில்லியன் மக்கள் தொகையைக் கொண்ட காசாவில் பெரும்பாலான மக்கள் 10 மாதங்களுக்கு முன் போர் ஆரம்பித்தது தொடக்கம் பல தடவைகள் இடம் பெயர்ந்துள்ளனர். பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்ட இடங்களிலும் கூட இஸ்ரேலின் வான் தாக்குதல்கள் மற்றும் உயிரிழப்புகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன.

நேற்றுடன் 321 நாட்களை தொட்ட காசாவில் இஸ்ரேலின் இடைவிடாத தாக்குதல்களில் 40,200க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளனர்.

**மேற்குக் கரையில் மூவர் பலி**

இதேவேளை, காசா போரை ஒட்டி ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையிலும் பதற்றம் நீடிக்கும் நிலையில் துல்கராமில் உள்ள வீடு ஒன்றின் மீது இஸ்ரேல் நேற்று (22) நடத்திய வான் தாக்குதலில் மூன்று பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

துல்கராமில் உள்ள தமது படைப் பிரிவு இஸ்ரேலிய படையுடன் சண்டையிட்டு வருவதாக ஹமாஸ் ஆயுதப் பிரிவான இசதீன் அல் கஸ்ஸாம் படை அறிவித்த நிலையிலேயே இந்தத் தாக்குதல் இடம் பெற்றுள்ளது.

இங்கு கூரைகளில் ஸ்னைப்பர் துப்பாக்கிதாரிகளை நிறுத்தி இருக்கும் இஸ்ரேலிய இராணுவம் அங்குள்ள கட்டடங்களை தகர்க்க புல்டோசர்களையும் அனுப்பியுள்ளது. மேற்குக் கரையின் பல நகரங்கள் மற்றும் சிறு நகரங்களிலும் இஸ்ரேல் சுற்றிவளைப்புகளை நடத்தியதாகவும் பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா குறிப்பிட்டுள்ளது.

காசா போரினால் இஸ்ரேலின் லெபனான் எல்லையிலும் பதற்றம் நீடிக்கிறது. இஸ்ரேலிய போர் விமானங்கள் லெபனானுக்குள் ஊடுருவி தாக்குதல்களை நடத்தியதை அடுத்து லெபனானின் ஹிஸ்புல்லா அமைப்பு ஆக்கிரமிக்கப்பட்ட கோலன் குன்று பகுதியில் ரொக்கெட் குண்டுகளை வீசியது.

கடந்த புதன் இரவு தொடக்கம் இடம்பெற்ற தாக்குதல்களில் பக்கா பள்ளத்தாக்கில் உள்ள ஹிஸ்புல்லாவின் ஆயுதக் களஞ்சிய வசதிகள் இலக்கு வைக்கப்பட்டதாக இஸ்ரேல் இராணுவம் கூறியது. இந்தத் தாக்குதல்களில் ஒருவர் கொல்லப்பட்டு மேலும் 30 பேர் காயமடைந்ததாக லெபனான் சுகாதார அமைச்சு தெரிவித்தது.

இதற்கு பதிலடியாக கோலன் குன்றில் இஸ்ரேலிய இராணுவ நிலைகளை இலக்கு வைத்து ரொக்கெட் தாக்குதலை நடத்தியதாக ஹிஸ்புல்லா தெரிவித்தது. இதில் இரு வீடுகள் தாக்கப்பட்டு ஒருவருக்கு காயம் ஏற்பட்டதாக இஸ்ரேல் நிர்வாகம் தெரிவித்தது.

## ஒட்டுமொத்த குடும்பத்தையும் இழந்த அஷ்ரப் எல் அத்தார்



மத்திய காசாவில் இஸ்ரேல் நடத்திய தாக்குதல் ஒன்றில் ஒரே பிரசவத்தில் பிறந்த நான்கு குழந்தைகள் உட்பட தனது ஆறு குழந்தைகளும் மனைவியும் கொல்லப்பட்டதாக காசாவில் உள்ள தாதி ஒருவர் பி.பி.சி. செய்தி நிறுவனத்திற்கு குறிப்பிட்டுள்ளார்.

'எனது ஒட்டுமொத்த குடும்பமும் ஒரு நொடியில் அழிக்கப்பட்டுவிட்டது' என்றும் ஒன்றுமில்லாம் ஆக்கப்பட்டதாகவும் அஷ்ரப் எல் அத்தார் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை (18) அதிகாலையில் டெயிர் அல் பலாஹ்வில் உள்ள தனது குடும்ப வீட்டின் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக காசாவின் ஐரோப்பிய மருத்துவமனையில் பணியாற்றும் அத்தார் கூறினார். இதில் காயங்களுடன் அவர் உயிர் தப்பியுள்ளார்.

இந்த குறிப்பிட்ட தாக்குதல் பற்றி இஸ்ரேல் கருத்துக் கூறாத போதும், அந்த நகரில் படையினர் செயற்பட்டு வருவதாக தெரிவித்துள்ளது. போராட்டக் குழுவினரை மாத்திரமே இலக்கு வைப்பதாகவும் அது தெரிவித்தது.

இதில் ஆசிரியரான எல் அத்தாரின் மனைவி ஹாலா கத்தப், அவரது 15 வயது ஆண் குழந்தை மற்றும் ஒரு வயது பெண் குழந்தை மற்றும் ஒரே பிரசவத்தில் பிறந்த 10 வயதான நான்கு குழந்தைகளுமே கொல்லப்பட்டுள்ளனர்.

காலை 6 மணிக்கு வேலைக்கு புறப்பட தயாராகிக்கொண்டிருந்த போது அபாய ஒலி கேட்டதோடு திடீரென்று சுயநினைவை இழந்ததாக அந்தத் தாதி குறிப்பிட்டார். நினைவு திரும்பியபோது கடும் வலியை உணர்ந்ததாகவும் தமது வீடு சின்னபின்னமாகி இருந்ததாகவும் குறிப்பிட்டார்.

'எனது குழந்தைகள் மற்றும் மனைவியை கூப்பிட்டபோதும் காலம் கடந்துவிட்டு இருந்தது' என்றார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஓகஸ்ட் மாதம் 23ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

## விவசாயத் திணைக்களம்
### கிழக்கு மாகாணம்

## பெறுகை அறிவித்தல்

இப்பத்திரிகையில் 20.08.2024ந் திகதியன்று விளம்பரப்படுத்தப்பட்ட பெறுகை அறிவித்தலில் குறித்த பெறுகை அறிவித்தலும் உட்சேர்க்கப்படுகின்றது என்பதோடு 20.08.2024ஆம் திகதி விளம்பரப்படுத்தப்பட்ட பெறுகை அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளில் எவ்விதமான மாற்றமில்லை.

| S. No. | Bid No. | Details | Qty | Bid Security Amount (Ts.) | Non Refund able Fee (Rs.) | Bid Security validity Period | Programme |
|---|---|---|---|---|---|---|---|
| 07 | GOSL/EP/25/ PRO/Agri. Equipment/ 2024-06 | Lime Plants | 135,000 Nos | 150,000.00 | 3500.00 | 2024.12.19 | PSDG |

**D.M.S.B. திசாநாயக்க,**
**மாகாணப் பணிப்பாளர்,**
**தலைவர் - திணைக்கள பெறுகைக் குழு,**
**விவசாயத் திணைக்களம், கிழக்கு மாகாணம்,**
**கன்னியா வீதி, வரோதயநகர்,**
**திருகோணமலை.**

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

Trusted Marketplace of Classified Advertisers

Sunday Observer adz it's what you want Classified




For 15 Words Rs. 800/-

* Cost of each additional word Rs. 20/-

077 7 278 948 / 011 2 429 342/ 343 / 011 2 429 383
Fax - 011 2 429 375 - 011 2 429 380 / E-mail - classified@lakehouse.lk

Hand over your Classified Advertisements to Our nearest Branch Office

Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910 / Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291

Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335 / Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Maharagama - TEL : 011 2 828 114 FAX : 011 4 828 114 / Jaffna - TEL : 021 22 25 361 FAX : 021 22 25 361

## கேள்விக்கான அழைப்பு

### மாவட்ட பொது வைத்தியசாலை – மாத்தறை

*மாத்தறை மாவட்ட பொது வைத்தியசாலைக்காக கீழ்க்காணும் பொருட்களை வழங்கக்கூடிய அரசில் பதிவு செய்துள்ள நிறுவனங்களில் இருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.*

இவ் வழங்கலுக்காக சகல கேள்வி விண்ணப்பங்களை கீழ்க்காணுமாறு பெற்றுக் கொள்ளலாம்.

| தொடர் இல. | வழங்கல் பற்றிய விபரம் | தேவைப் படும் அளவு | விண்ணப்ப தாரியின் தகைமைகள் | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் ரூபா. |
|---|---|---|---|---|
| 01 | Type of the 12,000 BTU Air Conditioner | 02 | கம்பனிகள் பதிவு செய்யும் சான்றிதழ் | 2500.00 |
| 02 | Type of the 18,000 BTU Air Conditioner | 09 | | |
| 03 | Type of the 36,000 BTU Air Conditioner | 01 | | |
| 04 | Type of the 48,000 BTU Air Conditioner | 03 | | |

இப் பொருட்களை வழங்கக்கூடிய நிறுவனங்களால் குறித்த கேள்வி விண்ணப்பங்களை பெற்றுக் கொள்வதற்காக மீளளிக்கப்படாத ரூபா 2500.00 விண்ணப்பப்படிவக் கட்டணத்தை மாத்தறை பொது வைத்தியசாலையின் காசாளர் பிரிவிற்கு செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை மற்றும் குறித்த நிறுவனத்தின் பதிவுச் சான்றிதழின் பிரதியை மற்றும் எழுத்து மூல வேண்டுதலை சமர்ப்பித்தல் வேண்டும்.

2. கேள்வி விண்ணப்பங்களை 2024 ஓகஸ்ட் 23 முதல் செப்டெம்பர் 12ம் திகதி வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப.9.00 முதல் பி.ப. 3.00 வரையான காலத்திற்குள் தலைமையகத்தில் பெற்றுக் கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி விண்ணப்பங்கள் 2024 செப்டெம்பர் 13 மு.ப.10.30 வரையான காலத்திற்குள் பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது கையோடு கொண்டுவந்து இவ் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட்டு சமர்ப்பிக்கலாம். அன்றே மு.ப.10.30 இற்கு கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படுவதுடன் அவ் வேளையில் கேள்வி விண்ணப்பதாரிக்கு அல்லது அவர்களது பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

மேலதிக விபரங்களுக்கு தொ.பே. இலக்கம் 041 - 2227820 அல்லது 041 - 2222261 (கிளை 134)ஐ அழைத்துப் பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**மாவட்ட பொது வைத்தியசாலை,**
**மாத்தறை**

## மாவட்ட செயலகம் களுத்துறை

## விலைக்கோரல்களுக்கான அழைப்பு

1. பின்வரும் வேலைக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைக்கேள்விகளை களுத்துறை மாவட்ட செயலகத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் இப்போது அழைக்கின்றார்.

| இல. | வேலையின் விளக்கம் | மதிப்பீடு செய்யப்பட்ட ஆகு செலவு (ரூபா.சதம்) | உத்தேசிக்கப்பட்டுள்ள பூர்த்தி செய்வதற்கான திகதி | தேவைப்படும் CIDA தரம் | தேவைப்படும் கேள்விப் பிணைத் தொகை |
|---|---|---|---|---|---|
| 1. | 2024 ஆம் ஆண்டிற்காக களுத்துறை எத்தனமடல்ல கனிஷ்ட வித்தியாலயத்தில் இரு மாடி வகுப்பறைக் கட்டிட நிர்மாணம் | 32.506 | 31.12.2024 | சி-5 அல்லது சி-4 (கட்டிட நிர்மாணம்) | 500,000 ரூபா |

2. கேள்விக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான கேள்விக்கோரல் நடைமுறை மூலம் நடத்தப்படும்.
3. ஒப்பந்தத்தை கையளிப்பதற்காக எதிர்பார்க்கப்படும் கேள்விதாரர் தகுதிநீக்கம் செய்யப்பட்டவர்களின் பட்டியலில் சேர்க்கப்படாதவர்களாகவும் மேலேயுள்ள அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவாறு செல்லுபடியாகும் தன்மையிலுள்ள CIDA தரத்தை பூர்த்தி செய்தவராகவுமிருத்தல் வேண்டும்.

   ‘‘கேள்விதாரர் 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டமூலத்தின் பிரகாரம், இலங்கை பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் தம்மை பதிவு செய்திருத்தல் வேண்டும். கேள்விக்கோரலுடன் பதிவு செய்தலின் மூலப்பிரதி சான்றிதழானது (பிசிஏ 03) சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பிசிஏ 03 சான்றிதழை சமர்ப்பிக்காத எந்தவொரு கேள்விதாரருக்கும் கொள்முதலானது கையளிக்கப்பட மாட்டாது. ’’
4. ஒப்பந்தத்தை பெறுவதற்கான தகுதிக்கான தகைமைத் தேவைப்பாடுகள்:
   - கடந்த ஐந்து வருடங்களில் இயைபுள்ள தன்மை மற்றும் சிக்கல்தன்மையில் ஆகக் குறைந்தது ஒரு செயற்றிட்ட நிர்மாணத்தில் முதன்மையான ஒப்பந்தக்காரராக பணியாற்றிய அனுபவம்.
   - கடந்த ஐந்து வருடங்களில் நிறைவேற்றப்பட்ட நிர்மாணத்தின் வருடாந்த சராசரி பெறுமதியானது ஆகக் குறைந்தது 60 மில்லியன் இலங்கை ரூபாவாகவிருத்தல்.
   - திரவச் சொத்துக்களின் ஆகக்குறைந்த தொகையானது 15 மில்லியன் இலங்கை ரூபாவிற்கு குறையாமலிருத்தல் வேண்டும்.
   - கேள்விதாரரின் அனுபவம் மற்றும் முன்னைய வேலைப் பதிவை சான்று பகருவதற்கான ஆவணச் சான்றானது கேள்விக்கோரலுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர் மேலதிக தகவலை 0342236288 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக களுத்துறை, மாவட்ட செயலக, பொறியியல் பிரிவிலிருந்து பெற்று எந்தவொரு வேலை நாட்களிலும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் களுத்துறை, மாவட்ட செயலக, நிதிப்பிரிவில் கேள்விக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
6. 2024.08.23 ஆம் திகதியிலிருந்து 2024.09.12 ஆம் திகதியன்று வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமான பன்னிரண்டாயிரம் ரூபாவை (12,000 ரூபா) களுத்துறை, மாவட்ட செயலக இலங்கை வங்கி களுத்துறை கிளையின் 7041751 என்ற கணக்கிலக்கத்திற்கு வரவு வைக்கப்பட்ட பின்னர் களுத்துறை மாவட்ட செயலக மாவட்ட செயலாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள கேள்விக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள கேள்விதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். வங்கி வரவுத்துண்டின் மூலப்பிரதியானது விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
7. முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விக்கோரல்கள் இரு பிரதிகளில் 2024.09.13 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் நிதிப்பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உட்சேர்க்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, மாவட்ட செயலகம், களுத்துறை என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். அதன் பின்னர், கேள்விக்கோரல்கள் நிதிப்பிரிவின் சபை அறையில் சமுகமளித்திருக்கும் கேள்விதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் உடனடியாகவே திறக்கப்படும்.
8. கேள்விக்கோரல்கள் 2024.09.13 ஆம் திகதியிலிருந்து 91 நாட்கள் காலப்பகுதிக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
9. 2024.09.13 ஆம் திகதியிலிருந்து 120 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருப்பதும் நிபந்தனையற்ற மற்றும் கோரும்போது பெற்றுக் கொள்ளும் பிணையின் வடிவமைப்பில் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கியொன்றிலிருந்து பெறப்பட்டதும் ஐந்து இலட்சம் இலங்கை ரூபா (500,000 இ.ரூபா) பெறுமதியான கேள்விப் பிணையொன்றுடன் அனைத்து கேள்விக்கோரல்களும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். கேள்விப் பிணையின் பயனாளியானவர் களுத்துறை, மாவட்ட செயலக, மாவட்ட செயலாளராவார்.
10. 2024.09.02 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு மேற்குறிப்பிட்டுள்ள வேலைகளுக்காக களுத்துறை, மாவட்ட செயலக மாவட்ட பொறியியலாளரின் அறையில் கேள்விக்கோரல் முன்கூட்டமொன்று நடைபெறும்.

**G M Janaka K Gunawardhena,**
**தலைவர், கொள்வனவுக் குழு,**
**மாவட்ட செயலாளர்,**
**மாவட்ட செயலகம்,**
**களுத்துறை.**

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
### உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டம்
### PROJECT ID: P 163305
### கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு
### இயந்திரங்களின் வழங்கல்

1. உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டத்தின் செலவை நோக்கி உலக வங்கியிடம் இருந்து இலங்கை சனநாயக சோசலிச குடியரசுக்கு கடன் நிதி ஒன்று கிடைக்கப்பெற்றிருப்பதோடு கீழுள்ள அட்டவணையில் உள்ள பின்வரும் வேலைகளுக்கான கொடுப்பனவுகளுக்கு இந்தக் கடனின் பகுதியை செயற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. கீழுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள வேலைகளுக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து குறித்த உள்ளூர் நிர்வாகங்களின் சார்பில் உள்ளூர் நிர்வாகப் பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
3. தேசிய போட்டிரீதியான விலைமனு (NCB) நடைமுறை மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.
4. ஒப்பந்தம் வழங்கப்படுவதற்கான தகுதியை பெறுவதற்கு வெற்றிகரமான விலைமனுதாரர்கள் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் இலங்கையில் வர்த்தகப் பதிவை பெற்றவராகவும் இருத்தல் வேண்டும்.
5. தகைமை தேவைகள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளதோடு விலைமனு ஆவணத்தில் உள்ளது,
   a. வழங்குநர் 07/2007 ஆம் இலக்க நிறுவனங்கள் சட்டத்தின் மூலம் இலங்கையில் ஒரு நிறுவனமாக பதிவு செய்திருத்தல் வேண்டும்.
   b. கடந்த ஐந்து ஆண்டுகளில் குறைந்தது ஒரு இதே திறனின் இதனை ஒத்த வழங்கலை மேற்கொள்ளல் வேண்டும்.
   c. ஆர்வமுடைய விலைமனுதாரர் அல்லது உற்பத்தியாளர் குறைந்தது கடந்த ஐந்து ஆண்டு காலத்தில் இந்த ஒப்பந்தத்தின் பொருட்கள் மற்றும் சேவைகளின் பண்பைக் கொண்ட வர்த்தகத்தில் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
6. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மட்டக்களப்பு, கல்லடி, சரவணா வீதி, உள்ளூராட்சி உதவி ஆணையாளர் (தொ.பே. இல. 065 2223512)/ அட்டவணையில் பட்டியலிடப்பட்ட குறித்த உள்ளூராட்சி நிர்வாகங்களின் செயலாளரிடம் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் என்பதோடு எந்த ஒரு வேலை நாட்களிலும் 9.00 மணி தொடக்கம் 16.00 மணி வரை அதே இடத்தில் விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும்.
7. மீளளிக்கப்படாத கட்டணமாக 5,000 ரூபாவை செலுத்தி 2024.08.23 ஆம் திகதி தொடக்கம் 2024.09.13 ஆம் திகதி வரை 9.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை மட்டக்களப்பு, கல்லடி, சரவணா வீதி, உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு/ அட்டவணையில் பட்டியலிடப்பட்ட குறித்த உள்ளூராட்சி செயலாளருக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம். கட்டணம் ரொக்கப்பணத்தில் செலுத்தப்படுதல் வேண்டும். .
8. விலைமனுக்களை 2024.09.13 ஆம் திகதி 15.00 மணி அல்லது அதற்கு முன்னர் உள்ளூராட்சி உதவி ஆணையாளர், சரவணா வீதி, கல்லடி, மட்டக்களப்பு என்ற முகவரிக்கு சமர்ப்பித்தல் வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்கள் அல்லது விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்களை ஏற்கும் நேரம் முடிவுற்ற பின் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும்.
9. விலைமனு செல்லுபடிக் காலம் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.
10. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு 2024.09.04 ஆம் திகதி 10.00 மணிக்கு மட்டக்களப்பு, கல்லடி, சரவணா வீதி, உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் இடம்பெறும். ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் தமது சொந்த செலவில் இந்தக் கூட்டத்தில் பங்கேற்கலாம்.
11. விலைமனுக்கள் அட்டவணையில் தரப்பட்டுள்ள விபரத்தின்படி விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும்.
12. ஒப்பந்தம் வழங்குவதில் மாகாண திட்டப் பெறுகைக் குழுவின் முடிவு இறுதியானதாகும்.
13. ஒப்பந்தம் வழங்குவதற்கு முன்னர் எந்த ஒரு நேரத்திலும் இந்த பெறுகையை ரத்துச் செய்ய அல்லது வாபஸ் பெறும் உரிமை தொழில் வழங்குநர் வசமானது.

**அட்டவணை**

| வ. இல. | உள்ளூர் நிர்வாகத்தின் பெயர் | வேலைகளின் விபரம் மற்றும் விலைமனு இல. | ஒப்பந்தக் காலம் (நாட்காட்டி தினங்கள்) | தேவையான விலைமனு பிணை | | விலைமனு செல்லுபடிக் காலம் |
|---|---|---|---|---|---|---|
| | | | | விலைமனு பிணை தொகை (ரூபா) | செல்லுபடிக் காலம் | |
| 1 | கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபை, ஓட்டமாவடி | விவசாய இயந்திரங்கள் வாடகைப் பிரிவின் விரிவாக்கத்திற்காக இழுவை வண்டிகளின் கொள்வனவு (இழுவை வண்டி - 01) LDSP/EP/BT/KPWPS/2024/BT4/01 | 30 நாட்கள் | 55,000.00 | 2024.12.27 | 2024.11.29 |
| 2 | | திண்மக் கழிவு முகாமைத்துவ நிலையத்தின் மேம்பாட்டுக்கு Gulley Bowser இன் கொள்வனவு (Trailer Mounted Gulley Bowser) LDSP/EP/BT/KPWPS/2024/BT4/02 | 30 நாட்கள் | 32,000.00 | 2024.12.13 | 2024.11.15 |
| 3 | கோறளைப்பற்று பிரதேச சபை, வாழைச்சேனை | உள்ளூர் நிர்வாக சேவையை மேம்படுத்தும் திண்மக் கழிவு முகாமைத்துவத்திற்காக இழுவை வண்டி மற்றும் Trailer இன் கொள்வனவு (Tractor-03nos, Tractor Trailer-03nos LDSP/EP/BT/KPPS/2024/PT3/02 | 30 நாட்கள் | 202,000.00 | 2024.12.27 | 2024.11.29 |
| 4 | | உள்ளூர் நிர்வாக சேவையை மேம்படுத்தும் திண்மக் கழிவு முகாமைத்துவத்திற்காக இழுவை வண்டி மற்றும் Tailor இன் கொள்வனவு LDSP/EP/BT/KPPS/2024/BT4/02 | 30 நாட்கள் | 67,000.00 | 2024.12.27 | 2024.11.29 |

**தலைவர்,**
**மாகாண திட்ட பெறுகைக் குழு,**
**உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டம் (LDSP)**
**உள்ளூராட்சி உதவி ஆணையாளர்**
**சரவணா வீதி, கல்லடி, மட்டக்களப்பு**

2024.08.23

**கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு**

SARP Smallholder Agribusiness & Resilience Project | IFAD Investing in rural people

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB 01)

## கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் கூட்டிணைவுடன் சிறியளவிலான விவசாய வணிகம் மற்றும் மீண்டெழுதல் செயற்றிட்டம் (SARP)

## IFAD Loan No: 2000003227

1. சிறியளவிலான விவசாய வணிகம் மற்றும் மீண்டெழுதல் செயற்றிட்டத்தின் (SARP) செலவை நோக்கி விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்திடம் (IFAD) இருந்து இலங்கை சனநாயக சோஷலிச குடியரசுக்கு கடன் ஒன்று கிடைக்கப்பெற்றிருப்பதோடு, அநுராதபுரம் மாவட்டத்திலுள்ள மதவாச்சி பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் சிறு நீர்ப்பாசன திட்டங்களை புனரமைப்பதற்கான ஒப்பந்தங்களின் கீழான கொடுப்பனவுகளுக்கு இந்த கடனின் பகுதியை பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2. அளவுப் பத்திர அடிப்படையில் ஒவ்வொரு மற்றும் அனைத்து திட்டங்களுக்காகவும் (ஒப்பந்தம்) ஒவ்வொன்றிற்கும் ஒரு விலைமனுவாக இருக்கும் வகையில் 03 சிறிய நீர்ப்பாசன திட்டத்தின் புனரமைப்பை நிறைவேற்றுதல் மற்றும் பூர்த்தி செய்வதற்காக தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து தொழில்வழங்குநரான “கமநல அபிவிருத்தித் திணைக்கள அலுவலகம் (DAD)” (செயற்படுத்துதல்) முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தற்போது கோரப்படுகின்றன. கீழுள்ள அட்டவணையில் விபரங்கள் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன.

| ஒப்பந்த இல. | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (வரிகள் தவிர்த்து) (மில்.) | ஒப்பந்தக் காலம் | தேவையான தரம் மற்றும் துறை | விலைமனு செல்லுபடிக் காலம் | தேவையான விலைமனு பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | விலைமனு பிணை தொகை (ரூபா) | செல்லுபடிக் காலம் |
| SARP/W/ NCB/ DAD/ Anu/ 2024/125 | குடா புளியங்குளம குளத்தின் புனரமைப்பு வேலை | 25.3 | 120 நாட்கள் | C5 மற்றும் அதற்கு மேல் நீர்ப்பாசனம் மற்றும் நில வடிகாலமைப்பு | 2025 ஜனவரி 10ஆம் திகதி வரை | 375,000.00 | 2025 பெப்ரவரி 07ஆம் திகதி வரை |
| SARP/W/ NCB/ DAD/ Anu/ 2024/126 | பூணம மகாவெவ குளத்தின் புனரமைப்பு வேலை | 25.1 | 120 நாட்கள் | C5 மற்றும் அதற்கு மேல் நீர்ப்பாசனம் மற்றும் நில வடிகாலமைப்பு | | 375,000.00 | |
| SARP/W/ NCB/ DAD/ Anu/ 2024/130 | மகா கும்புக்கஹ வெவ குளத்தின் புனரமைப்பு வேலை | 28.5 | 120 நாட்கள் | C5 மற்றும் அதற்கு மேல் நீர்ப்பாசனம் மற்றும் நில வடிகாலமைப்பு | | 420,000.00 | |

3. தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் (NCB) மூலம் விலைக்கோரல் நடத்தப்படும். ஒப்பந்தம் வழங்கப்படுவதற்கான தகுதிக்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் மேற்கூறிய அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தேவையான CIDA பதிவை கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.

| இல. | சிறு நீர்ப்பாசன திட்டத்தின் பெயர் (குளங்கள்) | கடந்த ஐந்து ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட நிர்மாண வேலைகளில் இருக்க வேண்டிய வருடாந்த சராசரி அளவு (மில்லியனில் இ.ரூபா) | கடந்த 5 ஆண்டுகளில் பின்வரும் பெறுமதிகளுக்குக் குறையாத இதற்கு நிகரான தன்மை மற்றும் சிக்கல் தன்மை கொண்ட ஆகக் குறைந்தது ஒரு ஒப்பந்த நிர்மாணத்தின் அனுபவம் (இந்த வேலையில் குறைந்தது 70 வீதம் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்) (மில்லியனில் இ.ரூபா) |
|---|---|---|---|
| 1 | குடா புளியங்குளம குளத்தின் புனரமைப்பு வேலை | 38 மில். | 26 மில். |
| 2 | பூணம மகாவெவ குளத்தின் புனரமைப்பு வேலை | 38 மில். | 26 மில். |
| 3 | மகா கும்புக்கஹ வெவ குளத்தின் புனரமைப்பு வேலை | 43 மில். | 29 மில். |

4. ஒப்பந்தத்திற்கான தகுதிக்கு தேவையான தகைமைகள் பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ளது.

| (ஒரு திட்டம்/ குளத்திற்கு) அவசியமான குறைந்தபட்ச உபகரணங்களை (சொந்தமானது, குத்தகை, வாடகை போன்றன) சரியான நேரத்தில் கையகப்படுத்துவதற்கான முன்மொழிவுகள் | அகழ்வு இயந்திரம் - 3, டிப்பர் - 2, இழுவை பெட்டிகளுடனான உழவு இயந்திரம் – 5, கொங்கிறீட் கலவை இயந்திரம் - 1 - Poker Vibrator 1 – 6 தொன்னுக்கு குறையாத Vibrating compactor - 1, தண்ணீர் பௌசர் - 2, D4E அல்லது அதற்கு மேல் டோசர் - 1 |
|---|---|
| (ஒரு திட்டம்/ குளத்திற்கு) தேவையான குறைந்தபட்ச ஆளணியினர் | 1. நீர்ப்பாசனத் துறையில் ஆகக் குறைந்தது 3 ஆண்டுகள் அனுபவத்துடன் BSc பொறி. பட்டம் அல்லது அதற்கு இணையான தகைமையை பெற்ற தகுதிவாய்ந்த வேலைத்தள பொறியியலாளர்.<br>2. நீர்ப்பாசனத் துறையுடன் ஏழு ஆண்டுகள் அனுபவத் தகைமையுடன் NCT அல்லது இரண்டு ஆண்டுகளுடன் NDT அல்லது அதற்கு இணையான தகைமையைக் கொண்ட தொழில்நுட்ப அதிகாரி.<br>3. நீர்ப்பாசன துறையில் ஆகக் குறைந்தது 5 ஆண்டுகள் வேலை அனுபவத்துடன் ஒரு வேலை மேற்பார்வையாளர் |

5. VAT இற்கு தகுதி பெற்ற விலைமனுதாரர்கள் விலைமனு ஆவணத்துடன் செயற்பாட்டில் உள்ள VAT பதிவு சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்.

6. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் அநுராதபுரம் கமநல அபிவிருத்தித் திணைக்களத்திலிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். (தொ.பே. 025-2222422, தொலைநகல் - 025-2053550) மற்றும் எந்த ஒரு வேலை நாளிலும் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 4.00 வரை அதே இடத்தில் விலைமனு ஆவணங்களை பரீட்சித்துப் பார்க்கலாம்.

7. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத கட்டணமாக 3,500.00 ரூபாவை செலுத்தியதன் பின் 2024 ஆகஸ்ட் 23ஆம் திகதி முதல் 2024 செப்டெம்பர் 12ஆம் திகதி வரை மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 02.30 வரை அநுராதபுரம், கமநல அபிவிருத்தித் திணைக்கள, பிரதி ஆணையாளருக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனு ஆவணங்களின் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவு முறை ரொக்கப்பணமாக இருத்தல் வேண்டும்.

8. விலைமனுக்களை 2024 செப்டெம்பர் 13ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன்னர் தலைவர், மாவட்ட பெறுகைக் குழு, கமநல அபிவிருத்தித் திணைக்களம், அநுராதபுரம் எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது நேரடியாக கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் வேலையின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கத்தை குறிப்பிடுதல் வேண்டும். விலைமனுவின் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகளை வெவ்வேறான கடித உறைகளில் இட்டுச் சமர்ப்பித்தல் வேண்டும். இலத்திரனியல் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதை கருத்தில் கொள்ளவும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். பங்குபற்ற விரும்பும் விலைமனுதாரர்கள் அல்லது விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்களை ஏற்றுக்கொள்வது முடிவுற்ற பின் அவை உடன் திறக்கப்படும்.

9. அனைத்து விலைமனுக்களுடனும் 9ஆம் பிரிவில் உள்ளடக்கப்பட்ட விலைமனு பிணை முறியின் வடிவத்தில் விலைக்கோரல் பிணை முறி ஒன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். மேற்கூறிய அட்டவணையில் தரப்பட்ட தகவல்களின் பிரகாரம் தொகை மற்றும் செல்லுபடிக் காலத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

10. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2024 செப்டெம்பர் 02ஆம் திகதி அநுராதபுரம், கொடகே மாவத்தை, கமநல அபிவிருத்தித் திணைக்களத்தில் இடம்பெறும். இதில் பங்கேற்பது கட்டாயம் இல்லாதபோதிலும், விலைமனுதாரர்கள் இதில் பங்கேற்பதற்கு ஊக்குவிக்கப்படுவதோடு, விலைக்கோரல் முன்னோடிக் கூட்டத்திற்கு முன்னர் விலைமனுதாரர்கள் வேலைத்தள விஜயமொன்றை சொந்தமாக ஏற்பாடு செய்தல் வேண்டும்.

**தலைவர்,**
**மாவட்டப் பெறுகைக் குழு,**
**கமநல அபிவிருத்தித் திணைக்களம்,**
**அநுராதபுரம்.**

---

# பெறுகை அறிவித்தல்

## கொட்டிகாவத்த முல்லேரியாவ பிரதேச சபை

01. கொட்டிகாவத்த முல்லேரியாவ பிரதேச சபையின் பெறுகைக் குழுவினால் கீழ்க்காணும் செயற்றிட்டத்தை நிறைவேற்றிக்கொள்வதற்காக நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் (CIDA) பதிவு செய்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பத்திரிகை அறிவித்தலில் பிரசுரமான தினம் முதல் கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரங்கள் விநியோகிக்கும் இறுதித் திகதி : 2024.09.05ம் திகதி பி.ப. 3.00
கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி : 2024.09.06ம் திகதி மு.ப. 10.00
கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும் திகதி மற்றும் நேரம் : ஏற்றுக் கொண்டு முடிவடைந்தவுடன்

| தொடர் இல. | வேலை விபரம் | மதிப்பிடப்பட்ட தொகை ரூ. | CIDA பதிவு வகுதி |
|---|---|---|---|
| 01 | கொலன்னாவ பிரதேச செயலகப் பிரிவில் 513டீ, போபெத்த கிராம அதிகாரிப் பிரிவில் ‘தககிஷி’ முன் பள்ளியுடன் இணைந்த பகல்நேர சிறுவர் பராமரிப்பு நிலையத்தை புதுப்பித்தல் N 248183122534 | 9,519,569.82 | C-6 அல்லது C-7 |

2. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாத தகைமையான கேள்விதாரர்களுக்கு காசாக மீளளிக்கப்படாத ரூ. 3500/- கட்டணத்தைச் செலுத்தி முழுமையான ஒரு கேள்வி கோரல் பத்திரத்தை செயலாளர், கொட்டிகாவத்த முல்லேரியாவ பிரதேச சபை, கொத்தட்டுவ புதிய நகரம் என்ற முகவரிக்கு வியாபார கடிதத் தலைப்பில் எழுதப்பட்ட விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து 2024.09.05 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரையான காலத்திற்குள் பெற்றுக் கொள்ளலாம்.
3. பிரதேச சபையின் தலைமையகத்திற்கு வாரத்தின் வேலை நாட்களில் சாதாரண அலுவலக நேரம் (மு.ப. 9.00 - பி.ப. 3.00) இற்குள் வருகைதந்து கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிப்பதற்கு முடியும். அத்துடன் மேலதிக விபரங்கள் அல்லது தெளிவுபடுத்தல்களுக்காக வேலை அதிகாரி தொ.பே. இல. 011-2410288 ஊடாக தொடர்பு கொண்டு அல்லது இணையதள முகவரி kmpsdev@gmail.com மூலம் பெற்றுக் கொள்ளலாம்.
4. பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்பத்திரங்களை சமர்ப்பிக்கும்போது ரூ. 95,000.00 பெறுமதியுடைய நிபந்தனையற்ற வேண்டுதலின் பேரில் செலுத்தப்படும் கேள்விப் பிணையொன்றை செயலாளர், கொட்டிகாவத்த, முல்லேரியாவ பிரதேச சபையின் பெயருக்கு வழங்கப்பட வேண்டியதுடன் அதனை காசாக அல்லது இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கியின் மூலம் விநியோகிக்கப்படும் வங்கிப் பிணைமுறியாக இருத்தல் வேண்டும். வங்கிப் பிணை முறி கேள்வி திறக்கப்படும் தினம் முதல் 2024.09.30 வரை செல்லுபடியாதல்.
5. முறையாக பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்களை உறையில் இட்டு அவ் உறையின் இடது பக்க மேல் மூலையில் கொலன்னாவ பிரதேச செயலக பிரிவின் 513டீ போபெத்த கிராம அதிகாரி எல்லையில் தககிஷி முன்பள்ளியுடன் இணைந்த பகல்நேர சிறுவர் பராமரிப்பு நிலையத்தைப் புதுப்பித்தல் என்று பெயர் குறிப்பிட்டு 2024.09.06 மு.ப. 10.00 இற்கு அல்லது அதற்கு முன்பு சபையின் தலைமையகத்தின் செயலாளர் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் வைப்புச் செய்யலாம். தாமதமாகக் கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படாமலேயே நிராகரிக்கப்படும். கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு முடிவடைந்தவுடன் கொட்டிகாவத்த முல்லேரியாவ பிரதேச சபையின் தலைமையகத்தின் கூட்ட மண்டபத்தில் கேள்விதாரர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் கேள்விகள் திறக்கப்படும்.
6. கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் வேளையில் உங்களுக்கு அல்லது உங்களால் பெயர் குறிப்பிடப்படும் உங்கள் நிறுவனத்தின் பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.
7. பூர்த்தியற்ற மற்றும் தாமதமாகக் கிடைக்கும் கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படுவதுடன் கேள்விகளை ஏற்றுக் கொள்ளல் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் கொட்டிகாவத்த முல்லேரியாவ பிரதேச சபை பெறுகைக் குழுவிற்கு உரியது.
8. செயற்றிட்டத்திற்கான ஒப்பந்த காலம் உடன்படிக்கைக்கு உட்படும் தினம் முதல் 03 மாத காலமாகும். அத்தினத்திற்கு அல்லது அத்தினத்திற்கு முன்பு வேலை முடித்து ஒப்படைத்தல் வேண்டும்.
9. இவ் அறிவித்தல் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழி விளம்பரங்களில் ஏதேனும் தொடர்பற்ற தன்மையொன்று ஏற்படின் சிங்கள மொழி விளம்பரத்தின் பிரகாரம் செயற்படுதல் வேண்டும்.

**செயலாளர் மற்றும் அதிகார செயற்பாடுகளை அமுல்படுத்தும் அதிகாரி**
**கொட்டிகாவத்த முல்லேரியாவ பிரதேச சபை,**
**கொத்தட்டுவ புதிய நகரம்.**
2024.08.23

---

## පළාත් ක්‍රීඩා දෙපාර්තමේන්තුව - උතුරු මැද පළාත

**விளையாட்டுத் திணைக்களம் - வட மத்திய மாகாணம்**
DEPARTENT OF SPORTS - NORHT CENTRAL PROVINCE

# கேள்வி அழைப்பு - பெறுகை அறிவித்தல்

வட மத்திய மாகாண விளையாட்டுத் திணைக்களம் சார்பாக 2024ம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்ட மாகாண ஒதுக்கப்பட்ட அபிவிருத்தி வழங்கல் (PSDG) மற்றும் மாகாண சபை அபிவிருத்தி வழங்கல் (PCDG) செலவு விடயத்துடன் சம்பந்தப்பட்ட செயற்றிட்டத்தின் கீழ் விளையாட்டுப் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக 2024 செப்டம்பர் 12 பி.ப. 2.00 வரை கீழ்க் காணுமாறு விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**அட்டவணை**

| தொடர் இல. | ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்தத்தின் பெயர் | கேள்விப் பிணையின் பெறுமதி ரூ. |
|---|---|---|---|
| 01 | NCP/DS/PD/E04/Ann.Need/ Procurement-Sports Clubs | பதிவு செய்யப்பட்ட விளையாட்டு சமாஜங்களுக்கான விளையாட்டு உபகரணங்களை கொள்வனவு செய்தல் (அனுராதபுரம் மற்றும் பொலன்னறுவை) | 110,000.00 |
| 02 | NCP/DS/PD/E04/Ann.Need/ Procurement-traing Units | பிரதேச பயிற்சி நிலையம் மற்றும் பயிற்சிப் போட்டிக்காக விளையாட்டு உபகரணங்களை கொள்வனவு செய்தல் (அனுராதபுரம் மற்றும் பொலன்னறுவை) | 52,000.00 |
| 03 | NCP/DS/PD/E04/Ann.Need/ Procurement-karathe & weight Game | பாரம் தூக்கும் விளையாட்டுக்காக உபகரணங்களை கொள்வனவு செய்தல் (அனுராதபுரம் மற்றும் பொலன்னறுவை) விளையாட்டுத் திணைக்களத்தின் கராட்டி பயிற்சி நிலையத்திற்கு உபரகணங்களை கொள்வனவு செய்தல் | 30,000.00 |

02. இக் கேள்வி கோரல் தேசிய போட்டி கேள்வி கோரல் மூலம் மேற்கொள்ளப்படும்.
03. இப் பெறுகையுடன் சம்பந்தப்பட்ட கேள்வி அழைப்பு, கேள்வி நிபந்தனைகள் மற்றும் கேள்வி மாதிரி கேள்விதாரர்களுக்கான அறிவுறுத்தல்கள், விளையாட்டு உபகரண விபரங்கள் மற்றும் குறித்த வேறு விபரங்கள் அடங்கிய கேள்வி கோரல் ஆவணங்களை மீளளிக்கப்படாத ரூ. 1500/- தொகையை கீழ்க்காணும் முகவரியில் அமைந்துள்ள மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் கணக்குப் பிரிவிற்குச் செலுத்தி 2024.08.26 முதல் 2024.09.11 வரை அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை பெற்றுக் கொள்ள முடிவதுடன் கேள்விதாரர்களுக்கான அறிவுறுத்தல் பத்திரம் மற்றும் கேள்வி மாதிரிப் பத்திரங்களை அலுவலக நேரங்களில் மாகாண விளையாட்டுத் திணைக்களம் அநுராதபுரம் என்ற முகவரியில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கும் வாய்ப்பு உண்டு.
04. 2024ம் ஆண்டிற்கு குறித்த விளையாட்டுப் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியெனக் குறிப்பிட்டு மீண்டும் அவ் உறைகள் இரண்டையும் ஒரு உறையில் இட்டு கீழேயுள்ள அட்டவணை இல. 01இல் குறிப்பிடப்படுமாறு விலைமனுக்களைச் சமர்ப்பிக்கின்ற ஒப்பந்தத்துடன் சம்பந்தப்பட்ட இலக்கத்தை கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிட்டு (ஒப்பந்தம் 03 இற்காக வேறு வேறாக விலைமனுக்களை சமர்ப்பித்தல் வேண்டும்) பதிவுத் தபாலில் மாகாண விளையாட்டுப் பணிப்பாளர் மாகாண விளையாட்டுத் திணைக்களம் வட மத்திய மாகாணம், அநுராதபுரம் என்ற முகவரிக்கு 2024.09.12 பி.ப. 2.00 இற்கு அல்லது அதற்கு முன்பு கிடைக்குமாறு அனுப்புதல் வேண்டும். அவ்வாறு இல்லையெனில் மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் மாகாண விளையாட்டுப் பணிப்பாளரின் உத்தியோக பூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். குறித்த நேரத்தின் பின்னர் கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.
5. சலக கேள்வியுடனும் மேற்படி அட்டவணை இல. 01 இன் பிரகாரம் ஒப்பந்தத்துடன் சம்பந்தப்பட்ட முன்னால் தரப்பட்டுள்ள கேள்விப் பிணையை மாகாண விளையாட்டுப் பணிப்பாளரின் பெயரில் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியில் இருந்து பெற்றுக் கொண்டு தரவுப் பத்திரத்தில் தரப்பட்டுள்ள தினம் வரை செல்லுபடியாகுமாறு சமர்ப்பித்தல் வேண்டும். இல்லையெனில் காசாக மாகாண விளையாட்டுத் திணைக்களத்திற்கு வைப்புச்செய்யலாம்.
   I. கேள்வி கோரல் ஆவணங்களின் தீர்மானிக்கப்பட்ட செல்லுபடிக் காலம் 77 நாட்களாக இருத்தல் வேண்டும.
   II. கேள்விப் பிணைப் பொருட்கள் ஒப்படைக்க வேண்டிய இறுதித் திகதி முதல் 42 நாட்கள் வரை செல்லுபடியாகும்.
06. 2024.09.12 பி.ப. 2.00 இற்கு கேள்விகள் மூடப்பட்ட பின்பு அன்றே பி.ப. 2.00 இற்கு கேள்விகள் திறக்கப்படும். கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் வேளையில் கேள்விதாரர்களுக்கு அல்லது அவர்களது பிரதிநிதிகளுக்கு அதற்காக சமுகமளிக்கலாம்.

மேலதிக விபரங்களை வடமத்திய மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் தொ.பே. இல. 025-4928392/4928391 அல்லதுர் பெக்ஸ் இல. 025-2234473 மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

**டபிள்யூ. எம். ருவன் விஜேசிங்ஹ,**
**மாகாண விளையாட்டுப் பணிப்பாளர்,**
**மாகாண விளையாட்டுத் திணைக்களம்,**
**வட மத்திய மாகாணம், அநுராதபுரம்.**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## வடமேல் மாகாண சபை

## மாகாண கல்வித் திணைக்களம்

கல்வித் திணைக்களத்தால் நிதி அளிக்கப்பட்ட அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறு நிர்மாணம், சீரமைப்பு மற்றும் புனரமைப்புக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து மாகாண கல்வித் திணைக்களத்தின் சார்பில் (வட மேல் மாகாணம்) திணைக்கள பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| வரிசை இலக்கம் | விலைமனு குறியீட்டு இல. | ஒப்பந்தத்தின் தலைப்பு | பிரதேச பொறியியலாளர் அலுவலகம் | நிதி மூலம் | தேவையான CIDA தரம் (கட்டிடம்) | ஒப்பந்தக் காலம் (நாட்கள்) | விலைமனு பிணை தொகை (ரூபா) (ரொக்கப்பண வைப்பு ஏற்கப்படாது) | விலைமனு செல்லுபடி காலம் | மீளளிக்கப்படாத கேள்வி கட்டணம் (ரூபா) | விலைமனு பிணை பெறுமதிக் காலம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01. | 24/E/Wen/ BG/ NCB/R28 | நாரவில ஸ்ரீ-குணரத்ன ம.ம.வி. இல் 240x20 ஆரம்ப வகுப்பு அறைக் கட்டிடத்தின் சீரமைப்புப் பணிகள் | வென்னப்புவ | BG | C7 அல்லது C6 மாத்திரம் | 105 | 79,000/- | 2024.11.29 வரை | 3000/- | 2024.12.27 வரை |
| 02. | 24/E/Ride/ BG/ NCB/R29 | பலவத்தல மா.பா. இல் ஆசிரியர் தங்குவிடுதியை வகுப்பறை ஒன்றாக மாற்றுவதுடன் 70x20 கட்டிடக் கூரையை சீரமைத்தல் | ரிதிகம | BG | C8 அல்லது C7 மாத்திரம் | 90 | 31,000/- | 2024.11.15 வரை | 1500/- | 2024.12.13 வரை |
| 03 | 24/E/Putt/ REC/ NCB/R30 | ஆனமடுவ கோட்ட கல்வி காரியாலயத்தின் புனரமைப்பு | புத்தளம் | BG | C7 அல்லது C6 மாத்திரம் | 105 | 56,000/- | 2024.11.29 வரை | 2000/- | 2024.12.27 வரை |
| 04. | 24/E/Putt/ REC/ NCB/R31 | திவுல்வெவ க.வி. இல் 80x20 கட்டிடத்தின் சீரமைப்பு | புத்தளம் | BG | C8 அல்லது C7 மாத்திரம் | 75 | 26,000/- | 2024.11.15 வரை | 1500/- | 2024.12.13 வரை |
| 05. | 24/E/Ride/ BG/ NCB/R32 | ரம்படகல்ல ம.ம.வி. இல் 80x20 பழைய பண்டைய கூரையை சீரமைத்தல் மற்றும் மின்சார அமைப்பை சீரமைத்தல் | ரிதிகம | BG | C8 அல்லது C7 மாத்திரம் | 90 | 43,000/- | 2024.11.15 வரை | 2000/- | 2024.12.13 வரை |
| 06. | 24/E/Wari/ BG/ NCB/R33 | தேவமெதிகுடாவெவ மா.பா. இல் 100x20 வகுப்பறை கட்டிடத்தின் சீரமைப்பு | வாரியபொல | BG | C8 அல்லது C7 மாத்திரம் | 75 | 28,000/- | 2024.11.15 வரை | 1500/- | 2024.12.13 வரை |
| 07. | 24/E/Kuli/ BG/ NCB/R34 | கும்புக்கஹமுல்ல ம.ம.வி. இல் 100x20 வகுப்பறை கட்டிடத்தின் சீரமைப்பு | குளியாப்பிட்டிய | BG | C6 அல்லது C57 மாத்திரம் | 105 | 101,000/- | 2024.11.29 வரை | 5000/- | 2024.12.27 வரை |
| 08. | 24/E/Putt/ GEM P/NCB/R19 | புத்தளம் - ஆலங்குடா ம.வி. இல் கணக்கு அப்பியாச அறையின் புனரமைப்பு | புத்தளம் | GEMP | C8 அல்லது C7 மாத்திரம் | 90 | 32,000/- | 2024.11.15 வரை | 1500/- | 2024.12.13 வரை |
| 09. | 24/E/Kuli/ GEM P/NCB/R7 | கிரியுல்ல - கெகுணகொல்ல தே.பா. இல் ஆங்கில அப்பியாச அறையின் புனரமைப்பு | குளியாப்பிட்டிய | GEMP | C8 அல்லது C7 மாத்திரம் | 90 | 44,000/- | 2024.11.15 வரை | 2000/- | 2024.12.13 வரை |

2. ஒப்பந்தம் வழங்குவதற்கான தகுதிக்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் தேவையான நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை (CIDA) பதிவை பெற்றவராகவும் இருத்தல் வேண்டும்.
3. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் குருநாகல், மாகாண சபை அலுவலக வளாகம், 2ஆவது மாடி, மாகாண பொறியியலாளர் திணைக்கள (NWP) பணிப்பாளரிடம் இருந்து மேலதிக தொழில்நுட்ப விபரங்களை பெறலாம். தொ./ தொலைநகல் 037-2222700
4. 2024 செப்டெம்பர் 12 ஆம் திகதி வரை வேலை நாட்களில் 9.00 மணி தொடக்கம் 15.30 வரை குருநாகல், கண்டி வீதி, மாகாண கல்வித் திணைக்கள, பணிப்பாளருக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து மாகாண கல்வித் திணைக்களத்தின் கணக்குப் பிரிவில் இருந்து ஆர்வமுடைய விலைமனுதாரர்களால் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை வாங்கலாம்.
5. விலைமனுக்களை 2024 செப்டெம்பர் 13 ஆம் திகதி 10.00 மணி அல்லது அதற்கு முன்னர் கீழ் தரப்பட்டுள்ள முகவரிக்கு இரு பிரதிகளில் பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது குருநாகல், கண்டி வீதி, மாகாண கல்வித் திணைக்களத்தில் (NWP) தலைமை கணக்காளர் அலுவலகத்தில் இந்த நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள "விலைக்கேட்புப் பெட்டியில்" இடுதல் வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். 2024 செப்டெம்பர் 13 ஆம் திகதி 10.00 மணிக்கு மேற்குறிப்பிடப்பட்ட முகவரியில் நேரடியாக பங்கேற்பதற்கு விரும்பும் விலைமனுதாரர் அல்லது அவர்தம் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்களை ஏற்கும் நேரம் முடிவுற்ற பின் அவை உடன் திறக்கப்படும்.
6. தேசிய போட்டிரீதியான விலைமனு (NCB) மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும். இந்தப் பெறுகையின் மதிப்பிடப்பட்ட மொத்த செலவு 50 மில். ரூபாவுக்கு கீழ் இருக்கும் வரை 04/2016(iii) ஆம் இலக்க பொது நிதி சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டவாறு பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தர முன்னுரிமை பொருந்தும்.
7. விலைமனுதாரர் 1987 இன் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தத்தின் கீழ் பதிவு செய்திருத்தல் வேண்டும் என்பதோடு 1.24/E/Wen/BG/NCB/R28 2. 24/E/Putt/BG/NCB/R30 3. 24/E/Kuli/BG/NCB/34 என்ற விலைமனு குறியீட்டு இலக்கத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.
8. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு கீழுள்ள 9ஆவது பந்தியில் தரப்பட்டுள்ள முகவரியில் மாகாண கல்வித் திணைக்களத்தில் 2024 செப்டெம்பர் 6ஆம் திகதி இடம்பெறும்.
9. மேல் குறிப்பிடப்பட்ட முகவரியானது

**ஜே.ஏ.எம்.பீ. ஜயதிலக்க**
**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**மாகாண கல்வித் திணைக்களம் (NWP),**
**கண்டி வீதி,**
**குருநாகல்.**

**தொலைபேசி: 037-2222422**
**தொலைநகல் இலக்கம்: 037-2222422/ 037-2222545**
**இணையதள முகவரி: www.nwpedu.lk**
**திகதி: 2024.08.23**

# இலங்கை வங்கி

## ஏல விலைகூறலுக்கான அழைப்பு (IFB)

### இலங்கை வங்கிக்கான விரைவஞ்சல் (கூரியர்) சேவை

### ஏல விலைகூறல் இல.: BOC/PROC/P/2024/267

விரைவஞ்சல் சேவை வழங்குநர்களிடமிருந்து இலங்கை வங்கிக்காக விரைவஞ்சல் சேவைகளுக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் இத்தால் கோரப்படுகின்றன.

**முக்கிய திகதிகள்:**

| | |
|---|---|
| விலைகூறல் ஆவணங்களை வழங்குவதற்கான இறுதித் திகதியும் நேரமும் | 2024.09.18 - 1500 மணிக்கு |
| விலைகூறல் ஆவணங்களை வழங்கும் காலப்பகுதி | 0900 மணியிலிருந்து 1500 மணி வரை வேலை நாட்களில் |
| விலைகூறலுக்கு முன்னதான கூட்டம் | 2024.09.03 1100 மணிக்கு இலங்கை வங்கித் தலைமையகத்தின் 14 ஆம் தளத்திலுள்ள மாநாட்டு அறையில் |
| விலைகூறல் மூடும் திகதியும் நேரமும் | 2024.09.19 1000 மணிக்கு |
| விலைகூறலைத் திறத்தல் | விலைகூறல் முடிவடைந்தவுடன் |

மேலதிக விபரங்களுக்கு விலைக்கூறுவோர், **www.boc.lk** என்ற இலங்கை வங்கியின் வலைத்தளத்தை பார்வையிடவும்.
எவ்விதக் காரணமும் தெரிவிக்காது ஏதேனும் அல்லது அனைத்து விலைகூறல்களையும் நிராகரிப்பதற்கான உரிமையையும் விலைகூறலை அல்லது ஏதேனும் ஒரு பாகத்தினை ஏற்றுக் கொள்வதற்கான உரிமையினையும் இலங்கை வங்கி கொண்டுள்ளது.

**பிரதான முகாமையாளர்,**
**சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி,**
**14 ஆம் தளம், இலங்கை வங்கித் தலைமையகம்,**
**'BOC சதுக்கம்',**
**இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு-1.**
**தொலைபேசி: 094 112544310, 094 11 2204269**
**மின்னஞ்சல்: procurement@boc.lk**

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங்.
இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
பரிந்துரைகள்/கருத்துக்கள்/முறைப்பாடுகளுக்கு - https://www.boc.lk/contact
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

# விலைமனு ஆவணம்

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### வன சீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சு

### தேசிய மிருகக்காட்சிசாலைத் திணைக்களம்

### ரிதியகம சபாரி பூங்காவில் சபாரி ஜீப் சேவையை வழங்குவதற்கு விலைமனு - 2024/2026

### DNZG/A/07/31/24

**ஒப்பந்த இல.: DNZG/A/07/31/24**

1. இரண்டு ஆண்டு காலத்திற்காக சபாரி பூங்காவுக்கு ஜீப் சேவை ஒன்றை வழங்குவதற்கு பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து தேசிய மிருகக்காட்சிசாலைத் திணைக்களம் சார்பில் திணைக்கள பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தற்போது கோரப்படுகின்றன.
2. 
   2.1 வழங்கலுக்கான இடம் - ரிதியகம சபாரி பூங்கா, ருஹுணு ரிதியகம, அம்பலன்தொட்ட
   2.2 வழங்குவதற்கு தேவையான ஜீப்கள்

| சேவையின் வகை | தேவையான ஜீப்களின் எண்ணிக்கை | தேவையான விலைமனு பிணை (ரூபா) |
|---|---|---|
| 06 முன் பக்கம் பார்க்கக்கூடிய மாற்றப்பட்ட Single Cab களை பயன்படுத்துவதன் மூலம் ரிதியகம சபாரி பூங்காவின் சபாரி ஜீப் சேவை | ஆண்டின் ஒவ்வொரு மாதத்திற்கும் 06 ஜீப்கள் | 10,000 |

3. தேசிய போட்டிரீதியான விலைமனு நடைமுறை மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.
4. சேவையை வழங்குவதற்கு சேவை வழங்குநரால் ஒவ்வொரு பயண அடிப்படையில் பயணிகள் மாற்றப்பட வேண்டும் என்பதோடு தேசிய மிருகக்காட்சிசாலைத் திணைக்களத்திற்கு அனுமதிச் சீட்டு விலை ஒன்றின் தொகை செலுத்தப்படுதல் வேண்டும். ருஹுணு ரிதியகம, சபாரி பூங்காவை அனுகுவதற்கு சேவை வழங்குநருக்கு அனுமதி அளிக்கப்படும். வழங்கப்படும் தரநிலை மற்றும் அறிவுறுத்தல்களுக்கு அமைய அம்பலன்தொட்டவில் இருந்து சேவையை வழங்குதல் வேண்டும். விலைமனுதாரர் ஓர் ஆண்டு இதனையொத்த அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும் என்பதோடு ஓட்டுநர் மற்றும் எரிபொருளுடன் இந்த நோக்கத்திற்காக விசேடமாக அமைக்கப்பட்ட அனைத்து சபாரி ஜீப்களையும் வழங்குவதன் மூலம் சேவையை பேணுவதற்கு நிதித் திறனை நிரூபித்தல் வேண்டும்.
5. உச்ச கணிசமான அளவில் பதிலளிக்கும் விலைமனுதாரர்களுக்கு ஒப்பந்தம் வழங்கப்படும்.
6. ஆர்வமுடைய விலைனுதாரர்கள் zoosl@slt.lk என்ற மின்னஞ்சல் மற்றும் 011 2896779, 0112710807 என்ற தொலைபேசி இலக்கங்களில் தெஹிவளை, அனகாரிக்க தர்மபால மாவத்தை, தேசிய மிருகக் காட்சிசாலைத் திணைக்கள, தலைமை கணக்காளரிடம் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் என்பதோடு 2024 ஓகஸ்ட் 23 ஆம் திகதி தொடக்கம் 2024 செப்டெம்பர் 11 ஆம் திகதி வரை மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை வேலை நாட்களில் கீழ் தரப்பட்ட முகவரியில் கட்டணம் இன்றி விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும்.
7. மீளளிக்கப்படாத கட்டணமாக இரண்டாயிரம் ரூபாவை (ரூபா 2,000/-) செலுத்தி கீழ் தரப்பட்டுள்ள முகவரிக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்களினால் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை வாங்கலாம். கட்டணம் ரொக்கப்பணத்தில் இருத்தல் வேண்டும்.
8. விலைமனுக்கள் 2024 ஜனவரி 10 ஆம் திகதி வரை செல்லுபடியான இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு செய்யப்பட்ட வர்த்தக வங்கி ஒன்றினால் வழங்கப்பட்ட அல்லது தேசிய மிருகக் காட்சிசாலைத் திணைக்களத்தின் பெயரில் சிறாப்பர் தலைமை அலுவலகத்தில் வைப்புச்செய்யப்பட்ட 10,000/- ரூபா பெறுமதிக்கு விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும்.
9. முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2024 செப்டெம்பர் 12 ஆம் திகதி மு.ப. 10.30 அல்லது அதற்கு முன்னர் கீழுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது அதே அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியில் இடுதல் வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். 2024 செப்டெம்பர் 12 ஆம் திகதி மு.ப. 10.30 இற்கு கீழுள்ள முகவரியில் நேரடியாக பங்கேற்பதற்கு விரும்பும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்களை ஏற்கும் நேரம் முடிவுற்ற பின் விலைமனுக்கள் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும்.
10. திணைக்கள பெறுகைக் குழுவின் முடிவு இறுதி முடிவாகும்.

**தலைவர்**
**திணைக்கள பெறுகைக் குழு**
**தேசிய மிருகக் காட்சிசாலைத் திணைக்களம்**
**அனகாரிக்க தர்மபால மாவத்தை, தெஹிவளை**

To Buy Your Dream Vehicle within your Budget
If it is a vehicle you want,
YOU NAME IT,
WE HAVE IT
Sunday Observer adz Auto Focus

Sunday Observer adz it's what you want

- Vehicle Rent / Wanted
- Auto Focus
adz Magazine Issued with Sunday Observer
THE ONLY PLACE TO BUY YOUR DREAM CAR!
- Photo Classifieds
Hot Line - 011 2 429 369/ 011 2 429 368
E-mail - adzsuo@gmail.com

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

# பெறுகை அறிவித்தல்..!

## மாகாண திறைசேரி, வடமத்திய மாகாணம்

## கணனி மற்றும் கணனி துணைப்பாகங்களை வழங்குதல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்துவதற்காக விலைமனு கோரல்

வடமத்திய மாகாண திறைசேரியின் பிரதிப் பிரதான செயலாளர் (நிதி) மற்றும் பெறுகைக் குழுவின் தலைவராகிய என்னால் வடமத்திய மாகாணத்தில் அமைந்துள்ள பிரதேச செயலகங்களுக்கு விநியோகிப்பதற்காக கணனி மற்றும் கணனி துணைப்பாகங்கள் வழங்குதல், நிறுவுதல் மற்றும் செயற்படவைத்தலின் பொருட்டு தகுதிவாய்ந்த வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தொகுதி இலக்கம் | பொருட்களின் விபரம் | எண்ணிக்கை | விலைக்கோரல் பிணை முறியின் பெறுமதி | விலைக்கோரல் பிணை முறியின் செல்லுபடிக் காலம் |
|---|---|---|---|---|
| 01 | டெஸ்க்டொப் கணனிகள் | 34 | 80,000.00 | 26.12.2024 |
| 02 | UPS 1200VA | 22 | 4,000.00 | 26.12.2024 |
| 03 | UPS 650VA | 34 | 4,000.00 | 26.12.2024 |
| 04 | கணனி மொனிட்டர் | 01 | 1,000.00 | 26.12.2024 |
| 05 | டொட் மெட்றிக்ஸ் அச்சுப்பொறிகள் | 20 | 16,000.00 | 26.12.2024 |
| 06 | லேசர் அச்சுப்பொறிகள் | 26 | 10,000.00 | 26.12.2024 |
| 07 | ஸ்கேனர் | 14 | 5,000.00 | 26.12.2024 |

இது தொடர்பாக ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்கள் 2024-08-23ஆம் திகதி முதல் 2024-09-11ஆம் திகதி வரை அநுராதபுரம் வடமத்திய மாகாண சபைக் கட்டிடத்தின் மூன்றாம் மாடியில் அமைந்துள்ள மாகாண திறைசேரியிலிருந்து வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 09.00 மணி முதல் பி.ப. 03.00 மணி வரையில் இதற்கு இயைபான மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் அந்தக் காலப்பகுதியில் இலவசமாக விலைமனு ஆவணங்களை பரீட்சித்துப் பார்க்கலாம். (தொலைபேசி இல. 0252222446)

ஆர்வம் காட்டும் தரப்பினர் ''பிரதிப் பிரதான செயலாளர் (நிதி), மாகாண திறைசேரி, வடமத்திய மாகாணம்'' அவர்களுக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பித்து மற்றும் மீளளிக்கப்படாத விலைக்கோரல் வைப்பாக 3500.00 ரூபாவைச் செலுத்தியதன் பின் 2024-08-23ஆம் திகதி முதல் 2024-09-11ஆம் திகதி வரையான அலுவலக நாட்களில் மு.ப. 09.00 மணி முதல் பி.ப. 03.00 மணி வரையான காலத்தினுள் மாகாண திறைசேரியிலிருந்து இந்த பெறுகை ஆவணங்களை (ஆங்கில மொழியில்) பெற்றுக்கொள்ளலாம்.

பெறுகை ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைவாக முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென தயாரித்து முத்திரைக் குறி பொறித்து மீண்டும் ஒரு உறையில் இட்டு 2024-09-12ஆம் திகதி பி.ப. 02.30 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் ''தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, மாகாண திறைசேரி வடமத்திய மாகாணம், மாகாண சபைக் கட்டிடம், ஹரிஸ்சந்திர மாவத்தை, அநுராதபுரம்'' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது அந்த இடத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் நேரில் கொண்டுவந்து உள்ளிடலாம்.

2024-09-12ஆம் திகதி பி.ப. 02.30 மணிக்கு விலைமனுக்கள் ஏற்றுக்கொள்வது முடிவுறுத்தப்பட்டவுடன் விலைமனுக்கள் திறக்கப்படும். இந்நிகழ்வில் குறித்த வழங்குநர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம். இந்த பெறுகை தொடர்பில் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவரின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு / பிரதிப் பிரதான செயலாளர் (நிதி),**
**மாகாண திறைசேரி,**
**வடமத்திய மாகாணம்.**
2024-08-23.

# கொள்முதல் அறிவித்தல்

## கடற்றொழில் அமைச்சு
## இலங்கை மீன்பிடித் துறைமுகங்கள் கூட்டுத்தாபனம்

CFHC

## காலி மீன்பிடித் துறைமுகத்தில் முன்மொழியப்பட்ட நீர்த்தொட்டி அமைப்பு கட்டுமானத்திற்காக

**கொள்முதல் இலக்கம் : *CFHC/PD/T/WTR TNK/GALLE/2024-50***

காலி மீன்பிடித் துறைமுகத்தில் முன்மொழியப்பட்ட நீர்த்தொட்டி அமைப்பு கட்டுமானத்திற்காக பொருத்தமான ஒப்பந்ததாரர்களைத் தேர்வுசெய்வதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான விண்ணப்பப்படிவத்தை பெற்றுக்கொள்ள தலைமை அலுவலகத்தின் காசாளரிடம் அல்லது காலி மீன்பிடித் துறைமுகத்தில் **ரூ.2,000.00** (மீள்செலுத்தப்படாத) கட்டணத்தினை செலுத்திய பின்னர் மனு ஆவணங்களை பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புடைய விவரக்குறிப்புகள் பின்வருமாறு.

| தொ / இல. | கொள்முதல் இலக்கம் | மதிப்பீட்டு செலவு மற்றும் காலம் | தேவையான தகுதிகள் | விலைமனு பிணைத்தொகை | மனுக்கள் செல்லுபடியாகும் காலம் | முன்மனுக் கூட்டம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | **CFHC/PD/T/ WTR TNK/ GALLE/ 2024-50** | செலவு **ரூ.07 மில்லியனாகும்** (வரி மற்றும் எதிர்பாராத செலவுகளற்ற) ஒப்பந்த காலம் **120 கலன்டர் நாட்கள்.** | 01). C7அல்லது C6 தரத்தில் CIDA பதிவு (விசேடமாக ICTAD கட்டிட கட்டுமானத்தில்) 02). 1987 இலக்கம் 03 ஒப்பந்த சட்டத்தின் கீழ் பொது ஒப்பந்தங்கள் பிரிவு 8 உடன் பொது ஒப்பந்தங்கள் சட்டத்தினால் வழங்கும் சான்றிதழ் பெற்றிருத்தல். **(ரூ.05 மில்லியனுக்கு அதிகமான ஒப்பந்ததிற்காக)** | **பெறுமதி ரூ.85,000.00** இலங்கையினுள் செயற்படுத்தப்படும் ஏற்றுக்கொள்ளப்பட்ட வணிக வங்கியிடம் பெறவேண்டியதுடன் தலைவர், இலங்கை மீன்பிடித் துறைமுகங்கள் கூட்டுத்தாபனம், இல.15, ரொக் ஹவுஸ் ஒழுங்கை, கொழும்பு 15 பெயருக்கு வெளியிட வேண்டும். வழங்கப்பட்டுள்ள மாதிரிக்கமைய செல்லுபடியாகும் காலம் **2024.12.25 வரையாகும்.** பண வைப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்படும். | விலைமனு ஏற்றுக்கொள்ளப் படும் இறுதி திகதியிலிருந்து **2024.11.27** ஆம் திகதி வரை செல்லு படியாகும். | 2024.09.03 மு.ப.10.30 |

இதற்காக ஆர்வம் காட்டும் தகுதிவாய்ந்த வழங்குநர்கள் / முகவர்கள் அல்லது பெயரிடப்பட்ட முகவர்களுக்கு **2024.08.22** ஆம் திகதி முதல் **2024.09.11** ஆம் திகதி வரை **அலுவலக வேலை நாட்களில் மு.ப.9.00 மணி முதல் பி.ப.3.00 வரை** தலைமை அலுவலகத்தின் கொள்முதல் முகாமையாளரிடம் அல்லது காலி மீன்பிடித் துறைமுகத்தில் எழுத்துமூலம் விண்ணப்பபடிவங்களை முன்வைத்த பின் விலை மனுப் பத்திரங்களை பெற்றுக்கொள்ள முடியும்.

மனு ஆவணங்களை தலைமை அலுவலகத்தில் உள்ள கொள்முதல் முகாமையாளரிடம் அல்லது அந்தந்த துறைமுக முகாமையாளரிடம் ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்க முடியும்.

பிரதிகள் இரண்டினை கொண்ட முத்திரையிடப்பட்ட விலை மனு பத்திரங்கள் **2024.09.12 ஆம் திகதி பி.ப.2.00** மணிக்கு முன்னர் **பிரதான அலுவலகத்தில், கொள்முதல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள டென்டர் பெட்டியில் இட வேண்டும்.** தாமதமாக கிடைக்கும் விலை மனுக்கள் நிராகரிக்கப்படும்.

**2024.09.12 ஆம் திகதி பி.ப. 02.00 மணிக்கு கொள்முதல் பிரிவில்** விலை மனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலை மனுக்கள் திறக்கப்படும்.

எந்தவொரு மனு ஆவணத்தையும் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஏற்க அல்லது நிராகரிப்பதற்கான உரிமையை கொள்முதல் குழு கொண்டுள்ளது.

இதற்காக ஆர்வமுள்ள விலை மனுதாரர்கள் **மேலதிக தகவல்களை 011-2529391 / 011-2525063** ஊடாக பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**இலங்கை மீன்பிடித் துறைமுகங்கள் கூட்டுத்தாபனம்,**
**இல- 15, ரொக் ஹவுஸ் ஒழுங்கை,**
**கொழும்பு 15.**

SELACINE

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு
## நீர்ப்பாசன அமைச்சு
## நீர்ப்பாசனத் திணைக்களம்

## மாத்தறை மாவட்டம் - காலி வலயத்தில் உள்ள BR-01 வெள்ள அணைக்கட்டில் உள்ள புவியீர்ப்பு வெளியேற்ற கட்டமைப்பிற்கான டீசல் நீர்ப் பம்பியினைக் கொள்வனவு செய்தல்

## தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல்

01. பின்வரும் வழங்கல்களுக்காக தகுதி மற்றும் தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை நீர்ப்பாசனத் திணைக்களத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கின்றார்.

**அட்டவணை இல. 01**

| விலைக் கோரல் இல. | வழங்கல் விபரங்கள் | எண்ணிக்கை | விலைக்கோரல் செல்லுபடியாக வேண்டிய காலம் | விலைக்கோரல் பிணைமுறித் தொகை (ரூபா) | பிணைமுறி செல்லுபடிக் காலம் |
|---|---|---|---|---|---|
| IFB/ID/GOSL/ NCB/2024/014 | மாத்தறை மாவட்டம் - காலி வலயத்தில் உள்ள BR-01 வெள்ள அணைக்கட்டில் உள்ள புவியீர்ப்பு வெளியேற்ற கட்டமைப்பிற்கான டீசல் நீர்ப்பம்பியினைக் கொள்வனவு செய்தல் | 02 | 2024-12-03 வரை | 300,000.00 | 2024-12-31 வரை |

02. மீளளிக்கப்படாத கட்டணமான 6,000.00 ரூபாவைச் செலுத்தி மற்றும் நிறுவனக் கடிதத் தலைப்பில் (மூலப் பிரதி) எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் செய்வதன் பேரில் கொழும்பு 07, பௌத்தாலோக்க மாவத்தை, 230ஆம் இலக்கத்திலுள்ள நீர்ப்பாசனத் திணைக்களம், 2ஆம் மாடி, அறை இல. 213, நீர்ப்பாசன பணிப்பாளர் (ஒப்பந்தங்கள் மற்றும் பெறுகைகள்) அலுவலகத்திலிருந்து 2024-08-23ஆம் திகதி முதல் 2024-09-13ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரை விலைமனுக்கோரல் ஆவணங்களை கொள்வனவு செய்யலாம்.
03. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் விரும்பினால் விலைமனுக்களைப் பெற்றுக்கொள்ளும் முன் விலைமனுக்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம் என்பதுடன் மேலதிக தகவல்களை நீர்ப்பாசனப் பணிப்பாளரிடமிருந்து (ஒப்பந்தங்கள் மற்றும் பெறுகைகள்) பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி: 011-2582897 / 011-2582677.
04. பின்வரும் வகையில் விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் இடம்பெறும்.

**திகதி: 2024-08-30**

**நேரம்: மு.ப. 11.00**

**இடம்: கொழும்பு-07, நீர்ப்பாசனத் திணைக்களம், 4ஆம் மாடி, குழு அறை**

05. விலைமனுக்கள் 2024-12-03ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும். (விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் நாள் முதல் 77 நாட்களுக்கு) 01ஆம் அட்டவணையில் தரப்பட்டுள்ள பெறுமதிக்கான விலைமனுப் பிணைமுறியொன்று விலைமனுக்களுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அது 2024-12-31ஆம் திகதி வரை (விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் நாள் முதல் 105 நாட்களுக்கு) செல்லுபடியாதல் வேண்டும். ஏதாவது விலைமனு செல்லுபடியாகும் விலைமனுப் பிணை முறி இல்லாமல் இருந்தால் எவ்வித முன்னறிவித்தலுமின்றி பதிலளிக்காதவை எனக் கருதப்பட்டு நிராகரிக்கப்படும்.
06. விலைமனு ஆவணத்தின் சகல பக்கங்களிலும் விலைமனுதாரர் சிற்றொப்பமிட்டு அவரது முத்திரை பொறிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
07. பூரணப்படுத்தப்பட்ட விலைமனுக்களை 2024-09-18ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன்னராகக் கிடைக்கும் வகையில், கொழும்பு-07, பௌத்தாலோக்க மாவத்தை 230ஆம் இலக்க நீர்ப்பாசனத் திணைக்களம், 3ஆம் மாடியிலுள்ள பிரதான நிதியிடல் அலுவலரின் 311ஆம் இலக்க அறையில் இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில், தலைவர், திணைக்கள பெறுகைக்குழு என முகவரியிட்டு மேற்படி முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விலைமனுக்கள் 2024-09-18ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முடிவுறுத்தப்பட்டு அதன் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
08. கடிதஉறையின் இடது பக்க மேல் மூலையில் வேலை விபரம் மற்றும் ஒப்பந்த இலக்கம் என்பவற்றை தயவு செய்து எழுதவும்.
09. சுய விருப்பத்தின் பேரில் சமுகமளிக்கும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

**பொறி. அஜித் குணசேக்கர,**
**நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகம்,**
**நீர்ப்பாசனத் திணைக்களம்,**
**இல. 230, பௌத்தாலோக்க மாவத்தை,**
**கொழும்பு-07**

**2024-08-23ஆம் திகதி.**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு
## நீர்ப்பாசன அமைச்சு
## நீர்ப்பாசனத் திணைக்களம்

## தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல்

01. பின்வரும் வேலைகளுக்காக தகுதி மற்றும் தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை நீர்ப்பாசனத் திணைக்களத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கின்றார்.

**அட்டவணை இல. 01**

| இல. | ஒப்பந்த இலக்கம் | வேலை விபரங்கள் | CIDA தரம் | மதிப்பீட்டுக் கிரயம் வெட் இன்றி (இல. ரூபா மில்லியன்) | நிர்மாணக் காலம் (நாட்கள்) | மீளளிக்கப் படாத கட்டணம் (இல. ரூபா) | விலைக் கோரல் பிணை முறியின் பெறுமதி (இல. ரூபா) |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | ID/HO/CT/ BR-1/NCB/ 2024/03 | மாத்தறை பிரிவு, காலி வலயம், கிரலகெலே திட்டத்தில் BR-1 வெள்ள அணைக்கட்டில் (பிலதுவ) புவியீர்ப்பு வெளியேற்ற கட்டமைப்பை நிர்மாணித்தல் | C4 அல்லது C5 | 39.9 | 280 | 10,000.00 | 600,000.00 |

02. மீளளிக்கப்படாத கட்டணமாக 10,000.00 ரூபாவை செலுத்தியதன் பின் நிறுவனக் கடிதத் தலைப்பில் (மூலப் பிரதி) எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் செய்து கொழும்பு 07, பௌத்தாலோக்க மாவத்தை, 230ஆம் இலக்கத்திலுள்ள நீர்ப்பாசனத் திணைக்களம், 2ஆம் மாடி, 213ஆம் இலக்க அறை, நீர்ப்பாசன பணிப்பாளரிடமிருந்து (ஒப்பந்தங்கள் மற்றும் பெறுகைகள்) 2024-08-23ஆம் திகதி முதல் 2024-09-13ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரை விலைமனுக்கோரல் ஆவணங்களை கொள்வனவு செய்யலாம்.
03. இதில் ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்கள் தேவையானால் விலைக்கோரல் ஆவணங்களைக் கொள்வனவு செய்வதற்கு முன் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம் என்பதுடன் மேலதிக தகவல்களை நீர்ப்பாசனப் பணிப்பாளர் (ஒப்பந்தங்கள் மற்றும் பெறுகைகள்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி: 011-2582897 / 011-2583305
04. பின்வரும் 02ஆம் அட்டவணையில் குறிப்பிட்டவாறு விலைமனுக்கோரல் முன்னோடிக் கூட்டம் மற்றும் வேலைத்தள விஜயம் இடம்பெறும். வளமுள்ள விலைமனுதாரர்கள் பிரதேச நீர்ப்பாசனப் பொறியியலாளர் (மாத்தறை) அவர்களின் உதவியுடன் வேலைத் தளத்தைப் பரீட்சித்துப் பார்க்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**அட்டவணை இல. 02**

| வேலைத் தள விஜயம் ஆரம்பமாகும் இடம் மற்றும் திகதி/நேரம் | விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் இடம்பெறும் இடம் மற்றும் திகதி/நேரம் |
|---|---|
| திகதி: 2024-08-29<br>நேரம்: மு.ப. 10.00 மணி<br>இடம்: பிரதேச நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகம் (மாத்தறை பிரிவு) | திகதி: 2024-08-30<br>நேரம்: மு.ப. 10.00 மணி<br>இடம்: குழு அறை, நீர்ப்பாசனத் திணைக்களம், இல. 230, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு-07. |

05. சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் 2024-12-17ஆம் திகதி வரை (விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 91 நாட்கள் வரை) செல்லுபடியாதல் வேண்டும். மேலும் அத்துடன் 01ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிக்கு 2025-01-14ஆம் திகதி வரை (விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 119 நாட்கள் வரை) செல்லுபடியாகும் விலைக்கோரல் பிணை முறியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறல்லாத விலைமனுக்கள் பதிலளிக்காதவை எனக் கருதப்படும் என்பதுடன் எவ்வித விசாரணையுமின்றி நிராகரிக்கப்படும்.
06. விலைமனு ஆவணத்தின் சகல பக்கங்களிலும் விலைமனுதாரர் சிற்றொப்பமிட்டு அவரது முத்திரை பொறிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
07. பூரணப்படுத்தப்பட்ட விலைமனுக்களை 2024-09-18ஆம் திகதி பி.ப. 02.00 மணிக்கு முன்னராகக் கிடைக்கும் வகையில், ஒன்றில் கொழும்பு-07, பௌத்தாலோக்க மாவத்தை 230ஆம் இலக்க நீர்ப்பாசனத் திணைக்களம், 3ஆம் மாடியிலுள்ள (பிரதான நிதியிடல் அலுவலரின்) 311ஆம் இலக்க அறையில் இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில், மேற்கூறிய முகவரியில் உள்ள பிரதான நிதியியல் அதிகாரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விலைமனுக்கள் 2024-09-18ஆம் திகதி பி.ப. 02.00 மணிக்கு முடிவுறுத்தப்பட்டு அதன் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
08. கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ஒப்பந்த இலக்கம் மற்றும் வேலை விபரங்களை தயவுசெய்து எழுதவும்.
09. சுய விருப்பத்தின் பேரில் சமுகமளிக்கும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் விலைக்கோரலில் பங்குபற்றுவதற்கு தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.
10. திணைக்களப் பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதியானதும் உறுதியானதுமாகும். ஏதேனும் அல்லது ஒரு அல்லது சகல விலைமனுக்களையும் தனது சொந்த விருப்பத்தின் பிரகாரம் நிராகரிக்கும் அதிகாரத்தை பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

**பொறி. அஜித் குணசேக்கர,**
**நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகம்,**
**நீர்ப்பாசனத் திணைக்களம்,**
**இல. 230, பௌத்தாலோக்க மாவத்தை,**
**கொழும்பு-07**

**2024-08-23ஆம் திகதி.**